padippakam

# மக்கள் கவிஞர் 100

## பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம்



நக்கீரன்

சபீதாஜோசப்

படிப்பகம்

padippakam

படிப்பகம்

padippakam

படிப்பகம்

padippakam

படிப்பகம்

padippakam

மக்கள் கவிஞர்

# பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் 100

சபீதாஜோசப்

நக்கீரன் வெளியீடு

படிப்பகம்

மக்கள் கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் 100

□

சபீதாஜோசப்

□

முதல் பதிப்பு : 2010
நூள் அளவு : 14 x 21.5 டெம்மி
பக்கங்கள் : 128
விலை : ரூபாய் **75/-** (ரூபாய் எழுபத்தைந்து மட்டும்)

□

வெளியீடு:
**நக்கீரன் பப்ளிகேஷன்ஸ்,**
**105, ஜானி ஜான்கான் சாலை, இராயப்பேட்டை,**
**சென்னை - 600 014. தொலைபேசி : 43993029**

□

அட்டை வடிவமைப்பு: **ஆர்.சி. மதிராஜ்**
நூல் உள் வடிவமைப்பு: **அ.ஜெயபாலாஜி**
அட்டை மற்றும் உள் அச்சாக்கம்: **சாருபிரபா பிரிண்டர்ஸ், சென்னை-600 014.**
கட்டமைப்பு: **ஆர்.எஸ். பைண்டிங் ஒர்க்ஸ், சென்னை-600 005.**

**Makkal Kavignar Pattukodai Kalayana Sundram 100**

□

**Sabitha Joseph**

□

First Edition : **2010**
Book Size : **14 X 21.5 Demmy**
Pages : **128**
Price : **Rs. 75/- (Seventy Five Rupees Only)**

□

Published by:
**Nakkheeran Publications,**
**105, Jani Jahan khan Road, Royapettah,**
**Chennai-600014. Phone : 43993029**

□

Cover designed by : **R.C. Mathiraj**
Book Inner designed by: **A.jayabalaji**
Cover and Inner printed by : **Saaru Prabha Printers, Chennai-600 014.**
Binding by : **R.S. Binding Works, Chennai-600 005.**
ISBN : **978-93-81020-02-9**

# பதிப்புரை

'எந்தக் கலையாக இருந்தாலும் எந்த இலக்கியமாக இருந்தாலும் அது லட்சோப லட்சம் மக்களிடம் பேசக்கூடியதாக இருக்க வேண்டும்' - என்பது மகாத்மா காந்தியின் வாக்கு,

'உன்னிடம் கவிதை என்னும் பொன் இருந்தால் வாழ்க்கை என்னும் உரைகல்லில் அதைத் தேய்த்துப் பார்' - என்பது மகாகவி அல்லாமா இக்பால் வாக்கு.

இவைகளை உறுதிமொழியாகக் கொண்டு தமது எழுத்துப் பயணத்தைத் தொடங்கியவர் சபீதாஜோசப்.

எழுத்து நடையில் எளிமை, சொல்லும் விஷயத்தில் சமூகத்துக்கு ஒரு மெசேஜ். இதுதான் இவரது பாணி.

1989-இல் பத்திரிகையாளராக வாழ்வை தொடங்கினார். தமிழகத்தின் பல முன்னணி இதழ்கள் மூலம் அறியப்பட்டவர். பல ஆண்டு அனுபவத்தை எழுத்தாக்க 'நக்கீரன்' வாசல் திறந்து விட்டது.

2006-இல் எழுத்தாளராக 'பெரியார் 100', 'காமராஜர் 100', 'அண்ணா 100', 'கலைஞர் 100', 'எம்.ஜி.ஆர். 100', 'சிவாஜி 100', 'கண்ணதாசன் 100', 'கலைவாணர் 100', 'ரஜினி 100', 'கமல் 100' என்று நூறுகளில் தமது படைப்பு பணியைத் தொடர்ந்தார்.

2006-இல் பத்து நூல்கள்.

2007-இல் இருபது நூல்கள்

2008-இல் 22 நூல்கள்

2009-இல் 16 நூல்கள்

2010-இல் இன்னும் பல அரிய நூல்கள்

என ஐந்து ஆண்டுகளில் உச்சத்தைத் தொட்டிருக்கும் எழுத்தாளர் சபீதா ஜோசப்பை விரைவில் சதம் அடிக்க நக்கீரன் பதிப்பகம் வாழ்த்துகிறது.

'மக்கள் கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் 100' எனும் இந்நூலை மிக நேர்த்தியாகத் தொகுத்தளித்துள்ளார் இந்நூலாசிரியர் சபீதாஜோசப்.

**- பதிப்பகத்தார்**

# அணிந்துரை

பாட்டெழுதி நமைக் கவர்ந்த பாட்டாளி- அவன்
நாட்டிலிலுள்ள நல்லவரின் கூட்டாளி.
நாட்டுக் கைநெசவு போலப் பாட்டியற்றினான்- அதில்
நல்ல கருத்தழகென்னும் சாயமேற்றினான்
வீட்டுச் சிறுகுழந்தை விரும்பும் வண்ணம்- பல
வேடிக்கைச் சித்திரமும் தீட்டி வைத்திட்டான்.
கல்லை நொறுக்குமொடு வலுவிருக்கும்- அந்தக்
கவியுள்ளத்தில் ஆவேசம் கொலுவிருக்கும்,
வில்லிருந்து ஒருகணை பிறக்கும்- அந்த
வேகத்திலே அதில் கனல் தெரிக்கும்,
எண்ணமும் எழுத்தும் உயர்ந்திருக்கும்- ஏழை
கண்ணீரும் பாடலில் கலந்திருக்கும்.
பண்ணோடு சந்தமும் பாய்ந்து வரும்- பழைய
மண்ணின் வாடையும் சேர்ந்துவரும்.
கோடி கொடுப்பினும் கிட்டுவதோ- பட்டுக்
கோட்டைக் கவிஞரின் சொல்லமுதம்,
பாடிப் பறந்த ஒரு குயில்போல- நம்
பக்கம் இருந்தவன் மறைந்து விட்டான்.
காலம் கவிஞனைக் கொன்று விடும்- அவன்
கவிதை காலத்தை கொன்றுவிடும்
பாலமுதருந்திய பரம்பரையின்- தமிழ்ப்
பாட்டினில் பேச்சினில் வாழ்ந்திருப்பான்.

-எழுத்தாளர் ஜெயகாந்தன்

padippakam



*கல்யாணசுந்தரம் மறைந்தபோது அவரது நினைவுகளை போற்றி சிறுகதை மன்னர் ஜெயகாந்தன் எழுதிய கவிதை இது- 1960- நவம்பர் மாதம் 'தாமரை' இதழில் வெளியானது. எனவே ஜெயகாந்தனின் இக்கவிதையையே மக்கள் கவிஞனின் பெருமையைச் சொல்லும் இந்நூலுக்கு அணிந்துரையாக கொள்க.*

**என்றும் அன்புடன்,**

**சபீதாஜோசப்**

படிப்பகம்

padippakam



படிப்பகம்

padippakam



1

# பெயராவது பெரிதாக இருக்கட்டும்

ஒருமுறை மக்கள் கவிஞர் தாம் எழுதிய 'நண்டு செய்த தொண்டு' என்ற கவிதையை எடுத்துக் கொண்டு 'ஜனசக்தி' அலுவலகத்திற்குச் சென்றார்.

'ஒரு கவிதை எழுதியிருக்கிறேன். இதை அப்படியே ஒருவரிகூட விடாமல் வெளியிட வேண்டும்' என்ற வேண்டுகோளுடன் கவிதையை தந்தார், மக்கள் கவிஞர்.

இதழாசிரியர் கவிதையைப் படித்துப் பார்த்து விட்டு, "தலைப்பும் கவிதையும் தரமாக இருக்கிறது" என்று கூறிவிட்டு,

"ஆனால் உங்கள் பெயர்தான் 'பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்' என்று கவிதையைவிட நீளமாக இருக்கிறது. கம்பன், வள்ளுவன், இளங்கோ என்று எவ்வளவு சுருக்கமாகப் பெயர் வைத்திருக்கிறார் கள் பார்த்தீர்களா?" என்றார் இதழாசிரியர்.

"அவர்களெல்லாம் மிகப்பெரிய கவிஞர்கள்... ஆகவே பெயரை சிறிதாக வைத்திருக்கிறார்கள், ஆனால் நானோ மிகச்சிறிய கவிஞன், எனவே எனது பெயராவது பெரிதாக இருக்கட்டும்" என்று மக்கள் கவிஞர் சொன்னதும் இதழாசிரியர் அந்த பதிலை வெகுவாக ரசித்து பாராட்டினாராம்.

படிப்பகம்

padippakam



## 2

## நான் பேட்டை, அவன் கோட்டை

**ப**த்திரிகையாளர் ஒருவர் ஒருமுறை பகுத்தறிவு கவிஞர் உடுமலை நாராயணகவி அவர்களிடம் சென்று,

“உங்களுக்கும் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்துக்கும் உள்ள வேறுபாடு என்ன?” என்று கேட்டார். உடுமலையார் தனக்கே உரிய கவிநயத்துடன் சற்றென்று சொன்னாராம்.

**"நான் பேட்டை**

**அவன் கோட்டை"**

என்று சொல்லிவிட்டு குலுங்கக் குலுங்க சிரித்து மகிழ்ந்தாராம்.

(இவர் உடுமலைபேட்டை, அவர் பட்டுக்கோட்டை)

குறுகிய காலத்திலேயே திரையுலகில் ஒரு உயர்ந்த இடத்தைப் பெற்றிருந்தார் மக்கள் கவிஞர் என்பதற்கு இது ஒரு சிறு சான்று.

## 3

## பாடல்கள் 256

**ம**க்கள் கவிஞர் கல்யாணசுந்தரம் உலகில் வாழ்ந்தது என்னவோ 29 ஆண்டுகள்தான். அதில் சினிமா, பாட்டு எழுதும் தொழில் செய்தது ஒன்பது ஆண்டுகள்.

55 படங்களுக்கு அவர் எழுதிய பாடல்கள் சுமார் 200. ஆனால் அவை இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட ஆண்டுகள் வாழும் தன்மை வாய்ந்தவை என்பது குறிப்பிடத்தக்கது.

படிப்பகம்

padippakam



4

# வி.ஐ.பி. பார்வையில் மக்கள் கவிஞர்

“தான் ஒரு கவிஞன் ஆகிவிட்டதையே ஒப்புக் கொள்ளாத கவிஞன் பட்டுக்கோட்டை”- தோழர் ஜீவானந்தம்.

“என் உயிர் பிரிந்து விட்டது. இப்போது என் உடம்பில் ஓடிக் கொண்டிருப்பது உன் உயிர்தான். என் வரையில் நீ சாகவில்லை. என் சாவில்தான் உன் சாவடங்கும்”- கவியரசு கண்ணதாசன்.

“நமது தலைமுறையில் தோன்றிய சிறந்த கவிஞர், பட்டுக் கோட்டையின் தோற்றம் காலத்தின் கட்டாயம், காலம் தந்த கவிஞன் அவன்”- குன்றக்குடி அடிகளார்

“கண்களை மூடுகிறேன், கல்யாணம் தெரிகிறார். ஒளி தெரிகிறது, கண்களைத் திறக்கிறேன். கல்யாணம் இல்லை, கலையுலகு இருட்டாக இருக்கிறது.”- கலைஞர் மு.கருணாநிதி

“இன்றைய பல திரைப்படப் பாடல்கள்போல மிக மலிவான கருத்துக்களை காசுக்காகக் கட்டாயத்திற்காக அவர் பாடியதே யில்லை”- முன்னாள் அமைச்சர் இராம.வீரப்பன்.

padippakam



"பாட்டெழுதி நம்மைக் கவர்ந்த பாட்டாளி, அவன் நாட்டிலுள்ள நம்மவரின் கூட்டாளி"- ஜெயகாந்தன் (எழுத்தாளர்).

"பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் எத்தனையோ படங்களில் எங்களோடு வாழ்ந்து வந்த கவிஞர், அறுபது வயது அறிவை முப்பது வயதிலேயே முடித்துக் கொண்ட அவர் புகழ் வாழ்க!"- எம்.எஸ்.விஸ்வநாதன்(இசையமைப்பாளர்).

"பட்டுக்கோட்டை கவிதையின் முதலடி என் காதில் ஒலிக்கிறது 'சென்றதினிமீளாது"- இயக்குநர் டி.கே.பாலச்சந்திரன்.

"ஒருசிலரின் பெயர்கள் மட்டும் வரலாற்றில் பதிவு செய்யப் படுகிறது. அந்த வரிசையில் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரமும் ஒருவர்"- நடிகர் வி.கே.ராமசாமி.

"பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் சமுதாயத்தின் போலித்தனங்களை எவ்வளவு வேகமாகச் சாடினாரோ அதைவிடக் கூடுதலான நம்பிக்கையை சமுதாயத்தின்மீது கொண்டிருந்தார்"- சி.மகேந்திரன் (தாமரை பொறுப்பாசிரியர்).

"எம்.ஜி.ஆர். வாழ்ந்து கொண்டிருப்பதற்குக் காரணமே பட்டுக்கோட்டையின் பாடல் வரிகள்தான்"- நெல்லை கண்ணன் (எழுத்தாளர்).

"பட்டுக்கோட்டையின் பாடல்கள் எல்லாம் எனக்குப் பாடல்களாகத் தெரியவில்லை, காலத்தால் அழியாத காவியங்களாகத் தெரிகின்றன"- பாடகர் டி.எம்.சௌந்தரராஜன்.

"தமிழ் உள்ளளவும் பாடுபடுகிற மக்கள், பாரம் சுமக்கிற நாள் வரைக்கும், சுரண்டிக் கொழுக்கிறவர்களுக்கு நமது நாட்டுத் தென்றல் தூது போகிற வரைக்கும் வாழ்ந்திருப்பார், பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்".- வலம்புரி ஜான்.

படிப்பகம்

padippakam



5

# முதல் கவிதை

சிலர் கடவுள் மீது பாடிவிட்டு அடுத்து சமுதாய நல கவிதைக்கு வருவார்கள். மக்கள் கவிஞரின் முதல் கவிதையே சமுதாய நோக்கு கொண்டதாகவே இருந்தது.

**"ஓடிப்போ ஓடிப்போ**
**கொண்டைக் குஞ்சே - கரை**
**ஓரத்தில் மேயாதே**
**கொண்டைக் குஞ்சே**
**தூண்டில்காரன் வரும்**
**நேரமாச்சு ரொம்பத்**
**துள்ளிக் குதிக்காதே**
**கொண்டைக் குஞ்சே"**

இது பட்டுக்கோட்டையார் தமது பதினாறாம் வயதில் 1946-ல் எழுதியது.

6

# ஊரும் பேரும்

பாட்டாளிகளின் கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரத்தின் ஊர் எது என்று கேட்டால் எல்லோரும் உடனே 'பட்டுக்கோட்டை' என்பார்கள். ஆனால் அவரது சொந்த ஊர் அது அல்ல;

தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டைக்கு அருகில் இருக்கும் 'சங்கம் படைத்தான் காடு' என்னும் சிற்றூர்தான் அவரது சொந்த ஊர். அந்த ஊர் பெயரே 'செங்கப்படுத்தான் காடு' என்றழைக்கப் படுகிறது.

படிப்பகம்

padippakam



7

## முதல் வார்த்தை

நம்மில் பலரும் எதையும் எழுதும் முன்பு தங்களுக்குப் பிடித்ததை எழுதுவார்கள். 'பிள்ளையார் சுழி' சிலரும், '786' சிலரும், 'சிலுவைகுறி' சிலரும் எழுதிவிட்டு தொடங்குவார்கள்.

பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் பாடல், கடிதம், எழுதுவது எதுவாக இருந்தாலும் முதலில் 'பாரதிதாசன் வாழ்க' என எழுதி விட்டுத்தான் எழுதத் தொடங்குவார். அந்த அளவுக்கு புரட்சிக் கவிஞரிடம் மக்கள் கவிஞருக்கு மரியாதை.

8

## பாரதிதாசன் பரம்பரை

கம்யூனிச இயக்கத்தினர் பட்டுக்கோட்டையாரை தங்கள் இயக்கத்தின் கவி எனக் கொண்டாடினாலும், அவரை கம்யூனிஸ்ட் என்று முத்திரை குத்தினாலும், மக்கள் கவிஞர் கல்யாணசுந்தரமும் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பரம்பரையை சேர்ந்த கவிஞர்தான்.

திரையுலகிற்கு வரும்முன் பாவேந்தர் பாரதிதாசனின் குயில் பத்திரிகையிலும், அவரது உதவியாளராக சிறிது காலமும் பணியாற்றினார்.

அதுமட்டுமல்ல... 11-9-1957-ல் பாவேந்தர் தலைமையில் திருமணம் செய்து கொண்டவர்.

படிப்பகம்

padippakam



௭

## பாடல் எப்படி எழுதுவது சிறந்தது?

மக்கள் கவிஞர் கல்யாணசுந்தரம் எப்படி பாடல் எழுதுவார்? வருங்கால கவிஞர்கள் பாடல் எப்படி அனுபவித்து எழுதவேண்டும் என்று ஒரு தடவை சொன்னார்:

"ஒரு பாடலைப் பற்றிச் சிந்திக்கும்போது, அந்த நேரத்தில் சூழ்நிலை எப்படி இருக்கிறதோ, எப்படி கவிஞனுக்கு ஒத்துழைக்கிற தோ அதிலிருக்கிறது பாட்டின் உயர்வு. தனியாக இருப்பதையே விரும்பாத நான் எங்கும் எல்லோருடனும் அன்பாகப பழகும் நான் எழுதத் தொடங்கியதும் தனிமையை விரும்புவேன்.

ஆனால் அங்கங்கே உட்கார்ந்து, அடைபட்டுக் கிடந்து வேண்டு மென்றே கருத்துக்களைத் தேடுவதைவிட, சுதந்திரமாக கட்டுப்பாடு இன்றி நிமிர்ந்த நடையுடன், பார்வையை எங்கும் திருப்பிச் சிந்தனைப் புலன்களைக் குறுக்காமல் விசாலமாக்கிக் காணும் போதுதான், இயற்கையிலேயே கவிதைகள் உதிரும். பாடல்கள் உயிருடன் பிறக்கும். சில பாடல்களைப்போல செத்துப் பிறக்காது. இதுதான் என் கருத்து.

இதை நான் மற்றவர்களுக்காகக் கூறவில்லை. என்னால் முடிந்தவரை மேற்கூறிய முறைகளைக் கையாளுவேன். எழுதுவதை விட, எழுதாமல் உணர்ச்சியோடு, உற்சாகத்தோடு பாட வேண்டும். பாடியபின் எழுதவேண்டும். இப்படி எழுதும் பாடல்கள் எக்காலத்திலும் சாகாது" என்கிறார் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம். அதனால்தான் அவர் பாடல்கள் இன்னமும் உயிரிப்புடன் இருக்கின்றனவோ.

படிப்பகம்

padippakam



10

## நாடக வாழ்க்கை

விழுப்புரத்திலிருந்து ஒரு நாடகக் குழு பாண்டிச்சேரி சென்றது. அங்கே நடந்த 'கவியின் கனவு' என்ற நாடகத்தில் ராஜகுருவாக நடித்தார் பட்டுக்கோட்டையார், அந்த நாடகம் பார்க்க வந்த பாவேந்தர் மகன் மன்னர் மன்னன் அறிமுகமானார்.

ஒருநாள் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரமும் தில்ரூபா சண்முகமும் பாவேந்தரை அவரது இல்லத்தில் சென்று சந்தித்தனர்.

அந்த நாடகக்குழு புதுவையிலிருந்து வெளியேறும்வரை பட்டுக் கோட்டையார் நாள்தோறும் பாவேந்தரைச் சந்திப்பதையும் அவருடைய கவிதைகளை நகலெடுப்பதையும் வழக்கமாக்கிக் கொண்டார்.

பாண்டியிலிருந்து நாடகக்குழு திண்டிவனத்திற்கு டேராவைத் தூக்கியது. அந்த நாடகக் குழுவிலிருந்து தில்ரூபா சண்முகம் 27.7.52 அன்று விடைபெற்றுச் சென்றார். பட்டுக் கோட்டையார் அந்த நாடகக் குழுவிலேயே தமது நடிப்பு வாழ்க்கையைத் தொடர்ந்தார்.

சிறிது காலத்தில் நாடகக் கம்பெனி திவாலானது. சொந்த ஊருக்குச் சென்றார் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம், கிராமத் தில் சும்மா இருக்க முடியுமா?... அடுத்த கட்ட முயற்சியில் இறங்கி னார்.

11

## புரட்சிக் கவிஞர் பாராட்டிய கவிதை

நாடக வாழ்வு முடிய மறுபடியும் கிராமத்திற்கு வந்த கல்யாணசுந்தரம் புரட்சிக்கவிஞர் பாரதிதாசனிடம் உதவியாளராக சேர்ந்து தமது இலக்கிய ஆர்வத்தை வளர்த்து கொள்ள விரும்பி னார். அதற்காக, சுயமரியாதை இயக்கத் தலைவர்களில் ஒருவரான

padippakam



பட்டுக்கோட்டை அழகிரியிடம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் புதுவை தலைவர் வ.சுப்பையாவுக்கு ஒரு சிபாரிசுக் கடிதம் வாங்கிக் கொண்டு பட்டுக்கோட்டையார் புதுவைக்கு வந்தார்.

அந்தக் கடிதத்தில், “இந்தக் கடிதம் கொண்டுவருபவர் பொதுவுடைமை இயக்கத்தில் பற்றுக் கொண்டவர். பாவேந்தர் பாரதிதாசனிடம் உதவியாளராகச் சேர ஆசைப்படுகிறார். அவரிடம் சேர்த்துவிட வேண்டுகிறேன்” என்று பட்டுக்கோட்டை அழகிரி குறிப்பிட்டிருந்தார்.

பட்டுக்கோட்டையாரை வ. சுப்பையா பாவேந்தரிடம் உதவியாளராகச் சேர்த்து விட்டார். பகலெல்லாம் பாவேந்தர் கவிதைகளை நகலெடுப்பதும், ‘குயில்’ பத்திரிகை பணிகளைக் கவனிப்பதும் இரவில் வ.சுப்பையா வீட்டில் தங்கிக் கொள்வதும்தான் பட்டுக்கோட்டையார் வேலையானது.

‘ஒரு நாள் கவிஞர் பாரதிதாசன் கல்யாணசுந்தரத்தையும் அவரது சகாக்களையும் கூப்பிடுகிறார், ஒரு காகிதத்தைக் கையில் பிடித்து வாசித்துக் காட்டி, ‘ஏய் ஆம்பிளைப் பசங்களா, இதப் பாருங்கடா அகல்யா என்ற பெண்ணொருத்தி எப்படி பாடல் எழுதியிருக்கிறாள். நீங்களும் எழுதுகிறீர்கள்?’ என்று மகிழ்ச்சியுடன் சொல்லிக் கொண்டே கல்யாணசுந்தரத்திடம் காகிதத்தை நீட்டினாராம்.

கல்யாண சுந்தரத்தால் மெல்லவும் முடியவில்லை, விழுங்கவும் முடியவில்லை. மனத்திற்குள்ளேயே ரசித்துக் கொண்டார். ஏனெனில் அந்த அகல்யாவைப்பற்றி அங்கே இருந்தவர்களில் அவருக்கு மட்டும் தான் தெரியும். அ. கல்யாணசுந்தரத்தின் சுருக்கம் தான் ‘அகல்யா’ என்பது. பாவேந்தர் பாரதிதாசனுக்கும் தெரியாமலேயே வைத்திருந்தார் என்று மணியரசன் குறிப்பிடுகிறார். ஆனால் பாவேந்தர் பாராட்டிய பட்டுக்கோட்டையாரின் அந்தப் பாடல் இதுவரை கிடைக்காது போயிற்று.

படிப்பகம்

padippakam



12

# நடிப்பிலும் உழைப்பாளரை அடிப்பதில்லை

பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் திண்டுக்கல் விவசாயிகள் சங்க மாநாட்டில் 'கண்ணின் மணிகள்' நாடகம் அரங்கேறிய போது, அந்த நாடகத்தில் போலீஸ்காரனாக வேடமேற்றும் நடித்தார்.

"கவிஞருக்கு நடிப்பதில் பெரும் ஆர்வம் இருந்தது. நித்தியானந்தம் எழுதிய நாடகம் ஒன்றை இன்றைய பிரபல மலையாளப்பட இயக்குநர் தோழர் டி.கே.பாலச்சந்திரன் தயாரித்திருந்தார். 'கண்ணின் மணிகள்' என்பது நாடகத்தின் பெயர். அதில் இன்றைய பிரபல தமிழ்த் திரைப்பட டைரக்டர் ஏ. வீரப்பனும் நடித்தார். இந்த நாடகம் 1954-ல் திண்டுக்கலில் நடந்த விவசாயிகள் சங்க மாநாட்டில் நடத்தப்பட்டது.

இதில் கவிஞர் ஒரு போலீஸ்காரர் வேடத்தில் மேடைக்கு வந்தார். ஒரு விவசாயியை அடித்து கைது செய்ய வேண்டிய காட்சி. கவிஞரோ தடியைக் கீழே போட்டுவிட்டு விவசாயியின் மேல் கையை வைத்து லேசாகத் தள்ளினார். திரைக்கு உள்ளே இருந்து டைரக்டர் 'அடி! அடி!' என்று கத்துகிறார். கவிஞர் அடிக்காமல் சிரிக்கிறார். ரசிகர்கள் கூட்டமே இதைக்கண்டு சிரித்தது.

"ஏன் நீங்கள் அவரை அடிக்கவில்லை?" என்று நாடகம் முடிந்த பின், அவரைக் கேட்டேன்.

படிப்பகம்

padippakam



"நான் அடித்தால் நாடகமே நடக்காமல் போய்விடும். அதனால் நான் அடிக்கவில்லை" என்றார் அவர். இவற்றை கே. முத்தையா சொல்லும் செய்தியிலிருந்து நாடகத்தில் கூட, நடிப்புக்காகக் கூட விவசாயிகளை அடிக்க விரும்பாத பட்டுக்கோட்டையாரின் அன்பு உள்ளத்தை அறியலாம்.

ஏற்கனவே விவசாயிகள் சங்கத்தோடு தொடர்பு கொண்டிருந்த பட்டுக்கோட்டையாருக்கு 'கண்ணின் மணிகள்' நாடகத்தின் வெற்றியும் அதில் இடம்பெற்ற அவரது பாடல்களுக்கு உழைக்கும் வர்க்கம் கொடுத்த வரவேற்பும் புது நம்பிக்கையைக் கொடுத்தது. தமிழகம் முழுவதும் இது போன்ற விவசாயிகள் சங்கம் உருவாக வேண்டும் என விரும்பினார். அந்த விருப்பத்தை 16.10.1955 அன்றைய ஜனசக்தியில் கவிதையாகவும் மக்கள் கவிஞர் எழுதினார்.

படிப்பகம்

padippakam



13

# கவிதையின் கிழிந்த வேட்டி

கவிஞர் கல்யாணசுந்தரம் சென்னை நகரத்திற்குக் குடி வந்தார். ராயப்பேட்டை பொன்னுசாமி நாயக்கர் தெரு நம்பர் 10-ம் நம்பர் வீட்டில் முன்புறத்து அறையை ரூபாய் 10-க்கு வாடகைக்குப் பிடித்தார். அது ஒரு சின்ன அறைதான். அவருடன் அவரது நண்பர்- ஓவியர் கே.என். ராமச்சந்திரனும் நடிகர் ஓ.ஏ.கே. தேவரும் இருந்தார்கள். கல்யாணசுந்தரமும் தேவரும் நல்ல உயரம். நீட்டிப் படுத்தால், அறைக்கு வெளியே கால்களும் நீளும்..! அந்தக் காலம் வறுமையான காலம். சாப்பாட்டுக்கே கஷ்டம். அது 1954-ம் ஆண்டு.

கவிஞர் தான் எழுதிய பாடல்களை எடுத்துக்கொண்டு, பட அதிபர்களிடம் சான்ஸ் கேட்க அலைந்து திரிந்து கொண்டிருந்த காலம்.

கோடம்பாக்கம் ஸ்டூடியோ பக்கம் போக வேண்டுமானால் வெள்ளையும் சொள்ளையுமாகப் போக வேண்டும். அழுக்கு வேட்டியோடு போனால் பட அதிபர்களைப் பார்க்க அனுமதி கிடைக்காது.

கவிஞரிடமிருந்தோ இரண்டொரு வேட்டி, அவையும் அழுக்காகிக் கிடந்தன. ஒரு வேட்டியும் ஒரு சட்டையும் லாண்டரியில் போட்டிருந்தார்.

அன்று காலை கோடம்பாக்கம் செல்லவேண்டியிருந்தது. குளித்து சீவி, ரெடியாகிவிட்டார். வெளுத்த வேட்டி வேண்டும். நண்பர் ராமச்சந்திரனை அழைத்து, "லாண்டரியில் துணி வந்திருக்கும் எடுத்து வாங்க. நான் போனா பணம் கேட்பான். நீங்க போய் எடுத்து வாங்க" என்று கூறினார்.

padippakam



காசுக்கு நெருக்கடியான காலமாக இருந்ததால், சலவை வாங்கிவர தான் போனால், காசு கொடுக்க வேண்டியிருக்கும் என்பதற்காக பட்டுக்கோட்டை ராமச்சந்திரனை அனுப்பினார். அவரும் இன்று தருவார், நாளை தருவார் என்று கடன் சொல்லி எப்படியோ சமாளித்து, சலவையை வாங்கி வந்து கொடுத்தார். நாலு முழ வேட்டி நல்லா மடிந்திருந்தது. சலவையும் அழகாகியிருந்தது.

உரிய நேரத்தில் புறப்படுவதற்காக கவிஞர் அவசரமாக வேட்டியை எடுத்து விரித்தார் பாவம்!

சலவைத் தொழிலாளி, பாட்டாளிக் கவிஞன் வேட்டியை நல்லா துவைக்க வேண்டுமென்று நினைத்தானோ என்னவோ, அவன் கல்லில் போட்டு அடித்த அடியில் வேட்டி நடுவே கிழிந்து விட்டது. அப்புறம் என்ன? அடுத்த வெள்ளை வேட்டி இல்லாத நிலைமையில், கோடம்பாக்கத்துக்கு கவிஞர் போனாப்பிலேதான்! படமுதலாளியைப் பார்த்தாப்பிலேதான்! பாட்டுக்கு சான்ஸ் கேட்டாப்பிலே தான்!

மறுவேட்டி இல்லாத நிலைமையில், இதற்காக நாமெல்லாம் கவலைப் படுவோம், ஆனால் ‘இடுக்கண் வருங்கால் நகுக’ என்ற வள்ளுவர் வாக்கை வாய்ப் பாடமாகக் கற்ற கல்யாணசுந்தரமோ, சிரித்தார். கிழிந்த வேட்டியைப் பார்த்து அவருக்கு ஒரு பாட்டு வந்து விட்டது.

**"ஓரம் கிழிஞ்சாலும்**
**ஒட்டுப் போட்டுக் கட்டலாம்- இது**
**நடுவே கிழிஞ்சதடி**
**நாகரத்தினமே- அதுவும்**
**நாலுமுழ வேட்டியடி**
**கனகரத்தினமே!"**

-இப்படி பாடல் பெற்ற கிழிந்த வேட்டியின் கதையை கே.என். ராமசந்திரன் கூறியதாக ஐ. மாயாண்டி பாரதி குறிப்பிடுகிறார்.

படிப்பகம்

padippakam



14

# சிவப்பு கொடி இங்கு ஏன்?

"ஒரு நாள் கவிஞரும் நானும் மைலாப்பூர் லஸ் கார்னரிலிருந்து 3-ம் நம்பர் பஸ் ஏறினோம். ஆழ்வார் பேட்டைத் திருப்பத்தை நெருங்கிக் கொண்டிருந்தது. வேகமாக வந்த பஸ், சிறிது மெதுவாகப் போக ஆரம்பித்தது ரோட்டை எட்டிப்பார்த்த கவிஞர்.

"என்ன செங்கொடி தெரிகிறது?" என்றார் என்னிடம், நான் ரோட்டைப் பார்த்துவிட்டு "தண்ணீர் குழாய் பழுதுபார்ப்பதற்காக பள்ளம் தோண்டியிருக்கிறார்கள். அதற்காக எச்சரிக்கை செய்யும் முறையில் அபாயக்கொடி போட்டிருக்கிறார்கள்" என்றேன்.

அதற்கு நம் கவிஞர், "ஓஹோ ஏற்றத்தாழ்வு எங்குண்டோ அங் கெல்லாம் இந்தக்கொடி உயர்ந்து விடும் போலிருக்கிறது" என்று சிரித்தார், நானும் சிரித்தேன், ஆனால் என்னை வெகுநேரம் சிந்திக்கவும் வைத்தது, எவ்வளவு கருத்தாழம்!

படிப்பகம்

padippakam



15

# இப்படியும் ஒரு பண்பாளர்

**ப**ட்டுக்கோட்டையும் ஓ.ஏ.கே. தேவரும் ராயப்பேட்டை மக்கள் மறுமலர்ச்சி மன்றத்துக்கு அருகில் ரூ.8 வாடகைக்கு ஓர் அறையில் குடியிருந்தார்கள். அப்போது இருவருக்கும் திரையுலகில் கிராக்கி இல்லை. பழைய நோட்டுப் புத்தகங்களிலும் தாள்களிலும் பட்டுக்கோட்டை அநேக பாடல்கள் எழுதியிருந்தார்.

ஒருநாள் டீ குடிக்க ராயப்பேட்டை போலீஸ் ஸ்டேஷன் அருகிலுள்ள அமீன் ஓட்டலுக்கு கவிஞர் போய் விட்டார். அப் போது ஒரு பழைய பேப்பர் வியாபாரி சாக்கு மூட்டையுடனும் ஒரு தராசுடனும் 'பழையபேப்பர், பழைய பேப்பர்!' என்று கூறிக்கொண்டே வந்தான். தேவர் அவனை அழைத்து "இந்தாப்பா வீசை என்ன விலைக்கு வாங்குவே" என்று கேட்க, அவனும் ஏதோ சொல்ல, அறையில் இருந்த பழைய பத்திரிகைகளையும் காகிதங்களையும் நோட்டுப் புத்தகங்களையும் எடுத்து பேப்பர் காரனிடத்தில் போட்டுவிட்டார். அவனும் வாங்கிக் கொண்டு போய்விட்டான்.

சிறிது நேரத்தில் கவிஞர், அறைக்கு திரும்பி வந்தார். அறை சுத்தமாக இருந்ததைப் பார்த்து மகிழ்ச்சியுடன், "என்ன அறை சுத்தமாக இருக்கிறதே" என்று கூறினார். அதற்கு தேவர், "எல்லா குப்பைகளையும் எடுத்துப் பழைய பேப்பர் காரனுக்குப் போட்டு விட்டேன்" என்றார்.

padippakam



*சந்தோஷப்பட்டுக்கொண்டே தான் எழுதி வைத்திருந்த பாட்டு நோட்டுக்களையும் காகிதங்களையும் எங்கே வைத்திருக்கிறார் என்று சுற்றும் முற்றும் பார்த்தார் கவிஞர், "பாட்டு நோட்டுக்களை காணோமே, எங்கே இருக்கிறது?" என்று கேட்டார்.*

*அதற்கு தேவர், "போங்க நீங்களும், உங்க நோட்டும் உங்க பாட்டை ஒரு முதலாளியும் எடுத்துக்கொள்ளவில்லை. இந்தப் பேப்பர்காரனாவது 3 ரூபாய்க்கு எடுத்துக் கொண்டான்" என்று கேலியாகச் சிரித்துக் கொண்டே சொன்னார். பட்டுக்கோட்டைக்கு 'பக்'கென்று இருந்தாலும் இனி என்ன செய்யமுடியும்?*

*"அதில் நல்ல பாட்டுக்கள் இருந்ததே!" என்றார். அதற்கு தேவர், "அதைவிட நல்ல பாட்டுகளை இனி எழுதுங்கள்" என்றார். பாவம் பட்டுக்கோட்டை "அதுவும் சரிதான்" என்று சும்மா இருந்து விட்டார்.*

*அப்புறம் சென்னை ராயப்பேட்டை அந்தோணி தெருவில் இருந்த 'ஜனசக்தி' ஆபீசுக்கு பட்டுக்கோட்டை வந்தார். என்னிடம் பாட்டு பறிபோன கதையைச் சொன்னார். பாவம் என்று குறிப்பிடுகிறார் ஐ. மாயாண்டி பாரதி எடைக்குப் போடப்பட்ட பாடல்களில் எத்தனை கருத்துக்கள் கொட்டிக் கிடந்தனவோ?*

padippakam



16

# அறுந்த செருப்பு

தியாகராய நகர் வாணிமஹாலுக்கு அருகில் கவிஞர் நடந்து வந்து கொண்டிருந்தார். காலில் அணிந்திருந்த செருப்பில் ஒன்று அறுந்து விட்டது. இணைபிரியாத அவைகளைக் கையில் எடுத்துக் கொண்டு மீண்டும் நடந்தார். இதைப்பார்த்த அவருடைய பழைய நண்பர் ஒருவர்,

“என்ன ஓய் பட்டுக்கோட்டை! தார்ரோடு ரொம்பக் குளிர்ச்சியாய் இருக்கா?” என்று கிண்டலாய் கூறியதும் கவிஞருக்கு சற்று ஆத்திரமாய் வந்தது. உடனே அவரை அருகில் அழைத்து,

**"உறுப்பறுந்து போனாலும்**
**உள்ளங் கலங்கேனிச்**
**செருப்பறுந்து போனதற்கோ**
**சிந்திப்பேன் -நெருப்பை**
**எதிர்ப்பதற்கும் அஞ்சாத**
**எண்ணம் படைத்தாற்பின்**
**கொதிக்குமிந்தத் தார்குளிர்நீர்!”**

என்று பாடினார், இதைக்கேட்ட அவர், அன்று முதல் கவிஞரின் அரிய நண்பர்களில் ஒருவராக ஆகிவிட்டார்.”

படிப்பகம்

padippakam



17

## சாட்டையடி கவிதை

தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த அய்யர் ஒருவர் பட்டுக் கோட்டையாரை தனது படத்துக்குப் பாட்டெழுத ஒப்பந்தம் செய்திருந்தார். படத்திற்கான பாட்டு எழுதி இசையமைப்பு எல்லாம் முடிந்து ஸ்டுடியோவில் பதிவும் செய்யப்பட்டது.

ஆனால் அதற்கான ஊதியத்தைக் கொடுக்காமல் காலம் தள்ளிக் கொண்டே வந்தார் அய்யர். கவிஞர் பல நாட்கள் அலைந்து, கம்பெனிக்கும் வீட்டுக்கும் போய் கேட்டு அழைந்திருக்கிறார். ஒன்றும் நடக்கவில்லை.

ஒருநாள் எப்படியும் அய்யரைப் பார்த்து, "பணத்தை வாங்கி விடுவது" என்ற முடிவுடன் புறப்பட்டுப் போனார். நல்ல வேளையாக அய்யரும் இருந்தார். வணக்கம் சொல்லிவிட்டு முக்கியமான செலவு களுக்காகச் சிரமப்படுகிறேன். இன்று எப்படியாவது நீங்கள் பணத்தைக் கொடுத்தே தீரவேண்டும்"என்றாராம் கவிஞர்,

"பணம் இன்னிக்கு இல்லை! நாளைக்குவேணா வந்து பாருங்கோ" என்று அய்யர் சொன்னதும் பட்டுக்கோட்டையார் அய்யரைப் பார்த்த படியே நின்று கொண்டிருந்தார்.

படிப்பகம்

padippakam



“என்ன! நின்னுண்டே இருக்கேள்! போயிட்டு நாளைக்கு வாங்கோன்னேன்! இல்லே நிற்கிறதா இருந்தா, நின்னுண்டே இரும்” என்று சொல்லிவிட்டு அய்யர் உள்ளே போய்விட்டார்.

முதல் நாளைக்கு வாங்கோ என்றிருந்த மரியாதை கடைசியில் நின்னுண்டே இரும்” என்றும், வாரும் போரும் என்று குறையத் தொடங்கி விட்டதைப் புரிந்து கொண்டதும் கவிஞருக்கு வந்தது கோபம்! பிறகென்ன, அது கவிதைக் கனலாக உருவெடுத்தது. உடனே சட்டைப் பையிலிருந்து தாளையும் பேனாவையும் எடுத்து எழுதினார். மேஜையின்மீது வைத்துவிட்டு வீட்டுக்கு வீர்ரென்று வந்துவிட்டார்.

வந்த கொஞ்ச நேரம் கழிந்ததும் அந்தக் கம்பெனியிலிருந்து ஒரு ஆள் பணத்துடன் அலறிக்கொண்டு வந்துவிட்டான். அப்படி அலறி அடித்துக்கொண்டு பணமுடன் வருவதற்கு என்ன காரணம்? அப்படி என்ன எழுதினார்?

**"தாயால் வளர்ந்தேன்**

**தமிழால் அறிவு பெற்றேன்**

**நாயே! நேற்றுன்னை**

**நடுத்தெருவில் சந்தித்தேன்**

**நீயார்? என்னை**

**நில்லென்று சொல்ல?”**

இதைப்படித்துப் பார்த்த அய்யர் அசந்து போனார், ஆரம்பத்தில் சினிமா உலகத்தில் நுழைய, வளைந்து நெளிந்து பணிந்து கொடுத்து ஓரளவு சான்ஸ் கிடைத்ததும் சரணாகதி அடைந்து விடுபவர்களைக் கேள்விப்பட்டிருக்கிறோம். இந்த மனிதன் நாயே! பேயே! என்று திட்டி எழுதுகிறாரே, இவ்வளவு துணிச்சல் உள்ள இந்தப் பேர்வழி இன்னும் என்ன வேண்டுமானாலும் செய்வார் போலிருக்கிறது, என்று பயந்துபோன அந்தப்பட முதலாளி உடனே பணத்தைக் கொடுத்தனுப்பி விட்டார். அந்த சம்பவத்திற்குப் பிறகு அந்தப்பட முதலாளி யாரையும் “நில்லுங்கோ” என்று சொல்வதை மறந்தே போய்விட்டாராம் இந்தச் சம்பவத்தைக் குறிப்பிடுகிறார் தில்ருபா சண்முகம்.

படிப்பகம்

padippakam



18

# இதுதான் என் வாழ்க்கை

**ப**த்திரிகை நிருபர் ஒருவர் பட்டுக்கோட்டையாரைப் பேட்டி கண்டு அவருடைய வாழ்க்கை வரலாற்றை பிரசுரிக்க விருப்பம் கொண்டு அவர் தங்கியிருந்த வீட்டைத் தேடிவந்தார், விவரத்தைச் சொன்னார்.

"பேட்டிக்காக வந்தீர்களா?" என்று கேட்டுக்கொண்டே சட்டையை மாட்டியவாறு தன் பாட்டுக் காகிதங்கள் வைத்திருக்கும் பயிலையும் எடுத்துக்கொண்டு வெளியே புறப்பட்டுவிட்டார். அங்கிருந்து நடந்து பஸ் நிற்குமிடத்திற்கு வந்தார்.

நிருபரும் கூடவே பேசிக்கொண்டு வந்தார். சிறிதுநேரம் பேருந்துக்காக காத்திருந்து நின்று கொண்டிருக்காமல் ஒரு சைக்கிள் ரிக்ஷா கூப்பிட்டுத் தானும் ஏறி, வந்தவரையும் ஏற்றிக் கொண்டார். சிறிது தூரம் வந்ததும் ஒரு நண்பரைப்பார்த்து அங்கே இறங்கினார். ரிக்ஷாவிற்கு சில்லறைக் கொடுத்து அனுப்பி விட்டார். அங்கிருந்து சுற்று முற்றும் பார்த்தார். டாக்ஸி ஒன்று பார்த்துக் கூப்பிடும் நேரம் இவர் பாட்டெழுதும் கம்பெனியின் கார் ஒன்று அந்த வழியாக வந்தது, கார் ஓட்டிவந்தவரே இவரைப் பார்த்து "வாருங்கள்" என்று இவரைக்கூப்பிட்டவாறு கதவைத் திறந்தார்.

padippakam



இவ்வளவு நேரமும் விடாக்கண்டராகக் கவிஞரைத் தொடர்ந்து வந்த செய்தியாளர் “நான் எப்ப வரட்டும்?” என்றார்.

“எதற்கு?” என்று கேட்டார் கவிஞர்.

வந்தவருக்கு உள்ளுக்குள் எரிச்சல், உண்டாகியிருக்கவேண்டும். ஆனால் அவர் வெளிக்காட்டாமல், “உங்கள் வாழ்க்கை வரலாறு வேண்டும்” என்றார்.

“மறுமுறையும் இதுதான் வாழ்க்கை வரலாறு” என்றார் கவிஞர். வந்தவர் விழித்தார், “என்ன புரியவில்லையா?” என்று கேட்டுவிட்டு ஒரு சிரிப்பு சிரித்தார். முதலில் நான் நடை, பிறகு பஸ், பிறகு சைக்கிள் ரிக்ஷா, அதன் பின் டாக்ஸி, இப்போது என் தேவைக்கு கம்பெனி கார்கள். இதுதான் என் வாழ்க்கைப் பயணமும்” என்று ஒரு சிரிப்பு சிரித்துவிட்டுக் காரில் ஏறிப் போய்விட்டார்” என்று பட்டுக் கோட்டையார் வாழ்க்கை வரலாற்றைக் கூறிய விதத்தை விவரிக்கிறார். டி.கே. பாலசந்திரன்...ஓ.... அதனால்தான் பட்டுக் கோட்டை மக்கள் கவிஞனோ?

படிப்பகம்

padippakam



19

# கடவுள் இருப்பதும் இல்லை என்பதும்

*1958*-ம் ஆண்டில் கல்யாண சுந்தரம் பாடல்களுடன் 'கன்னியின் சபதம்', 'உத்தம புத்திரன்', 'பதிபக்தி', 'பெற்ற மகனை விற்ற அன்னை', 'திருமணம்', 'நாடோடி மன்னன்', 'அன்பு எங்கே' போன்ற எட்டுப் படங்கள் வெளிவந்தன.

புத்தா பிலிம்ஸ் அதிபர் இயக்குனர் ஏ. பீம்சிங் அவர்களிடம் 'பாசவலை' படப்பாடல்களின் சிறப்பை கூறி அவற்றை எழுதிய கல்யாண சுந்தரத்தை அறிமுகம் செய்துவைத்தார் இசையமைப் பாளர் எம்.எஸ். விஸ்வநாதன்.

'பதிபக்தி' படத்தின் அனைத்துப் பாடல்களையும் கல்யாண சுந்தரத்தையே எழுத வைத்தார். ஏ. பீம்சிங். அத்தனைப் பாடல்களும் மக்கள் மத்தியில் மிகுந்த வரவேற்பைப் பெற்றன. பாடலுக்காகவே பதிபக்திப் படத்தை மீண்டும் பலர் பார்த்தனர்.

எந்தப் பாடலையும் எழுதினாலும் 'பிள்ளையார் சுழி' போடும் கவிஞர்களிடையே இவர் 'வாழ்க பாரதிதாசன்' என்று எழுதிவிட்டுத் தான் தொடங்குவார், கல்யாணசுந்தரம் என்பது திரையுலகத்தின ருக்குத் தெரிந்ததும் அவர் "ஆத்திகரா? நாத்திகரா?" என்று சிலருக்கு சந்தேகம்.

'பதிபக்தி' படத்தில் 'தர்மமென்பார் நீதி யென்பார்' என்று தொடங்கும் பாடலை கல்யாண சுந்தரம் எழுதினார்.

**"கடவுள் இருப்பதும் இல்லை என்பதும்**
**சுவைக்குதவாத வெறும் பேச்சு!**
**கஞ்சிக் கில்லாதார் கவலை நீங்கவே**
**கருத வேண்டியதை மறந்தாச்சு!"**

இப்படி தன்னைப்பற்றி கவிஞர் வெளிப்படுத்தினார்.

படிப்பகம்

padippakam



20

# அனுபவக் கட்டுரை

'பேசும் படம்' மாத இதழ் 1958-ம் ஆண்டின் சிறந்த திரைப்படப் பாடலாசிரியர் என்று அறிவித்து விட்டு கல்யாணசுந்தரத்திடம் கட்டுரை வாங்கி வெளியிட்டது. அந்த கட்டுரையில்...

"உண்மையான அழகும், மனம் கனிந்த அன்பும் செவிகளுக்கு இனிமையான ஒலிகளும்தான் என் உள்ளத்தைக் கவர்ந்த காதற் துணைவிகள். நான் கவிதை எழுத ஆரம்பிக்கும் முன் பறவை இனங்களையும் மிருக இனங்களையும் தாவர இனங்களையும் கண்டு ரசிப்பேன். விளைவற்ற தரிசு நிலங்களை எனக்குப் பிடிக்காது. அதேபோல் அன்பில்லாத முகங்களையும் அறிவில்லாத செயல் களையும் எனக்குப் பிடிக்காமல் போனதில் எனக்கு வியப்பில்லை என்று எண்ணுகிறேன்.

நான் நன்றாகப் பழகிய என் அனுபவ வாயிலாகக் கண்ட நண்பர்களின் நடைமுறைகளை ஆதாரமாக வைத்துக் கவிதை எழுதுவேன். அரை வயிற்றுக் கஞ்சி குடித்தாலும் முயற்சி, ஒற்றுமை, கட்டுப்பாடு இவைகளைக் கைவிடாமல் வாழ்க்கையோடு எதிர் நீச்சல் அடித்துக்கொண்டு என்றாவது ஒருநாள், நான் எதிர்பார்த்த வாழ்வு கிடைக்கும் என்றெண்ணி மனங்கொண்டது. மாளிகையாக, மரத்தடியே வீடாக வாழும் மக்களைப் பற்றி என் உள்ளம்

படிப்பகம்

padippakam



அதிகமாக ஆராயும். தகுதியைப் பெற்றிருக்கிறது.

அழகிய பூங்காவிலும் பெருங்காடுகளிலும் வயல் வெளிகளிலும், வாழும்பறவை இரை தேடிவந்து தம் குஞ்சுகளுக்கு உணவு ஊட்டுவதைக் கண்டு மெய் மறந்து ரசிப்பேன். அவைகள் கொஞ்சி குலாவி கத்தும் ஒலிகள்- நான் எந்த வாத்தியத்திலும் கேட்டிடாத இனிய கீதங்களாகும். இவைகள்தான் நான் அமைக்கும் கவிதை களுக்கு மூல காரணங்களாகும்.

ஒருநாள் நான் வயல் பார்க்கச் சென்று திரும்பும்போது வேப்ப மர நிழலில் அமர்ந்தேன். நல்ல நிழலோடு குளிர்ந்த தென்றலும் என்னை வந்து தழுவ எதிரிலிருக்கும் ஏரியைக் கண்டு ரசித்துக் கொண்டிருந்தேன். தண்ணீரலைகள் நெளிந்து நெளிந்து ஆடிவர, தாமரை மலர்கள் எம்மைப்பார்! எம் எழிலைப்பார் என்று குலுங்க ஓர் இளங்கெண்டை பளீச்சென்று துள்ளிக் கரையோரத்தில் கிடந்த தாமரை இலையில் நீர் முத்துக்களைச் சிந்தி விட்டுத் தலை கீழாய்க் குதித்தது. அதுவரை மவுனமாக இருந்த நான் என்னையும் மறந்தவனாகப் பாடினேன்.

**"ஓடிப்போ ஓடிப்போ கெண்டைக் குஞ்சே- கரை**
**ஓரத்தில் மேயாதே கெண்டைக் குஞ்சே!**
**தூண்டில் காரன் வரும் நேரமாச்சு-ரொம்பத்**
**துள்ளிக் குதிக்காதே கெண்டைக் குச்சே!"**

இதை அங்கே ஆரம்பித்த நான் வீடு திரும்பும்வரை பாடிக் கொண்டே வந்தேன். எல்லோரும் அதை பலமுறை பாடச் சொல்லி ரசித்தார்கள். எனக்கு அப்போது 15 வயது. பாடல் இலக்கணங்கள் எப்படி என்பது அறியாத நேரம். அது எல்லோரும் ரசித்ததிலிருந்து ஓஹோ... இப்படித்தான் பாடல் எழுதவேண்டும் போலிருக்கிறது என்று சிந்தித்தேன். அன்றுமுதல் சுவையான நிகழ்ச்சிகள், பறவை இனங்கள், அழகியகாட்சிகள், அறிஞர்கள், மடையர்கள், இன்னும் மாடுகள், ஆடுகள், நாய்கள் எல்லாவற்றை யும் பற்றி வேடிக்கையாகப் பாடுவதுண்டு!

பனகல் என்று தியாகராய நகரில் ஒரு பூங்கா இருக்கிறது. அதில்

படிப்பகம்

padippakam



நான் சிந்தனை செய்வதற்கென்றே போய் உட்காருவேன். ஒருநாள் 'சக்ரவர்த்தி திருமகன்' படத்திற்கான பாடல் ஒன்று, "அவன் குணம் அப்படி, இவன் குணம் இப்படி? அதுக்கு ஆரென்ன செய்வது?" என்று அவர்களுக்குள் விழுந்த வார்த்தை என் செவிகளுக்குள் விழவே.

"ஆமாம் மனிதன் குணம் எப்போது மாறுகிறது? இருக்கும் குணம் எப்போது பிரிந்து போகிறது? மீண்டும் மனிதனுடன் எப்போது வந்து சேரப்போகிறது? என்று ஆராய்ச்சிப் பண்ணிய வாறே உமா பிக்சர்ஸுக்கு சென்று மாடியில் அமர்ந்தேன். பூனை ஒன்று என் பக்கத்தில் நின்றது. உறங்கையிலோ, பானையிலோ உருட்டுவது பூனைகுணம், எல்லாம் சொல்லி முடிவில் இத்தனை குணங்களும் மனிதரிடத்தில் மொத்தமாய் வாழுதடா என்று தொகையாறாவை முடித்து.

மனிதன் பொறக்கும்போது பொறந்த குணமும் போகப் போக மாறுது. எல்லாம் இருக்கும்போது பிரிந்த குணம் இறக்கும்போது கொடியவனாக அவன் வாழ்க்கையில் வாழ்ந்திருந்தாலும் உயிர் போகும்முன் ஒரு நிமிடத்தில் தன் வாழ்க்கையில் செய்த தவறுகளை சிந்தித்து உணருகிறான். அவனை பிரிந்திருந்த குணம் அப்போது தான் அவனைச் சேருகிறது. உடனே மூச்சு நின்று விடுகிறது. அவர் தான் உணர்ந்ததை மற்றவர்களுக்குச் சொல்லக்கூட வாய்ப்பில்லாமல் போய்விடுகின்றன என்ற இந்தக் கருத்தை அடிப்படையாகக் கொண்டு இந்தப் பாடலை எழுதி முடித்தேன்." இப்படி பாட்டுப் பிறந்த விதம் என்ற கட்டுரையில் மக்கள் கவிஞர் தமது அனுப வத்தை சொல்லியிருந்தார்.

படிப்பகம்

padippakam



21

# கோட்டைக்குப் போன பட்டுக்கோட்டையின் பாடல்கள்

'நாடோடி மன்னன்' படத்தைத் தயாரித்த எம்.ஜி. இராமச்சந்திரன் 1977-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 10-ம் தேதியன்று தி.மு.க. விலிருந்து நீக்கப்பட்டார். அதே மாதம் 16-ம் தேதியன்று எம்.ஜி.ஆர். 'அண்ணா திராவிட முன்னேற்ற கழகம்' எனும் கட்சியைத் தொடங்கினார். 1977-ம் ஆண்டு பொதுத் தேர்தலில் வெற்றி பெற்று தமிழக முதலமைச் சர் பதவியை ஏற்றார்.

முதல்வர் எம்.ஜி.ஆரை செய்தியாளர்கள் கேட்டனர், உங்கள் ஆட்சியின் கொள்கை என்ன? செயல் திட்டம் என்ன?

அந்தக் கேள்விக்கு முதல்வர் எம்.ஜி.ஆர்., "நாடோடி மன்னன்' படம் பாருங்கள்" என்று பதில் சொன்னார். அவரது அமைச்சர்கள் அவரால் நியமனம் பெற்ற வாரியத் தலைவர்கள், 'நாடோடி மன் னன்' திரைப்படத்தை பார்த்தே தீருவது என்பதை அரசுக் கடமை யாக ஏற்றார்கள், 1958-ல் வெளியான அப்படம் 1977-ல் மறு வெளியீடு செய்யப்பட்டது.

ஒலியிழை (ஆடியோ கேஸட்)யில் பதிவு செய்யப்பட்ட 'நாடோடி மன்னன்' பாடல்கள் பெருமளவில் விற்பனையாகின.

கோட்டையின் கொள்கையாகவும் அரசின் செயல் திட்டமாகவும் எம்.ஜி.ஆரால் அறிவிக்கப்பட்டவை. பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் எழுதிய இரு பாடல்களையும் அவற்றில் ஒன்று ஆணும்

படிப்பகம்

padippakam



பெண்ணும் பாடும் இரு குரல் பாடலாகும் அந்தப்பாடல்...

**பெண்:** **சும்மா கெடந்த நெலத்த கொத்தி**
**சோம்பல்லாம ஏர் நடத்தி**
**கம்மாக் கரையை ஒசத்திக் கட்டி**
**கரும்புக் கொல்லையிலே வாய்க்கால் வெட்டி**
**சம்பாப் பயிரைப் பறிச்சு நட்டு**
**தகுந்த முறையில் தண்ணீர் விட்டு**
**நெல்லு வெளைஞ்சிருக்கு -வரப்பும்**
**உள்ளே மறைஞ்சிருக்கு - அட**
**காடுவெளைஞ்சென்ன மச்சான்-நமக்கு**
**கையும் காலுந்தானே மிச்சம்?**

**ஆண்:** **இப்போ காடு வெளையட்டும் பொண்ணே -நமக்குக்**
**காலமிருக்குது பின்னே!**
**மண்ணைப் பொளந்து சொரங்கம் வெச்சு**
**பொன்னை எடுக்க சுரங்கம் வெட்டி**
**மதிலு வெச்சு மாளிகை கட்டி**
**கடலில் மூழ்கி முத்தை எடுக்கும்**
**வழிகாட்டி மரமான**
**தொழிலாளர் வாழ்க்கையிலே**
**பட்ட துயரினி மாறும் -ரொம்பக்**
**கிட்ட நெருங்குது நேரம்!**

'நாடோடி மன்னன்' படத்தில் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் எழுதிய இன்னொரு பாடல் எம்.ஜி.ஆர்.தனது ஆதரவாளர்களுக்கு கூறும் அறிவுரை போலவும் கட்டளை மாதிரியும் அமைந்தது...

**தூங்காதே தம்பி தூங்காதே -நீயும்**
**சோம்பேறி என்ற பெயர் வாங்காதே!- நீ**

படிப்பகம்

padippakam



தாங்கிய உடையும் ஆயுதமும்-பல
சரித்திர கதை சொல்லும் சிறைக் கதவும்
சக்தியிருந்தால் உனைக்கண்டு சிரிக்கும்!
சத்திரந்தான் உனக்கு இடம் கொடுக்கும்!
-(தூங்காதே)

நல்ல பொழுதையெல்லாம் தூங்கி கெடுத்தவர்கள்
நாட்டைக் கெடுத்ததுடன் தானும் கெட்டார்-சிலர்
அல்லும் பகலும் தெருக் கல்லாய் இருந்துவிட்டு,
அதிர்ஷ்டம் இல்லையென்று அலட்டிக்கொண்டார்.
விழித்துக்கொண்டோரெல்லாம்
பிழைத்துக் கொண்டார்!-உன் போல்
குறட்டை விட்டோரெல்லாம் கோட்டை விட்டார்!
-(தூங்காதே)

போர் படைத்தனில் தூங்கியவன்
வெற்றியிழந்தான்!- உயர்
பள்ளியில் தூங்கியவன்
கல்வியிழந்தான்!
கடைதனில் தூங்கியவன்
முதல் இழந்தான்!-கொண்ட
கடமையில் தூங்கியவன்
புகழ் இழந்தான்! இன்னும்
பொறுப்புள்ள மனிதரின் தூக்கத்தினால் -பல
பொன்னான வேலையெல்லாம் தூங்குதப்பா!
தூங்காதே தம்பி தூங்காதே!-நீயும்

படிப்பகம்

padippakam



22

**சோம்பேறி என்ற பெயர் வாங்காதே!**

# முன்னாள் முதல்வருக்கு பிடித்த பாட்டு

செல்வி ஜெயலலிதா அ.இ.தி.மு.க. வில் கொள்கைப் பரப்புச் செயலாளராக இருந்தபோது எனக்குப் பிடித்த பாடல் எனும் லைப்பில் எழுதிய கட்டுரையின் முன்னுரையில் 'பிடித்த பாடல் ன்றால் எந்தகண்ணோட்டத்தில் அது நமக்குப் பிடித்திருக்கிறது ன்பதையும் சிந்தித்துப் பார்க்கவேண்டும் அல்லவா?

நாட்டுப் பற்று காதல், வீரம், பாசம், பக்தி இப்படிப் பல சுவைகளை வெளிப்படுத்தும். பலவகையான உணர்வுகளைத் தூண்டும், எத்தனை யோ பாடல்கள் இருக்கும்போது இவற்றில் ஒன்றினை மட்டும் அனைத்திலும் சிறந்தது என எப்படித் தேர்ந்தெடுப்பது? அதற்கு ந்த அளவுகோலை பயன்படுத்துவது? இந்தப் பாடலை கேட்பதா ால் மனித சமுதாயம் அடையும், முக்கியமாக நாளைய சமுதா த்தை உருவாக்கப் போகும் இன்றைய சிறுவர்கள் அதனால் பயன் அடைவார்கள், என்று உறுதியாக நம்மால் கூறமுடியுமானால் அத் கையப் பாடலே அனைத்திலும் சிறந்தது என்று சொல்ல முடியும்.

அப்படிப்பட்ட ஒரு பாடலைத்தான் இங்கு குறிப்பிடப்போகிறேன்,

படிப்பகம்

padippakam



என்றைக்கு இந்தப் பாடலை முதன்முதலாக கேட்டேனோ அன்று முதல் இதுவே எனக்கு மிகவும் பிடித்தமான பாடல்களில் நிரந்தமாக முதல் இடம் வகித்து வருகிறது. அதுதான் அமரர் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் அவர்கள் இயற்றிய 'அரசிளங்குமரி' திரைப்படத்தில் இடம்பெறுகின்ற 'சின்னப்பயலே சின்னப்பயலே சேதிகேளடா' எனத் தொடங்கும் பாடல். "என்று எழுதியுள்ளார்.

1961-ம் ஆண்டில் வெளிவந்த 'அரசிளங்குமரி' படத்தில் கல்யாண சுந்தரம் எழுதிய ஜெயலதாவுக்கு மிகவும் அந்தப் பாடல் இதோ.

**"சின்னப் பயலே சின்னப் பயலே**
**சேதி கேளடா!**
**நான் சொல்லப் போற வார்த்தையை நல்ல**
**எண்ணிப்பாரடா நீ எண்ணிப் பாரடா!**

**ஆளும் வளரணும் அறிவும் வளரணும்**
**இது தாண்டா வளர்ச்சி! உன்னை**
**ஆசையோடு ஈன்றவளுக்கு அதுவே -நீ**
**தரும் மகிழ்ச்சி!**

**நாளும் ஒவ்வொரு பாடம் கூறும்**
**காலம் தரும் பயிற்சி-உன்**
**நரம்போடுதான் பின்னி வளரணும்**
**தன்மான உணர்ச்சி!**

**-(சின்னப் பயலே)**

**மனிதனாக வாழ்திடவேணும்**
**மனதில் வையடா-தம்பி**
**மனதில் வையடா**
**வளர்ந்து வரும் உலகத்துக்கே- நீ**
**வலது கையடா !**

padippakam



தனியுடமை கொடுமைகள் தீரத்
தொண்டு செய்யடா -நீ
தொண்டு செய்யடா!
தானா எல்லாம் மாறும் என்பது
பழைய பொய்யடா -எல்லாம்
பழைய பொய்யடா!

-(சின்னப் பயலே)

வேப்பமர உச்சியில் நின்று
பேயொன்னு ஆடுதுன்னு
விளையாடப் போகும்போது
சொல்லி வைப்பாங்க-உன்
வீரத்தை கொழுந்திலேயே
கிள்ளி வைப்பாங்க!

வேலையற்ற வீணர்களின்
மூளையற்ற வார்த்தைகளை
வேடிக்கையாகக் கூட
நம்பி விடாதே-நீ
வீட்டுக்குள்ளே பயந்து கிடந்து
வெம்பி விடாதே!

சின்னப் பயலே சின்னப் பயலே
சேதி கேளடா!
நான் சொல்லப் போற வார்த்தையை நல்ல
எண்ணிப்பாராட நீ எண்ணிப் பாரடா!

படிப்பகம்

padippakam



23

# நாட்டுடைமையான கவிஞர்

*1991-ம் ஆண்டு நடைபெற்ற சட்டப்பேரவை தேர்தலில் அ.இ.அ.தி.மு. கழகம் வெற்றி பெற்றது. செல்வி ஜெயலலிதா தலைமையில் தமிழக அமைச்சரவை அமைந்தது.*

*பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் நினைவாக பட்டுக்கோட்டையில் மணிமண்டபம் கட்டப்படும் என்று முதல்வர் செல்வி ஜெயலலிதா அறிவித்தார். இதற்கிடையில். பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்தோடு பழகியவர்கள், ரசிகர்கள், அனைத்துக் கட்சி பிரமுகர்கள் ஆகியோர் பி. ரத்தினம் பிள்ளை தலைமையில் ஓரணியில் திரண்டு 1995-ம் ஆண்டு ஏப்ரல் 13-ம் நாளன்று பட்டுக்கோட்டை நகரின் மையப்பகுதியில் கவிஞரின் முழு உருவச் சிலையைத் திறந்து வைத்தனர்.*

*"பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்தின் கவிதைகள் நாட்டுடைமையாக்கப்படும்" என்று அறிவித்தார், தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா. நாட்டுடைமையாக்கப்படுவதன் ஈட்டுத்தொகை ரூபாய் பத்து லட்சத்தை 1995 நவம்பர் 3-ம் தேதியன்று கல்யாணசுந்தரத்தின் துணைவியார் திருமதி. கௌரவாம்பாளையும் மகன் குமார வேலுவையும் சென்னைக்கு வரவழைத்து, வழங்கி மக்கள் கவிஞருக்கு சிறப்பு சேர்த்தார்.*

படிப்பகம்

padippakam



24

# பட்டுக்கோட்டை சில குறிப்பு

**பெயர்** : அ.கல்யாண சுந்தரம்.

**பெற்றோர்** : தந்தை எஸ்.ஆர். அருணாசலம், தாயார் விசாலாட்சி அம்மாள்

**பிறந்த தேதி:** 1930 ஏப்ரல் 13.

**சொந்த ஊர்:** தஞ்சை மாவட்டம் பட்டுக்கோட்டை அருகில் உள்ள 'சங்கம் படைத்தன் காடு'.

**திருமணம்** : புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் தலைமையில் 1.091957-ல் கல்யாணசுந்தரம்-கௌரவாம்பாள் திருமணம் நடைபெற்றது.

**மகன்** : குமாரவேல்.

**வேலை** : பாவேந்தர் பாரதிதாசனின் 'குயில்' பத்திரிகையில் சிறிது காலம் பணியாற்றினார்.

**முதல் பாடல்:** 1954-ல் திண்டுக்கல் விவசாய சங்க மாநாட்டில் நடந்த 'கண்ணின் மணிகள்' என்ற நாடகத்திற்கு பாடல் எழுதிய அந்த நாடகத்தில் ஒரு பாத்திரத்தில் நடித்தார்.

**சகோதரர்** : கணபதி சுந்தரம் (அண்ணன்).

**படிப்பு** : மூன்றாம் வகுப்பு.

**நடிப்பு** : 1948-ல் 'என்தங்கை', 'முதல்ரவுடி', 'கவியின் கனவு' ஆகிய நாடகங்களில் நடித்திருக்கிறார்.

**தொழில்கள்** : செய்த தொழில்கள் 17.

**பட்டம்** : 1959-ல் கோவை முற்போக்கு மன்றம் வழங்கிய பட்டம் மக்கள் கவிஞர்.

படிப்பகம்

padippakam



25

## பாவேந்தர் பாசறையில்...

*"1952-ஆம் ஆண்டு தமிழகத்தில் ஏற்பட்ட கொடும் புயலால் கடலோரமாக உள்ள செங்கம்படுதான்காடு கடுமையாகப் பாதிக்கப் பட்டது. கல்யாணசுந்தரத்தின் வீட்டுக்கூரை பிய்ந்து சுவர்கள் வீழ்ந்தன. இந்த நிலையில் கல்யாணசுந்தரம் நேரடியாக பாரதி தாசனை சந்திக்க பாண்டிச்சேரி சென்றுவிட்டார்.*

*தம்மோடு தங்கும்படி 'குயில்' இதழை வெளியிடும் பணிகளில் ஈடுபடுமாறும் பாரதிதாசன் சொன்னதும் கல்யாண சுந்தரத்திற்கு தேன் கலந்து பால் கலந்து செழுங்கனித் தீஞ்சுவை கலந்து இனித்தது.*

படிப்பகம்

padippakam



## 26

# ஜொள்ளர்களைப் சாடிய பாடல்

“சென்னையில் தங்கியபின் மயிலாப்பூர் கோவிலுக்கு ஒருநாள் நண்பர்களின் வற்புறுத்தலின் காரணமாக சென்று சுற்றிப்பார்த்துக் கொண்டு வரும்போது , நற்பண்பும், குடும்பத்திற்கேற்ற அடக்கமும் நிறைந்த ஒரு இளம்பெண் பயமும், பக்தியும், நாணமும் கொண்டு கோவிலை வலம் வரும் நேரத்தில்,

இறைவணக்கம் செய்ய வந்த ஒருவர் வந்த பணியை மறந்து அவளையே முறைத்த படி நின்று கொண்டும், நடந்து கொண்டும் இருந்தார். என் நண்பர்களும் இவைகளை லேசாக கவனித்தவாறே “இப்படிப்பட்ட நிகழ்ச்சிகளை நீர் பாடுவீரா?” என்று என்னைக் கேட்கவே

**"சீவி முடித்து திருமணக்கும் பொட்டு வைத்து**
**கோவிலைச் சுற்றிவரும் குலமகளே -பாவியரின்**
**கண்ணி லகப்பட்டுக் களங்கம் வராவண்ணம்**
**உன்னை நீ காப்பாற்றிக் கொள்’’**

என்று பாடினேன். இப்படி ஜொள்ளுப் பார்ட்டிகள் பற்றி மக்கள்கவிஞர் கவிதையில் சாடியிருக்கிறார்.

படிப்பகம்

padippakam



## 27

## தற்கொலை முயற்சி

“அளவு கடந்த வறுமையின் காரணமாக பட்டுக்கோட்டை மிகவும் துயரங்களை அடைந்தார்.

வாழ்வதற்கு மேற்கொண்டு எந்த வழியும் தோன்றாமல் போகவே தற்கொலையைத் தவிர வேறு வழியில்லாமல் போய்விட்டது. எனவே சென்னைக் கடற்கரையில் பாரதிதாசனின் சில பாடல்களை ஆவேசமாகப் பாடிக்கொண்டே கடலை நோக்கிப் போனார்.

பாரதிதாசனின் பாடல்களை ஆவேசமாகப் பாடுவதை ராணி மேரி கல்லூரி மாணவி ஒருவர் தன் காரில் இருந்தபடியே ரசித்துக் கொண்டிருந்தார். ஆனால் அவர் தற்கொலை செய்து கொள்வதற் காகத்தான் கடலில் இறங்குகிறார் என்பதை புரிந்து கொண்டதும் கூச்சலிட்டார். அக்கம் பக்கத்திலிருந்து வந்து அவரைக் காப்பாற்றி னார்கள்.

அவரது தற்கொலைக்கு வறுமைதான் காரணம் என்பதை உணர்ந்த ராணி மேரிக்கல்லூரி மாணவி அவருக்கு மாதம் 80 ரூபாய் வீதம் உதவியாக அளித்து வந்தாராம்.

## 28

## பட்டுக்கோட்டையின் வருகைக்குப்பின்

“விளம்பரச் சுவரொட்டியில் பாடலாசிரியர் பெயர் போடத் தொடங்கியது பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்தின் வருகைக்குப் பிறகுதான்.

பாடலாசிரியர் பெயரை சினிமா டைட்டில் பார்த்ததும் ரசிகர்கள் கைத்தட்டல் எழத்தொடங்கியதும் பட்டுக்கோட்டையின் பிரவேசத்திற்குப் பிறகுதான்.

படிப்பகம்

padippakam



29

## இப்போது சிறப்பாக எழுதுகிறேனா?

பிரபலமாவதற்கு முன்பு கல்யாணசுந்தரமும் கலைஞர் கருணாநிதியும் சந்தித்தினர். தமிழ் சினிமா உலகில் தி.மு.க.வினர் ஆதிக்கம் நிலவிய நேரம் அது.

பட்டுக்கோட்டையாரின் பாடல்களைப் பார்த்த கருணாநிதி சொன்னார்: "மேலும் சிறப்பாக எழுதுங்கள் பிறகு சந்தர்ப்பம் தருகிறேன்".

சிலநாட்களில் பட்டுக்கோட்டையின் பாடல்கள் கொண்ட படங்கள் பிரமாதமான வெற்றியைத் தொடங்கியதும் 'புதையல்' படத்திற்குப் பாட்டெழுதும்படி கருணாநிதி கேட்டனுப்பினார்,

"ஓ! இப்போ நான் சிறப்பாக எழுதுகிறேன் போலிருக்கிறது" என்று சிரித்துக் கொண்டே சொன்னாராம் பட்டுக்கோட்டை. இதுதான் கவிஞரின் கம்பீரம் என்பதா...

30

## நெசவாளியைச் சந்தித்து எழுதிய பாடல்

'புதையல்' படத்திற்குப் பாடல் எழுத வேண்டுமென்று கேட்டிருந்தார்கள். எதைப்பற்றி பாட்டு எழுதுவது என்று நீண்ட நேரம் யோசித்து விட்டு கடைசியில் பாரதிதாசனைப் போய்க் கேட்டாராம்.

"ஒரு கைத்தறி நெசவாளியை போய்ப் பார்" என்று பாரதிதாசன் சொன்னாராம். அதன் படி ஒரு நெசவாளியை அணுகி அவர் தறி நெய்யும்போது உடன் இருந்து கவனித்தார். அதன் விளைவாய் எழுதப்பட்டதுதான்.

**"சின்னச் சின்ன இழை**

**பின்னிப்பின்னி வரும்**

**சித்திரைக் கைத்தறி சேலையடி"** என்ற பாடல்.

படிப்பகம்

padippakam



31

# தொழில் மீது கொண்ட பக்தி

'தங்கப்பதுமை' படத்திற்கு ஒரு பாட்டெழுதவேண்டும், சூழ் நிலையைச்சொல்லிவிட்டேன். பாடலாசிரியர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் முதலில் ஒரு பல்லவியை எழுதினார். பொருத் தமாக இல்லை. வேறு எழுதுங்கள் என்றேன். அதுவும் எனக்கு திருப்தி இல்லை,

"சரி வீட்டிற்குப் போய் இன்னொன்று எழுதி வாருங்கள்" என்றேன்.

அன்று இரவு நடுநிசி. வீட்டில் தூங்கிக் கொண்டிருந்தேன். யாரோ கதவைத் தட்டினார்கள். எழுந்துபோய் திறந்தால் பட்டுக் கோட்டை நின்றுகொண்டிருந்தார்.

"என்னய்யா இது. இந்த நேரத்தில்?" என்றேன்.

"ஒரு பல்லவியை எழுதியிருக்கிறேன் பாருங்கள்" என்று காட்டி னார்.

"அட அதற்கு இதுவா நேரம்? நாளைக் காலையில் கொண்டுவந்து காட்டினால்தான் என்ன?" என்றார்.

"இல்லே உங்களுக்குப் பிடிக்கலேன்னா உடன் வேற எழுதலா மேன்னுதான்" என்றார்.

தொழில்மீது அவருக்கு இருந்த ஈடுபாட்டை கண்டு அசந்து போனேன்.

பல்லவியை வாங்கிப்பார்த்தேன். பிடித்திருந்தது. ஓ.கே. செய்தேன். அந்தப் பல்லவிதான்

"மனிதன் ஆரம்பமாவது பெண்ணுக்குள்ளே- அவன்

ஆடி அடங்குவதும் பெண்ணுக்குள்ளே"

-என்கிறார் அந்நாளைய பிரபல டைரக்டர் ஏ.எஸ்.ஏ. சாமி.

படிப்பகம்

padippakam



32

# 34. கன்னிப்பெண்

*“மக்கள் கவிஞர் தனக்குப் பெண்பார்க்க ஆத்திக்கோட்டை கிராமத்திற்கு காரில் சென்று திரும்பும் வழியில் பகலவன் மறையும் வேளையில் கன்னிப் பருவ பெண் ஒருத்தியைப் பார்த்துவிட்டு*

**"தன்னந் தனிமையிலே**
**தமிழ்நாட்டுச் சாலையிலே**
**செந்நெல் கதிர்போல**
**சிரம்தாழ்த்தி வந்தாளே”**

*என்று வாய்விட்டுச் சொன்னார்” என்கிறார் கவிஞரின் நண்பர் ஓவியர் ராமச்சந்திரன்.*

33

# தூங்காதே தம்பி பாடல் தோன்றிய கதை

*“1957 தேர்தலில் தோழர்கள் ஜீவா, மணலி கந்தசாமி, ஏ.எஸ். கே. பி. ராமமூர்த்தி போன்ற அனைவரும் தோற்றனர்.*

*அந்தக் காலத்தில். கவிஞர் சென்னை பிராட்வேயில் உள்ள துறைமுகத்தொழிலாளர்கள் சங்க கட்டிடத்தில் தோழர் ஏ.எஸ். கே.யைப்பார்க்க ஒரு முறை வந்து அவரிடம் தோல்விக்கான காரணம் பற்றி வாதாடிவிட்டு*

*அங்கு உட்கார்ந்தபடியே தீப்பெட்டியைத் தட்டிக்கொண்டு பாடியதுதான். ‘தூங்காதே தம்பி தூங்காதே’ என்ற பாடல் பின்னர் முழுவடிவம் பெற்று ‘நாடோடி மன்னன்’ படத்தில் பாடலாக வந்தது” என்றார் தோழர் தா. பாண்டியன்*

padippakam



## 34

## எம்.ஜி.ஆரின் முயற்சி

*புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர். தயாரித்து இயக்கி நடித்த 'நாடோடி மன்னன்' படத்தை பெரிதாக பேச வைத்த 'தூங்காதே தம்பி தூங்காதே' பாடல் படத்திற்கு முன்பே பிறந்து விட்டது எப்படி?*

"எம்.ஜி.ராமச்சந்திரன் சாகச நாயகனாக உயரப் பட்டுக்கோட்டையின் பாடல்கள் பெரிதும் உதவி செய்தன. 'தூங்காதே தம்பி தூங்காதே', 'சின்னப்பயலே சின்னப் பயலே சேதி கேளடா', 'தாயத்தோ தாயத்து' ஆகிய பாடல்களின் மூலம் எம்.ஜி. ராமச் சந்திரன் புகழ் பெற்றார். பட்டுக்கோட்டையை தி.மு.க.வில் சேர்த்து விட எம்.ஜி.ஆர். ரொம்பவும் பிரயத்தனம் செய்தார். ஆனால் அம்முயற்சி தோல்வியில் முடிந்தது" என்கிறார், அறந்தை நாராயணசாமி.

## 35

## மேடை பேச்சாளி அல்ல அவர்

"பாரதிதாசன் தலைமையில் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரத்தின் திருமணம் நடந்தது. அதில் நானும் கலந்து கொண்டேன். அதற்கு எம்.ஜி.ஆர். அவர்களும் வந்திருந்தார்.

நாங்கள் எல்லோரும் வாழ்த்திப் பேசிய பிறகு கடைசியாக நன்றி கூறுவதற்காக தலைவர் கல்யாண மாப்பிள்ளை கல்யாண சுந்தரத்தை அழைத்தார்.

அவர் எழுந்து நின்று பேசுவதற்காக முயன்றார். பேச்சு வரவில்லை. எல்லோரும் சிரித்தினர். அவரும் சேர்ந்து உரக்க சிரித்து விட்டு உட்கார்ந்து கொண்டார். மேடைப் பேச்சாளி அல்ல அவர்" என்கிறார் தீக்கதிர் ஆசிரியர் கே. முத்தையா.

padippakam



36

## இவ்வளவுதான் கதை

இயக்குனர் ஸ்ரீதர் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரத்திடம் 'கல்யாணப் பரிசு' படத்தின் கதையை விளக்கிக் கூறினாராம்.

அதைக்கேட்ட பட்டுக்கோட்டை உடனே

"காதலே தோல்வியுற்றாள் கன்னியொருத்தி

கலங்குகிறாள் அவனை நெஞ்சில் நிறுத்தி

-இவ்வளவுதானய்யா கதை" என்றாராம்.

இதைக்கேட்டதும் இயக்குனர் ஸ்ரீதர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்தை கட்டித்தழுவி இதையே பாட்டாக எழுதித் தருமாறு கேட்டாராம்.

37

## அப்பத் தெரியலை

"பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரமும் மு. அண்ணாமலையும் கொஞ்சநாள் எங்கிட்ட புதுச்சேரியில் இருந்தாங்க, இரண்டு பேரும் என்பாட்டை பேர்த்து எழுதுவானுங்க.

பட்டுக்கோட்டை இருக்கானே ரொம்ப அமைதி என் எதிரிலேயே பயபக்தியோட வாய்கூடத் திறக்காம உட்கார்ந்து இருப்பான்.

என்கிட்டே அளவு கடந்த மரியாதை எதை எழுதினாலும் பாரதிதாசன் வாழ்கன்னு மேலே போட்டுத்தான் எழுதுவான். அவன் இவ்வளவு வேகமா வளருவான்னு நான் அப்ப நெனைக்கலை. அந்த அறிகுறி அப்ப எதுவும் தெரியலை" என்கிறார் பாரதிதாசன்

படிப்பகம்

padippakam



38

# தன்னடக்கமே அவர்

இறுதிக் காலத்தில் ஒரு பாடலுக்கு ஓராயிரம் ரூபாய் வீதம் பெற்றார் அவர். அதுவும் அவர் நிர்ணயித்த சன்மானம் தான் அது.

ஆனால் திரைப்படத் தொழிலதிபர்களோ நமது கவிஞரிடம் தொகை எழுதாத செக் புத்தகத்தை கொடுத்து இஷ்டம் போல் எழுதிக் கொள்ளச் சொன்னார்கள். திரைப்பட உலகில் அவ்வளவு மதிப்பேறி நின்றன அவருடைய பாடல்கள்.

"பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்தின் சிறப்பியல்புகள் இரண்டு. ஒன்று பாட்டு, மற்றொன்று பண்பு. நான் உடல்நலக் குறைவால் சமீபத்தில் குற்றாலம் சென்றிருந்தேன். திரும்பி வரும் போது குற்றாலக் குறவஞ்சி ஒன்று வாங்கி வருமாறு கவிஞர் கடிதம் எழுதினார். வாங்கி வந்தேன்.

அந்தப் புத்தகத்தில் அன்புத் தம்பி கவிஞர் கல்யாணசுந்தரத்திற்கு என்று எழுதினேன். அது கண்ட அவர் நான் என்ன கவிஞர் ஆகி விட்டேனா? என்று கேட்டது, அவரது அசாத்திய தன்னடக்கத்தை தான் காட்டுகிறது.

இவர் மாதிரி இவ்வளவு செல்வாக்கும், புகழும், வரவேற்பும் இருந்தால் மற்றவர்களுக்கு மண்டை எவ்வளவு வீங்கியிருக்கும் பாருங்கள்."

படிப்பகம்

padippakam



## 39

# அவர் மனைவிக்கு பிடித்த பாட்டு

*ஒரு சமயம் கவிஞரின் துணைவியாரிடம் பத்திகையாளர் கே. ீவாபாரதி கேட்டார் “மக்கள் கவிஞரின் பாடல்களில் உங்களுக்குப் டித்த பாடல் எது?”*

*“அவர் பாட்டுல எல்லாந்தான் எனக்குப் பிடிக்கும் ‘இரைபோடும் னிதருக்கே இரையாகும் வெள்ளாடே!’ என்ற பாட்டு எனக்கு ராம்பவும் பிடிக்கும்.*

*ஆனா ஒவ்வொரு வருஷமும் தீபாவளி அன்னிக்கு காலையில ரடியோவில ‘உன்னைக் கண்டு நான் ஆட என்னைக் கண்டு நீ ஆட’ என்ற பாட்டு கேட்கும் போதெல்லாம் என்னை அறியாமல் ண்ணுல தண்ணி வந்திடும்,*

*ஒவ்வொரு வருஷமும் தீபாவளிக்கு அவர் இல்லையென்ற யரத்தை இந்தப் பாட்டு எனக்கு ஏற்படுத்திவிடும்.” என்றாராம்.*

படிப்பகம்

padippakam



40

# அன்பான கணவர்

உங்களிடம் கணவர் என்ற முறையில் கவிஞர் எப்படி நடந்து கொண்டார்? என்ற கேள்விக்கு,

"ரொம்ப அன்பாத்தான் நடந்தார். ஆனா அவருக்கு நேரமிருக்காது, சின்ன வயசிலே என்னை அவருக்கு கட்டி வச்சி மெட்ராசுக்கு அனுப்பிட்டாங்க. ராயப்பேட்டையில்தான் வாடகை வீடு. எல்லா இடமுமே எனக்கு புதுசு.

அப்பா, அம்மா ஊரு ஞாபகம் எல்லாம் சேர்ந்து எனக்கு சுரம் வந்துடுச்சு, சுரம் வந்த காரணத்தைப் புரிஞ்சிக்கிட்ட அவர் ஏன் இப்படி இருக்கேன்னு என்னை திட்டிக்கிட்டு இருந்தாரு, அப்ப அங்க வந்த அவங்க அண்ணன், "ஏப்பா சின்னப்பொண்ணை திட்டுற?" ன்னு கேட்டாரு.

அப்ப "எதுக்குண்ணே சின்னப் பொண்ணை கட்டி வச்சீங்கன்னு கேட்டு அவர் சிரிக்க" அவரோடு சேர்ந்து நாங்களும் சிரிக்க ஒரே சிரிப்புதான்.

இந்தச் சம்பவத்துக்குப் பிறகு அவர் எப்போதும் என்ன பேர் சொல்லிக் கூப்பிட்டது இல்ல... கடைசி வரைக்கும் 'சின்னப் பொண்ணு'ன்னு கூப்பிட்டார் என்கிறார் மக்கள் கவிஞரின் மனைவி.

படிப்பகம்

padippakam



41

# பல்லவி கொடுத்த மனைவி

'கல்யாணப் பரிசு' படத்தில் ஒரு பாடலுக்கு நீங்கதான் பல்லவி எழுதியதாகச் சொல்கிறார்களே? மக்கள் கவிஞரின் துணைவியாரிடம் பத்திரிகையாளர் கே. ஜீவபாரதி கேட்டதற்கு,

"உண்மைதான், அப்ப நாங்க மெட்ராஸ்ல இருந்தோம். எங்க அக்கா (கவிஞரின் அண்ணன் கணபதி சுந்தரத்தின் மனைவி) வுக்கு வளைகாப்புக்காக நாங்க இங்க வந்தோம். வளைகாப்பெல்லாம் முடிஞ்சு சொந்தக்காரங்க ஊர்களுக்குப் போய்ட்டாங்க.

மறுநாள் காலையில் நானும் அக்காவும் ஒரு ரூமில இருந்தோம். அங்கு வந்த அவர் நேத்து நடந்த வளைகாப்பைப் பத்தி ஒரு பாட்டு எழுதி வையுங்க, 'கல்யாணப் பரிசு' படத்துக்குத் தேவைன்னு சொல்லிட்டு தோட்டத்துக்குப் போயிட்டாரு. அக்கா அதை தமாஷா எடுத்துக்கிட்டாங்க. ஆனா என்னால அப்படி இருக்க முடியவில்லை. வந்து திட்டுவாரே என்ற பயத்தில.

**"அக்காவுக்கு வளைகாப்பு**

**அத்தானுக்கு இடுப்பு வலின்னு"**

இரண்டு வரிகளை எழுதி வச்சேன். கொஞ்ச நேரம் கழிச்சு வந்தார். அக்காவிடம் பாட்டு எழுதினீங்களா?ன்னு கேட்க உங்களுக்கு வேற வேலையே இல்லேன்னு சொல்லிச் சிரிச்சாங்க. என்னக் கேட்டாங்க, நான் எழுதிய ரெண்டு வரிகளைக் காட்டினேன். அடடே! பரவாயில்லையே! என்று பாராட்டினார். அந்த ரெண்டு வரிகளைத்தான் கல்யாணப் பரிசு படத்தில.

**'அக்காவுக்கு வளைகாப்பு**

**அத்தான் முகத்திலே புன் சிரிப்பு!'** ன்னு மாத்தி எழுதினாரு என்கிறார் மக்கள் கவிஞரின் மனைவி.

படிப்பகம்

padippakam



42

# மேடைகளில் பாட்டு பாடுவார்

**உ**தயகுமார் எழுதிய பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் பாடல்கள் ஒரு திறனாய்வு என்ற நூலுக்கு முன்னுரை எழுதிய கலைஞர் கருணாநிதி, “நான் பேசும் கழகக் கூட்டங்களில் சிறுவன் பட்டுக்கோட்டை பாடுவார். என்று குறிப்பிட்டிருக்கிறார், அதைப் பற்றி... என்று கவிஞரின் நண்பர் ரத்தினம் பிள்ளையிடம் பத்திரிகையாளர் ஜீவபாரதி கேட்டபோது...

“ஆரம்ப காலத்தில் நாங்க எல்லோருமே சுயமரியாதை இயக்கத்தில் தான் இருந்தோம். சுத்து வட்டாரத்திலே எங்க கூட்டம் நடந்தாலும் நான் போவேன். அவனும் கூட்டத்திற்கு வருவான், சிலசமயம் நடந்தே கூட வந்திருக்கான்.

கணபதி எழுதிய சுயமரியாதைப் பாடல்கள் மேடையில் பாடுவான். அணைக்காடு டேவிட்டோட எங்களுக்குத் தொடர்பு ஏற்பட்டுச்சு. எங்க அப்பா இறந்ததுக்கு நடந்த ஒரு கூட்டத்தில் கருணாநிதியைப் பேச அழைச்சிருந்தோம். அந்தக் கூட்டத்தில் கல்யாணம் பாடினான். அதுக்கப்புறம் கலைஞர் பேசினார். அது எங்க குடும்ப நிகழ்ச்சி.

எனக்குத் தெரிய பல கூட்டங்களில் கல்யாணம் பாடியிருக்கான். ஆனா இந்த ஒரு நிகழ்ச்சியைத் தவிர கலைஞர் கூட்டத்தில் கல்யாணம் பாடியதா எனக்கு ஞாகபம் இல்லை.” என்கிறார்.

படிப்பகம்

padippakam



# 43

# என்றும் மறவாத கவிஞர்

"ஒரு முறை கல்யாணம் இருந்த ராயப்பேட்டை வீட்ல காலையில வராண்டாவில் உட்கார்ந்திருந்தேன், அப்ப அவனைப் பார்க்க வேலுமணி, கொத்தமங்கலம் சுப்பு, இன்னும் இதுபோன்ற சினிமா உலகப் பெரும்புள்ளிகளெல்லாம் அவனுக்காக காத்திருந்தார்கள்.

கல்யாணம் எப்பவும் வீட்டுக்குள்ளிருந்து வரும்போது பாட்டெழுதிய பேப்பர்கள் வச்சிருக்கிற பேடில தாளம் போட்டுக்கிட்டுப் பாடிக்கிட்டேதான் வெளியே வருவான். அன்னைக்கும் அப்படித்தான் வந்தான். அவன் குரலைக் கேட்டு வேலுமணி, கொத்தமங்கலம் சுப்புலிருந்து எல்லாருமே எந்திருச்சி நின்னாங்க. நான் எந்திருப்பதா, வேண்டாம்மான்னு யோசிச்சிட்டிருந்தப்ப கல்யாணம் வந்திட்டான்.

வந்தவன் என்னைப் பார்த்து நம்ம ஊர்ல கூக்கு கதிருக்கப் போயி முடியாம பாதில நான் வந்ததுக்கு எங்க அப்பா போட்டு என்ன அடிச்சது ஒங்களுக்கு நினைவிருக்கா. அது ஒரு காலம்... இப்ப என்னைப் பார்த்து வேலுமணி கொத்தமங்கலம் சுப்பெல்லாம் எழுந்து நிற்கிறது ஒரு காலம்னு சொல்லிட்டு அவன் சிரிக்க. அவனோடு சேர்ந்து அனைவரும் சிரிக்க ஒரே சிரிப்பு. அப்புறம் கொத்தமங்கலம் சுப்பு கார்ல போயிட்டான், அவனைப் பொறுத்த வரைக்கும் எந்த இடத்திலும் எவர் மத்தியிலும் தான் பட்ட கஷ்டங்களைச் சொல்ல வெக்கப்பட மாட்டான். இது போன்ற சம்பவங்களை பல தடவை நான் பார்த்திருக்கேன்" என்று மறவாத கவிஞரின் பண்பை சொல்கிறார் ரத்தினம் பிள்ளை.

படிப்பகம்

padippakam



44

# கவிஞர் செய்த உதவி

"ஒருநாள் என்னை சென்னைக்குப் புறப்பட்டு வரும்படி கல்யாணம் தந்தி கொடுத்திருந்தான், நான் போனேன். அவன் வீட்டு வாசல்ல ஒரு புது மோட்டார் சைக்கிள் நின்னுச்சு. கல்யாணம் அதக்காட்டி கட்சி வேலைக்கும் சொந்த வேலைக்கும் அதிகமாக சுத்துறீங்க. இது உங்களுக்கு பயன்படும் அதுக்காகத்தான் தந்தி கொடுத்திருந்தேன். அப்படின்னு சொன்னான்.

"இதற்குப் பெட்ரோல் வாங்கி ஊத்துறதுக்கு என்னால முடியாது அதனால ஒரு சைக்கிள்கடை வச்சுக்கொடு. அதிலிருந்து வர்ற வருமானத்தில் சமாளிச்சுக்கிறேன்"ன்னு சொன்னேன்.

20 சைக்கிள் வாங்கிக் கொடுத்தான். முக்கூட்டு ரோட்ல சைக்கிள் கடை வச்சேன். அதில வந்த வருமானத்திலே அவன் கொடுத்த மோட்டார் சைக்கிளுக்கு பெட்ரோல் போட்டு பயன்படுத்தினேன். அவன் இறந்திட்டான்ற தந்தி வந்தபோது அந்த மோட்டார் சைக்கிளில்தான் மன்னார்குடிக்குப் போயி அங்கிருந்து மெட்ராஸுக்கு மத்தவங்களோட சேர்ந்து போனேன்.

அந்த வண்டி தவணை முறையில் வாங்கிக் கொடுத்தான்றதும் 9 மாசத்துக்கு பணம் கட்டி மீதி 4 மாசம் பணம் கட்டணும்றதும் அதுக் குப் பின்னாலதான் எனக்குத் தெரிஞ்சது" -இப்படி கவிஞர் செய்த உதவியை சொல்கிறார் நண்பர் ரத்தினம் பிள்ளை.

படிப்பகம்

padippakam



45

# மரியாதைக்குரிய கவிஞர்

'**நா**டோடி மன்னனு'க்குப் பாட்டெழுதும் போது ராமாவரம் தோட்டத்துக்கு என்னை கூட்டிட்டுப் போனான். அங்க எம்.ஜி.ஆர். இல்ல, கார்லவந்து நானும் அவனும் இறங்கினோம். அவனைக் கண்டதும் எல்லோரும் எழுந்து நின்னாங்க. அங்கிருந்த சேர்ல என்னைக் உட்காரச்சொல்லிவிட்டு அவன் நின்னுகிட்டே அங்கிருந்த எல்லார்கிட்டேயும்.

இவர் எனக்கு அண்ணன். நான் வறுமையில் இருந்தப்ப உதவி செஞ்சவரு இவர்தான். அப்படி இப்படின்னு சொல்லிக்கிட்டு இருந்தான். அவனும் உட்காரல, அதனால மத்தவங்களும் உட்காரல. அப்புறம் வீட்டுக்கு வரும்போது, 'அவன் கிட்டே இனிமே உன்கூட இப்படிப்பட்ட இடத்துக்கு நான் வரமாட்டேன்'னு சொன்னேன்.

'ஏன்'னு கேட்டான். 'அங்க இருந்தவங்க உனக்கு மரியாதைக் கொடுத்தாங்க. நீ எனக்கு மரியாத கொடுக்கிறது ஒரு மாதிரியா இருக்குன்'னு சொன்னேன். அதுதான் நான் அவனோட முதலும் கடைசியுமா போனது" என கலங்குகிறார் கவிஞரின் நண்பர்.

படிப்பகம்

padippakam



46

## கவிஞரின் படிப்பு

தமிழகம் போற்றும் மக்கள் கவிஞர் எதுவரை படித்திருக்கிறார் பலரின் எதிர்பார்ப்பான கேள்வி:

"என் தம்பி ரெண்டாவது வரைதான் படிச்சான். அப்புறம் நான் எழுதிக் கொடுக்கும் சுயமரியாதைப் பாடல்களை மேடைகளில் பாடினான். அப்ப அவனுக்கு எட்டு வயசிருக்கும். எங்க குடும்பத்தில் எல்லோரும் அவன் மேலே பாசமா இருப்போம். அவன் பெரியவனாக ஆன பின்னும்கூட அவனுக்கு நான் வேட்டி கட்டி விட்டிருக்கேன். என்னோட பாடல்களைப் பாடிக்கிட்டிருந்த அவன் ஒரு நாள் கவிஞனாகி விட்டான்.

47

## ராஜகுரு சுந்தரம்

"சின்ன வயசிலிருந்து அவனுக்கு (பட்டுக்கோட்டையாருக்கு) நடிக்கத்தான் ஆசை. நான் பணம் சம்பாதிக்க 1948 கடைசியில சினிமாவுக்குப் போனேன். அப்ப நடிகர் டி.எஸ். துரைராஜிடம் சிபாரிசுக் கடிதம் வாங்கிக்கிட்டுப் போய் சக்தி நாடக சபாவில் சேர்ந்திருக்கிறான்.

அங்க 'டி.எஸ்.பி.', 'என் தங்கை', 'முதல் ரவுடி', 'கவியின் கனவு' ஆகிய நாடகங்களில் நடிச்சிருக்கான். 'கவியின் கனவு' நாடகத்தில் ராஜகுரு வேஷத்தில் ரொம்ப நல்ல நடிச்சதால அவனுக்கு ராஜ குரு சுந்தரம்ன்னு பேர் வந்திடுச்சு" என்கிறார் அவரது அண்ணன்.

படிப்பகம்

padippakam



## 48

# கவிஞரைப் பற்றிய சிறப்பு

அப்ப நாங்க ராயப்பேட்டை பொன்னுசாமி நாயக்கர் தெரு 10-ம் நம்பர் வீட்டுல இருந்தோம். ஓய்வுநேரத்தில் நான் ஓவியம் வரைவேன். சிரமமான படம் ஒன்றை கொடுத்து பெரிய படமா வரைஞ்சிக்கிட்டிருந்தேன், அது ரொம்ப ரிஸ்கான வேலை.

என் கவனத்தையெல்லாம் அதில செலுத்தியிருந்தேன். பின்னா லிருந்து தொண்டையை கனைக்கிற சத்தம் கேட்டது. திரும்பிப் பார்த்தேன். தம்பி நின்னுட்டிருந்தான். ‘வேலை செஞ்சிக்கிட்டிருக் கேன்ல என்ன கனைப்பு வேண்டியிருக்கு’ ன்னு சொன்னேன்.

‘நாங்க ஒண்ணும் சும்மா கனைக்கலை, சங்கீதத்துக்கு ஒத்திகைப் பார்க்கிறோம்’னு அவன் சொல்ல...

‘அத மாடியில போய்ப்பாரு! இங்க வேலையைக் கெடுக்காதேன்’னு நான்சொல்ல.

‘பெரிய ஓவியம்? நான் போடாத ஓவியமா? நான் அப்ப போட்ட தத்தான் நீ இப்ப போட்டிக்கிட்டிருக்கே’ன்னு அவன் சொல்ல

‘ஆமாப்பா! நீ அப்ப ஓவியம் போட்டே நான் இல்லேன்னு சொல்லலே ... ஆனா நான் அப்ப எழுதின கவிதையைதானே நீ இப்ப எழுதிக்கிட்டிருக்கன்னு’நான் சொல்ல.

‘அப்ப நீ எழுதின... இப்ப ஒரு பாட்டு ஒன்னால எழுத முடியுமா?’ ன்னு அவன் கேட்க.

படிப்பகம்

padippakam



*'என்னடா பெரிய பாட்டு ஒரு பல்லவியைக் கொடுடா நான் பாட்ட முடிச்சுக் கொடுக்கற'ன்னு சொல்லிட்டு அவன் கையிருந்த பைலை வாங்கிப் புரட்டினேன், ஒரு பேப்பர்ல.*

**"தகரக்குவளை கொண்டு**

**தாளநடை பயின்று**

**நகரத்து வீதியில் வந்தனள்"**

*-என்று அவன் எழுதியிருந்த பேப்பர மட்டும் எடுத்துக்கிட்டு அரைமணி நேரத்தில மீதிய எழுதி வைக்கிறேன். வந்து வாங்கிட்டுப் போ'ன்னு நான் சொன்னவுடன் தம்பி போயிட்டான்.*

**மூன்று வரியோட நின்ன அவனோட பாட்ட.**

**"தகரக்குவளை கொண்டு**

**தாளநடை பயின்று**

**நகரத்து வீதியில் வந்தனள்- அவள்**

**நிகரற்ற ஓவியம் போன்றவள்-பல**

**ஒட்டுத் துணிகளாலே**

**தைத்த கலர் புடவை**

**உலகம்படம் பிடித்துக் காட்டுது -அதன்**

**ஓரம் கிழித் தெங்கும் கூட்டுது- அந்த**

**மங்கை மனது வந்து**

**செங்கை உதறி நின்று**

**மயிலொத்த சாயல் ஆடினாள் -இசைக்**

**குயிலுக்கும் மேலாகப் பாடினாள்!"**

*என்று முடித்திருந்தேன். தம்பி வந்து படிச்சுப் பார்த்துட்டு 'இதில தப்பு இருக்கேன்னான்.'*

*'என்ன தப்பு?' இதுநான்*

*'ஓரம் கிழிந்தெங்கும் கூட்டுது ன்னா அரண்மனையிலும் அந்தப் புரத்திலும் ராஜசபையிலும் இந்தக் கிழிந்த ஓரம் கூட்டுமா'ன்னு கேட்டான்.*

padippakam



*இந்தக் கேள்வியால் நான் திகைச்சு சரி! சரி நீயே அதுக்குச் சரியான வார்த்தையைச் சொல்லு பார்க்கலாம்ன்னு கேட்டவுடனேயே 'ஓரம் கிழிந்து தெருக்கூட்டுது'ன்னு சொன்னான்*

*'நல்ல திருத்தந்தான்...ஆனா ஒரு மாத்திரை கூடுதே' ன்னேன். இது சிந்து அது சிந்தும் அதனால்தான் அது சிந்துநடைன்னு சொல்லிட்டு,*

**"அன்புரசம் நிறைந்த**
**அமுதக்கலசம் காட்டி**
**-ஆனந்தம் இந்தாவென்று அழைப்பாள் கையை**
**வானவில்லைப்போல வளைப்பான் அந்த**
**கத்தும் கடல் கொடுத்த**
**காட்சி எனும் அந்தப் பற்களும் -தமிழ்**
**சாட்சி சொல்ல சிந்தும் சொற்களும் தன்**
**துள்ளும் எழிற்கெண்டை**
**யான விழிரெண்டை**
**சொல்லுக் கணையாக விடுவாள் அன்பு**
**உள்ளத்திலே வந்து தொடுவாள்"**

*என்று அடுத்த சரணத்தைப் பாடி முடித்தான்" என்று தம்பியை அண்ணன் புகழ்கிறார்.*

படிப்பகம்

padippakam



49

# தம்பியின் ஆற்றல்

மீண்டும் ஒரு முறை நான் எழுதியதைப் படித்த தம்பி, 'நிகரற்ற ஓவியம் போன்றவள்ன்னு சொல்லியிருக்கியே அப்ப காவியம் என்னவானது?' என்று கேட்டான்.

'காவியம் எழுதி வைக்கலாம், படிக்கத் தெரிஞ்சவங்க படிச்சு ரசிக்கலாம். ஆனா ஓவியம் அப்படி இல்லடா, ஒரு பூங்கொத்த நேர்த்தியா வரைஞ்சா அதைப்பார்த்திட்டு வண்டுகூட உட்கார வரும்...

அழகான பூங்காவை வரைஞ்சு வச்சா அந்தப் பக்கம் போற மாடு கூட அதில இருக்கிற புல்லைக்கடிக்க வந்து ஏமாந்து போகும்' ன்னு நாங்க காரசாரமாக பேசிக்கிட்டிருந்தப்ப ஏ. வீரப்பன் அங்க வந்தாரு. நடந்த வாக்குவாதத்தை கேட்ட அவரு,

"ஓவியம் அண்ணன் காவியம் தம்பி"ன்னாரு

"நான் அண்ணனா இருக்கிறதால அப்படிச்சொல்லிறீங்களா?" என்று நான் கேட்க.

"இல்லையில்லை ஓவியம்தான் அண்ணன், காவியந்தான் தம்பி" என்று அவர் சொல்ல மூவரும் சேர்ந்து சிரித்து மகிழ்ந்தோம்.

ஆனா நான் எழுதிய வரியில உள்ள குறையைச் சொல்லி மாற்று வரியும் சொல்லி உடனே அடுத்த சரணத்தையும் எழுதிக்காட்டிய என் தம்பியின் ஆற்றலை நினைச்சு நான் பெருமிதம் அடைந்தேன்" என்கிறார் மக்கள் கவிஞரின் அண்ணன் கணபதி.

படிப்பகம்

padippakam



50

# நேர்மையான கவிஞர்

“1946-ம் ஆண்டு என்று நினைக்கிறேன். பட்டுக்கோட்டை மணிக்கூண்டுக்கு அருகில் நைனார் பிரஸும் எதிரில் கம்யூனிஸ்ட் கட்சி ஆபீசும் இருந்தது. நான் அடிக்கடி அந்த அச்சகத்திற்கு சென்று வருவேன். கும்பகோணம் குருசாமி தாஸ் கிராமியப் பாடல்களைப் போன்று எழுதி அச்சிட்டு அவற்றைக் கோவில் விழாக்களில் விற்று வருவது வழக்கம்.

அதுபோன்ற பாட்டு புத்தகத்த அச்சுக்குக் கொடுத்த ஒருவர் அதில் 25 பிரதிகளை கொடுக்கும்படியும் விற்றுப் பணத்தைச் செலுத்திவிடுவ தாகவும் கூறினார். அச்சக உரிமையாளர், பணம் கொடுத்தால் தான் புத்தகத்தை கொடுக்க முடியும் என்று கூறிவிட்டார்.

அச்சுக்கு கொடுத்தவருக்கோ கையில் காசில்லை. இருவரும் வாதாடிக் கொண்டிருந்தனர். அப்போது நான் தலையிட்டு 25 பிரதிகளை கொடுத்தனுப்பும் படி அச்சு உரிமையாளரிடம் கூற அவ ரும் கொடுத்தனுப்பினார். அதன் பின்பு 500 புத்தகங்களையும் விற்று ஒழுங்காக அச்சகத்திற்கு சேரவேண்டிய பணத்தையும் கட்டியிருக் கிறார்.

ஒருநாள் அச்சக உரிமையாளர் அந்த இளைஞரின் நேர்மை யையும், பாட்டெழுதும், திறமையையும் என்னிடத்தில் புகழ்ந்து பேசினார்.அந்த இளைஞர்தான் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம். இதுதான் எங்களுடைய முதல் சந்திப்பு.” கவிஞரின் நண்பர் எம். மாசிலாமணி சொல்கிறார்.

படிப்பகம்

padippakam



51

# கட்சி ஆபீஸ் துவங்க ஆசை

*"கவிஞர் தன்னுடைய திருமண நிச்சயதார்த்த நிகழ்ச்சிக்காக ஆத்திக்கோட்டைக்கு வந்திருக்கிறார். இரண்டாவது நாள் முடிந்து நகரிலிருந்த கட்சி ஆபிஸுக்கு காலையில் போனேன். அங்கு யாரோ படுத்திருப்பதைப் பார்த்த நான் "யாருய்யா இது இங்க தூங்கிறது இது என்ன சத்திரமா சாவடியா"ன்னு சத்தம் போட்டேன்.*

*"நாந்தாண்ணே என்று குரல் கொடுத்தபடி எழுந்தார் பட்டுக்கோட்டை "ஏன் இங்க படுத்திருக்கீங்க... வீட்டுக்கு வந்திருக்கலாமே!" என்று நான் கேட்க. தந்தி கொடுக்கணும், கடிதம் எழுதணும், அதோட நம்ம பார்ட்டி ஆபீசுல படுக்கணும்னு ரொம்ப நாளா ஆசை. ..... அதுதான் இங்க வந்து படுத்தேன்னு சொன்னார்.*

*கட்சி அலுவலகத்தின்மீது அவருக்கு இருந்த பற்றை நினைச்சு நான் திகைத்து விட்டேன்" என்கிறார் மாசிலாமணி.*

படிப்பகம்

padippakam



52

# பட்டு வேட்டியுடன் வரத் தயக்கம்

“கீரமங்கலத்தில் விவசாயிகள் மாநாடு நடத்தவேண்டும். கட்சியில் பண நெருக்கடி, கவிஞர் செல்வாக்குடன் இருந்த காலம் அது. அவருடைய செல்வாக்கைப் பயன்படுத்தி மாநாட்டுச் செலவுக்கு பணம் வசூலிப்பதென முடிவெடுத்தோம், அதன்படி மாநாட்டில் சிவராமன் நாடக மன்றம் நடத்தும் நாடகத்துக்கு கவிஞரைத் தலைமை ஏற்க அழைத்திருந்தோம். அவருக்கிருந்த வேலைகளுக்கு இடையிலேயும் கீரமங்கலத்திற்கு வந்து டிஓஆர்.சந்திரன் வீட்டில் தங்கியிருந்தார். நிகழ்ச்சி ஆரம்பிக்க கவிஞரை அழைத்து வர அந்த வீட்டிற்கு சென்றேன். பட்டுவேட்டி சட்டையைக்காட்டி “இதப்போட்டுக்கிட்டு நிகழ்ச்சிக்கு வரட்டுமா?”ன்னு கவிஞர் கேட்டார்.

“ஏன் அப்படிக் கேட்கிறீங்க” ன்னு நான் கேட்டேன். ‘இல்லை விவசாயிகள் பட்டியினில் வாடும்போது நீ பட்டு வேட்டி கட்டிக்கிட்டு போகாத, தோழர் மாசிலாமணி கண்டிப்பார்’ ன்னு சென்னையிலேயே தோழர் மாயாண்டி பாரதி கூறினார். அதனால் தான் கேட்டேன்”என்றார்.

பட்டுச்சட்டை போடுறது தப்பில்லை, பாமர மக்கள் மறந்திரக் கூடாது நீங்க மறந்திருந்தா இந்த மாநாட்டுக்கே வந்திருக்கமாட்டீங் களே! உங்களோட உள்ளம் எங்களுக்கும் ஏழை மக்களுக்கும் தெரியும். அதனால சும்மா போட்டுக்குங்க தப்பில்லை” ன்னு நான்சொன்ன பின்னாலதான் கவிஞர் பட்டாடையைப் போட்டுக் கொண்டார்.

படிப்பகம்

padippakam



*மேடையில் ஏறி நாடகத்திற்குத் தலைமை தாங்கி ஓரிருநிமிடம் பேசிவிட்டு பாடத் தொடங்கிவிட்டார். அவருக்கு மேடையில் பேசத்தெரியாது, சுமார் ஆறெழு பாடல்களைப் பாடினார். ஜனங் களும் ஆரவராம் செய்து பாடல்களை ரசித்தனர். மாநாட்டில் ரூ.3000 தான் கிடைக்குமென எதிர்பார்த்தோம். ஆனால் எல்லாச் செலவு களும் போக ரூ.5000 மிச்சம் கிடைத்தது. தஞ்சை மாவட்டத்தில் இவ்வளவு மிச்சம் இருக்குமளவுக்கு எந்த மாநாடும் நடந்ததில்லை" என்று கவிஞரின் பெருமையையும், சிறப்பையும் சொல்கிறார் மாசிலாமணி.*

53

# பட்டுப் புடவையுடன் சென்ற கவிஞர்

*"ஒருமுறை ஜீவா வீட்டிற்கு கவிஞர் சென்றிருக்கிறார். வீட்டிற் குள் சத்தம் கேட்கிறது, ஜீவாவும் அவர் மனைவியும் ஆவேசமாகப் பேசிக்கொள்கிறார்கள்.*

*நீண்ட நாட்களாக ஜீவாவிடம் அவர் மனைவி பட்டுப்புடவை கேட்டிருக்கிறார். அதை வாங்கிக்கொடுக்காததால் வந்த சத்தமே இது. இதைப்புரிந்து கொண்ட கவிஞர் மறுநாள் ஜீவா வீட்டிற்கு பட்டுப்புடவையுடன் சென்றிருக்கிறார். ஜீவாமீது கவிஞருக்கு அளவுகடந்த மதிப்பும், மரியாதையும் உண்டு" இப்படி ஜீவாமீது கவிஞர் கொண்டிருந்த அன்பைச் சொல்கிறார் தோழர் எம். மாசிலாமணி.*

படிப்பகம்

padippakam



54

# பிரச்சாரத்துக்கு வருவேன்

"1942-லிருந்து 1953 வரை இந்த மாவட்டத்தில் நடந்த பல்வேறு போராட்டங்களில் ஈடுபட்டு 83 தோழர்கள் இறந்திருக்காங்க. அவங்களைப் பற்றி உழைக்கும் மக்கள் பாடுவதற்கு கும்மி, நாடோடி பாட்டு வடிவத்தில் பாட்டுகள் எழுதித் தரும்படி கவிஞரிடம் கூறினேன். அவரும் எழுதத்தொடங்கி விட்டதாக கூறினார்.

1957 தேர்தல்ல கம்யூனிஸ்ட் கட்சியின் முக்கியத் தலைவர்கள் தோற்றனர். தோல்விக்குக் காரணத்தை கவிஞர் என்னிடம் விவாதித்தார். தேர்தல் வெற்றிபெறாவிட்டாலும் நம்முடைய கருத்துக்களை மக்களிடம் எடுத்துச் சொல்ல இந்தத் தேர்தல் பயன்படுவது பற்றியும் நமக்கிருக்கிற வாய்ப்பு வசதியில் இவ்வளவு செய்ய முடிந்தது என்றும் சொன்னேன்.

"சரி!சரி! அடுத்த தேர்தலுக்கு நான் பிரச்சாரத்திற்கு வருகிறேன். டேப் அடிச்சு ஜனங்களைத் திரட்டி நம்ம தோழர்களை ஜெயிக்க வைக்க முயற்சிக்கிறேன்" என்றார் .

அடுத்த தேர்தல் வந்தது. ஆனால், மக்கள் கவிஞர் திரும்பி வரமுடியாத இடத்திற்குச் சென்று விட்டார்" எனக் கண் கலங்குகிறார் தோழர் மாசிலாமணி.

படிப்பகம்

padippakam



55

# பசுமாட்டிடம் பேசும் கவிஞர்

"பட்டுக்கோட்டையாருக்கு கல்யாணம் நடப்பதற்கு முன் நடந்த சம்பவம் இது... கொம்பொடிந்த ஒரு பசுமாடு பகலெல்லாம் எங்கெங்கோ சுற்றிவிட்டு இரவு பட்டுக்கோட்டையார் வீட்டின் முன் வந்து படுத்துக்கொள்ளும்.

வெளியில் சென்று விட்டு வீடு திரும்பும் பட்டுக்கோட்டை அந்த மாட்டிற்காக இரண்டு வாழைப்பழம் வாங்கி வருவது வழக்கம். ஒருநாள் அந்தப் பழங்களை மாட்டிற்குக் கொடுத்துக்கொண்டே 'நான் ஊரெல்லாம் சுத்தினே நா (ன்) ...ஒரு பயலும் சரியில்லை...வீண் அலைச்சல்தான்...ஓங்க பாடு எப்படி? எங்கெங்கே சுத்தினீங்க? அலைச்சலுக்குப் பலன் கிடைச்சதான்னு' பசுமாட்டோட பேசிக் கிட்டிருந்ததை நான் பார்த்துட்டேன்.

"என்ன ஜீ அதோட பேசிக்கிட்டிருக்கீங்க?"ன்னு கேட்டேன். "மத்தவங்க கிட்டே பேசினா பதில் சொல்லிடுவாங்க...அதிலே வேண்டியதும் இருக்கும், வேண்டாததும் இருக்கும். ...எதுக்கு வம்புன்னுதான் இதுகிட்டே பேசிக்கிட்டிருக்கேன்"ன்னு சொல்லி சிரித்தார். பசுமாடுகளைப் பார்க்கும்போதெல்லாம் இந்த நிகழ்ச்சி என் முன் நிழலாடும்" என்கிறார் மக்கள் கவிஞரின் நண்பர் கவிஞர் இரா. பழனிச்சாமி.

படிப்பகம்

padippakam



56

# கவிஞருக்கு செய்த உதவி

"பட்டுக்கோட்டை 'எனக்கு தலைவலிக்கு', 'உலகம் சிரிக்குது' படத்தில் ஒரு பாட்டு கேட்டாங்க. எனக்கு பதிலா நீ போய் எழுதிட்டுவான்னார்.

தலைவலிச்சா மாத்திரை சாப்பிட்டுட்டு பாட்டு எழுதுங்க...அத விட்டுட்டு என்ன எழுதச் சொல்றீங்களேன்னு மறுத்தேன்.

"ஒழுங்காக நான் சொல்வதை கேளு. போய் பாட்டெழுது. எனக்கு ரூ.350 கொடுக்கச் சொல்லியிருக்கேன். நா(ன்) நாலு கம்பெனிக்கு பாட்டெழுத வேண்டியிருக்கு" என்று சொன்னார். அதனால் அந்தப்படத்தில்

**"உலகம் சிரிக்குதடா**

**உலகம் சிரிக்குதடா"**

என்ற பாடலை நான் எழுத முடிந்தது. இதுபோன்று தான் 'எல்லோரும் இந்நாட்டு மன்னர்' படத்தில் மனமெனும் வானிலே பாடல் எனக்கு கிடைத்ததற்கும் பட்டுக்கோட்டையாரே காரணம்" என்கிறார் கவிஞர் இரா.பழனிச்சாமி.

படிப்பகம்

padippakam



57

# கவிஞரின் சிறப்பு

"காழ்ப்புணர்ச்சி இல்லாத கவிஞர் கற்பனை வளத்தோடும் தலை தட்டாமலும் சீர் அழகோடும் பாடல் எழுதுவதில் அருண கிரி நாதருக்கு பின் பட்டுக்கோட்டை என்றால் அது மிகையாகாது! தான் கம்யூனிஸ்ட் என்று கூறிக்கொள்வதிலும் அந்தக் கட்சியின் மேடைகளில் பாடுவதிலும் பட்டுக்கோட்டை தனிசுகம் கண்டார்.

ஜனங்களோடு நின்றார். அவர்களுக்காகச் சிந்தித்தார். எழுதி னார் என்பதே தமிழ்த் திரையுலகில் எந்தக் கவிஞருக்கும் சரியாக சீர் தூக்கிப் பார்த்தால்,

**'பட்டுக்கோட்டை தலையெடுத்தான்**
**மத்தகோட்டை சரிஞ்சது!**
**பட்டுக்கோட்டை விழுந்துபுட்டான்**
**வெத்துக்கோட்டை ஆடுது!'**

என்பது மிகச்சரியான கணிப்பாகும்" இது கவிஞர் இரா பழனிச்சாமி

படிப்பகம்

padippakam



58

# கடைசி பல்லவி

"ஒருநாள் சாலையில் அப்போது எங்களுக்குச் சமைத்துப் போடும் கருப்பையா பின்னாலிருந்து என் பெயரைக் கூவியபடி ஓடி வந்திருக்கிறார். நான் அதை கவனிக்கவில்லை, அப்போது காரில் வந்த தயாரிப்பாளர் ரங்கராஜன் சொன்னதால் நானும் அவ நம் காத்திருந்தோம்.

கருப்பையா ஓடிவந்து அழுதபடி, "அண்ணே பட்டுக்கோட்டை போயிட்டாருண்ணே" என்றதும் எனக்கு ஒன்றும் புரியவில்லை, அஜந்தா ஓட்டலுக்குப் பின்புறமிருந்த பட்டுக்கோட்டை வீட்டுக்கு காரில் போய் இறங்கினோம், வாசலில் நின்றிருந்த திருச்சி லோகநாதன்,

"டேய் நம்ம புள்ளைங்க ரெண்டு பேரு வந்தீங்க.. ஒருத்தன் ரொம்ப வேகமாக வந்தான்-வேகமாகப் போயிட்டான். நீ மெதுவாவே முன்னேறப்பா" என்று கூறி கண்கலங்கினார்.

பட்டுக்கோட்டை உடல் வைத்திருந்த இடத்திற்குச் சென்றேன். அங்கே பட்டுக்கோட்டை 'மகாலட்சுமி' படத்திற்கு கடைசியாக எழுதிக் கொடுத்த பாடலும் அதற்குரிய பணத்தையும் அவருக்கு அருகில் வைத்துவிட்டு பண்டரிபாய் கதறி அழுது கொண்டிருந்தார்.

அந்தப் பாட்டின் பல்லவி.

**'தானா எவனும் கெடமாட்டான்**

**தடுக்கி விடாம விழமாட்டான்**

**போனா எவனும் வரமாட்டான்-மேலே**

**போனா எவனும் வரமாட்டான்-இத**

**புரிஞ்சிக்கிட்டவன் எவனும் அழமாட்டான்.!'**

இதுதான் அவருடைய கடைசிப் பல்லவி" என்று கலங்குகிறார், கவிஞரின் நெருங்கிய நண்பரான கவிஞர் இரா. பழனிச்சாமி

படிப்பகம்

padippakam



59

## டைரக்டரை பணிய வைத்த பாடல்

"பட்டுக்கோட்டை எழுதித்தரும் பாடல்களை ஏதாவது ஒரு காரணத்தைச் சொல்லி தவிர்க்கவே முயல்வாராம், ஒரு பிரபல டைரக்டர். பட்டுக்கோட்டைக்கு ஆத்திரமும், கோபமும் பொங்கியெழ,

'காதோரம் நரைத்த முடி கதை முடிவைக் காட்டுதடி' என்ற பாடலை எழுதிக்கொண்டு போய் காட்டினார். டைரக்டர் உடனே அதை அங்கீகரித்து விட்டார். காரணம் என்ன தெரியுமா? அந்த டைரக்டருக்கு காதோரம் நரைத்திருந்ததுதான்"

60

## பாவேந்தர் காட்டிய பாதை

"அப்பொழுதெல்லாம் மாடர்ன் தியேட்டர்ஸில் வசனம், பாடல் ஆகிய பணிகளில் பாரதிதாசன் ஈடுபட்டிருந்தார். கல்யாண சுந்தரத்தையும் பாட்டெழுதுவதற்காக மாடர்ன் தியேட்டருக்கு அழைத்துச் சென்று ஈடுபடுத்திவிட்டார் பாரதிதாசன்.

பின்னர் பாரதிதாசனுக்கு மாடர்ன் தியேட்டருடன் பிணக்கு நேர்ந்து திரும்பி விட்டார். அவருடன் பட்டுக்கோட்டையும் புறப்பட்டார். ஆனால் பாரதிதாசன் கல்யாணசுந்தரத்தை வாஞ்சையோடு தட்டிக்கொடுத்து,

"நீ முன்னேற வேண்டியவன், பொறுத்துக்கொண்டு இங்கேயே இரு" என்று சொல்லிவிட்டு பாண்டிச்சேரிக்குத் திரும்பினார்.

padippakam



61

# வண்டிக்கு காசு கொடுத்து நடந்து வந்தார்

“இராமநாதபுர மாவட்டத்தில் கைத்தறி சேலைகளுக்குப் புகழ் சேர்த்த நகரம் பரமக்குடி. வைகை ஆற்றின் வடகரையில் உள்ள எமனேஸ்வரம் என்ற நகரும் இணைந்த இரட்டை நகரமாகும்.

இங்கு ஒரு நிகழ்ச்சியில் பங்கு கொள்ள ரயிலில் வந்து இறங்குகிறார் கவிஞர். வரவேற்று அழைத்துச் செல்ல வந்த தோழர்கள் ஒற்றை மாடு பூட்டிய வில் வண்டியை ஏற்பாடு செய்திருந்தனர்.

வண்டி மாட்டையும், வண்டியோட்டியையும் கூர்ந்து பார்த்தார் கவிஞர். ஒட்டிய வயிறு வண்டியோட்டியின் வறுமையைச்சொன்னது, எக்ஸ்ரே எடுக்காமலேயே எலும்புகளை எண்ணுமளவு நோஞ்சானாய் இருந்தது மாடு. அதன் கழுத்துக்கு மேல் உள்ள திமில் ஏற்பட்ட புண் அதில் படையெடுத்துள்ள ஈக்கள்.

“நான் இந்த வண்டியில் ஏறி வரமாட்டேன்” என்று கவிஞர் கூற என்ன செய்வதெனத் தெரியாமல் தோழர்கள் திகைக்கிறார்கள். எதிர்பார்த்த கூலி இல்லை என்றானால் இன்றும் குடும்பத்தோடு பட்டினியா என்று கலங்குகிறான் வண்டியோட்டி.

அப்போது கவிஞர் வண்டியோட்டியிடம் பத்து ரூபாய் தந்து அவன் தோள் மீது கைபோட்டபடி “தோழரே இதில் சவாரிக் கூலியை (பயணக்கட்டணம்) நீ எடுத்துக்கொண்டு மிச்சப்பணத்தில் உடனடியாக மாட்டிற்கு மருத்துவம் செய்” என்று கூறி முதுகில் தட்டிக்கொடுத்துவிட்டு, வாருங்கள் தோழர்களே.. பொடி நடையாய் போகலாம் என்று சொல்லியபடியே நடக்கத் தொடங்கிவிட்டார்.

படிப்பகம்

padippakam



*தனது வாழ்வில் இதுநாள் வரை கண்டிராத புதுமையான இன்ப அதிர்ச்சியிலிருந்து இன்னும் விடுபடாத வண்டியோட்டியும் உடன் தொடர குட்டி ஊர்வலம் ஒன்று தொடங்குகிறது.*

*பொடி நடையாய்ப் போகலாம் என்று கவிஞர் சொல்லிய போதும் நெடிய உருவம் கொண்ட அவரோடு இணையாக நடப்பது ஓடுவதுபோல் இருந்தது. என்று மலரும் நினைவுகளாக எமனே ஸ்வரம் எஸ்.ஆர். தாரகமூர்த்தி கூறுகிறார், இசைக்குழு அமைத்து இயக்கி வரும் இவர் இன்றும் மக்கள் கவிஞரின் பாடல்களை ஆர்வமுடன் பாடி வருகிறார்."*

*நன்றி: 'ஜனசக்தி'.*

62

# அச்சில் வந்த முதல் கவிதை

***1954*** *நவம்பர் 7-ல் 'ஜனசக்தி' நவம்பர் புரட்சி மலராக வெளி வந்தது. இந்த மலரில் நவம்பர் புரட்சியை வரவேற்று பட்டுக் கோட்டையார் எழுதிய 'புதிய ஒளி வீசுதுபார்' என்ற கவிதைதான் அச்சில் வந்த பட்டுக்கோட்டையாரின் முதல் கவிதையாகும்.*

**"புதியஒளி வீசுது பார்**
**இமயம் தாண்டிப்**
**புன்சிரிப்புக் காட்டுது பார்**
**இன்பம் அங்கே"**

*என்று தொடங்கும் அந்தக் கவிதை மகாகவி பாரதி. 'ஆகாவென் றெழுந்தது பார் யுகப்புரட்சி' என்ற கவிதைக்குப் பின் ரஷ்யப் புரட்சியைப் பற்றி வெளிவந்த கவிதைகளில் முதலிடத்தைப் பெறுகிற கவிதையாகும்.*

படிப்பகம்

padippakam



63

# மீண்டும் தோன்றிய பாரதி

-தோழர் ஜீவா

பட்டுக்கோட்டையாரிடம் 'கண்ணின் மணிகள்' நாடகக் கதையைச் சொல்லி, ஒரு விவசாயி தன் முறைப்பெண்ணிடம் பாடுவது போன்று ஒரு பாடல் எழுதக்கூறியதும் அப்போது அவர் எழுதிய பாடல்:

**ஆண்:** கதிராடும் கழனியிலே சதிராடும் பெண்மணி
கலைமேவும் அழகாலே கவர்ந்தாய் கண்மணி
முதிராத செடியே முல்லை மலர்க் கொடியே!

**பெண்:** அன்பே என் ஆருயிரே ஆணழகே என்னுடன்
தென்பாங்கு பண்பாடும் தீராத இன்பமே!

**ஆண்:** ஏரோட்டும் விவசாயி எருதுகளை ஏரியிலே...

**பெண்:** நீராட்டும் அழகைப்பாரு கண்ணாலே!

**ஆண்:** பாராட்ட வேண்டியவள் பானைகளைத் தலையில்
வைத்த பக்குவமா வாராபாரு பின்னாலே!

**பெண்:** தேனாறு பாயுது செங்கதிரும் சாயுது
ஆனாலும் மக்கள் வயிறு காயுது!

**ஆண்:** மானே இந்த நாட்டிலே வகையான மாறுதல்
வந்தாலன்றி ஏது சீருகள்?

**இருவரும்:** உழவனும் ஓயாது உழைப்பும்போல் நாமே
ஒன்றுபட்டு வாழ்க்கையினில் என்று மிருப்போம்!

இந்தப்பாடலை அங்கிருந்த அனைவராலும் பாராட்டப்பெற்றது. ஜீவா பட்டுக்கோட்டையைத் தட்டிக் கொடுத்து, 'நீ மீண்டும் தோன்றிய பாரதியடா!' என்று பாராட்டினார்.

படிப்பகம்

padippakam



# 64 முதல் பாடல் வந்த படம்

*1954-ல் தொடங்கிய 'படித்த பெண்' என்ற திரைப்படத்தில்தான் பட்டுக்கோடையார் முதன் முதலாக சினிமாவுக்குப் பாட்டெழுதும் வாய்ப்பைப் பெற்றார். இந்தப்படத்தில்,*

**"காப்பி ஒன்னு எட்டணா**

**கார்டு சைசு பத்தணா**

**கான வெகு ஜோரா யிருக்கும்**

**காமிராவைத் தட்டினா"**

**என்ற பாடலையும்**

**"வாடாத சோலை**

**மலர் பூத்த வேளை!"**

*என்ற பாடலையும் எழுதினார் பட்டுக்கோட்டையார், இந்தப் படம் 1956-ல் தான் வெளிவந்ததும். இந்தப் படத்திற்குப் பின் ஆரம்பிக்கப்பட்டு 1955-லேயே வெளி வந்துவிட்ட 'மஹேஸ்வரி' என்ற படத்தில்,*

**"அள்ளி வீசுங்க- பணத்தை**

**அள்ளி வீசுங்க"**

**என்ற பாடலையும்**

**"அறம் காத்த தேவியே**

**குலம் காத்த தேவியே!"**

*என்றபாடலையும்*

**"ஆகாய வீதியிலே**

**அண்ணாந்து பார்த்தபடி"** *என்ற பாடலையும் எழுதினார்.*

*மக்கள் கவிஞரின் பாடல்கள் இடம் பெற்று முதலில் வெளிவந்த படம் என்ற பெருமை இந்த 'மஹேஸ்வரி' பெற்றாள்.*

படிப்பகம்

padippakam



65

# கடைசிக் கவிதை

*1954-ல் திரைப்படத்துறையில் புகுந்த மக்கள் கவிஞர் சிறிது காலத்திலே தமது பாட்டால் திரைப்படக் கவிஞர்கள் அனைவரையும் பின்னுக்குத் தள்ளிவிட்டுப் முன்னுக்கு வந்தார்.*

*சினிமாவில் பிஸியாக மக்கள் கவிஞர் இருந்த போதும்கூட வாய்ப்புக் கிடைக்கும் போது 'ஜனசக்தியில்' கவிதை எழுதுவதையும் ஜீவாவையும் இயக்கத் தோழர்களையும் சந்திப்பதையும் வழக்கமாகிக்கொண்டார். ஜீவாவின் தொடர்பு பட்டுக்கோட்டைக்கு வழிகாட்டியாக அமைந்தது.*

**"செக்கச் சிவந்த செழுங் கதிரோனும்**
**கிழக்கினில் வந்து விட்டான்- புவி**
**மக்கள் மதிக்கண் விழித்துக் கிளம்பிட**

படிப்பகம்

padippakam



வானில் உதித்து விட்டான்:
கொக்கரக் கோவென கோழியுங் கூவுது
கொக்கோடு பற்பல புட்களும் மேவுது
சக்கரம் போலே ஜகம்சுழன் றாடுது
தொக்கி நின்ற யிருள் சொல்லாமல் ஒடுது
பத்துத் திசையிலும் -ஜன
சக்தி முழங்கிடுதே!
தெற்கில் ஒருகுரல் தென்பாங்கு பாடுது
தீய செயல்களைச் செங்கைகள் சாடுது
பக்குவங் கொண்ட படைபல கூடுது
சிக்க லறுத்துப் பொதுநடை போடுது
சொத்தை மனந்திருந்தப் -புதுச்
சத்தம் பிறந்திடுதே!
கத்தும் பறவை கனிமரத்தில் வந்து
ஒற்றுமை காட்டிடுதே -தலைப்
பித்தம் பிடித்தொரு கூட்டம் தனித்தனி
பேதம் வளர்த்திடுதே!
ரத்த வியர்வைகள் சொட்ட உழைத்தவன்
நெற்றி சுருங்கிடுதே-ஏழை
உத்தமர் வாழ்வை உறிஞ்சும் உலுத்தரின்
கொட்டம் அடங்கிடுதே-மக்கள்
வெற்றி நெருங்கிடுதே!"

*15.08.1959-ல் 'ஜனசக்தியில்' வெளிவந்த இந்தக் கவிதை தான் அவர் எழுதிய கடைசிக் கவிதையாகும்.*

படிப்பகம்

padippakam



# ௬௬
# மக்கள் கவிஞரின் கடைசிப் பேட்டி

இரவு பத்து மணி இருக்கும். வர்ண விளக்குகள் ஆங்காங்கே இந்திர ஜாலம் புரிந்து கொண்டிருக்க விஜயா கார்டனில் வீனஸ் பிக்சர்ஸ் 'கல்யாணப் பரிசு' வெள்ளி விழாவில் விருந்துக்குப் பிறகு நான் ஓரிடத்தில் அமர்ந்திருந்தேன்.

சாப்பாட்டை முடித்துவிட்டு, தாம்பூலத்தைக் குதப்பியபடி பட்டுக் கோட்டை கல்யாணசுந்தரம் எனக்குச் சிறிது தூரத்தில் நின்றிருந்தார். நான் அவரை அழைத்தேன், என் அருகில் வந்து உட்கார்ந்து கொண்ட அவர், "உங்களை நானே பார்க்கவேண்டும் என்று நினைத் திருந்தேன்" என்றார் சிரித்துக்கொண்டே.

"என்ன விஷயம்" என்று கேட்டேன்.

"கவிஞன் என்பவன், பல்வேறு இசைக்கருவிகளை வைத்து சங்கீதத்தை உண்டாக்கும் கலைஞரைப்போல வார்த்தைகளை பொறுக்கி எழுதுபவனா?" என்று அவர் என்னிடம் கேட்டார்.

கவிஞர் கேட்ட கேள்வி என்னை திடுக்கிட வைத்தது! அதுவும் சாதாரணக் கவிஞரா அவர்!

"எனக்குப் புரியாத ஒன்றைக் கேட்கிறீர்கள்- என்னைப் பொறுத்தவரை கவிதை என்பது இதயத்தில் சுரந்து, எண்ணத்தில் மிதந்து வருவது. சொற்களைக் கண்டு பிடித்துப் போட்டுக் கவிதை எழுதினால் அது கவிதை ஆகாது" என்றேன்.

இதை நமது சங்கீத டைரக்டர்கள் ஏன் உணருவதில்லை? மெட்டமைக்க அவர்களுக்கு நமது கவிதை ஏற்றதாக இல்லா விட்டால் மெட்டை மாற்றுவதற்குப் பதில் ஏன் கவிதையை மாற்றச் சொல்கிறார்கள்? அதற்காக சொற்களை எப்படி பொறுக்கிப் போட வரும்? என்றார். கவிஞர்.

"இது உண்மைதான்" என்றேன்

"இங்கு இதுமட்டுமல்ல நடிகர்கள்கூட கவிதைகளில் கை வைத்து விடுகிறார்கள். ஒரு பெரிய தயாரிப்பாளருக்காக நான் பாட்டொன்று எழுதினேன், அதில் வரும் கவிதையை ஹாஸ்ய நடிகர் சொல்லிபடி மாற்றிவிட்டார் தயாரிப்பாளர்.

படிப்பகம்

padippakam



“நடிகர்கள் தங்கள் கருத்தைச் சொல்லலாமே தவிர பாட்டை மாற்றுவது கூடாது என்பது என் அபிப்பிராயம், அப்படிப் பார்க்கப்போனால் கவிஞர்களும் நடிகர்களைப் பற்றி குறை கூற இடம் ஏற்படும்” என்றார் மக்கள் கவிஞர்.

“எப்படி?” என்றேன்.

“கவிதையில் வரும் சொற்களின் ஆழத்தையும் நயத்தையும் பொருளையும் உணர்ந்து எத்தனை நடிகர்கள் பாடி நடித்திருக்கி றார்கள்.? அதேபோல் நடனத்தையும் பாவத்துடன் உணர்ந்து ஆடுகிறார்கள்? நடிகைகள் காட்டும் அபிநயத்துக்கும் பாட்டுக்கும் அநேகமாகப் பொருத்தம் காணவே முடியாது..

இதேபோல் பாட்டு ஒரு பங்கு என்றால் அதற்கான இசை இரண்டு பங்காக இருக்கக் கூடாது.! நான் சமீபத்தில் ‘காவடிச் சிந்து மெட்டில்’ ஒரு ஸ்டூடியோ முதலாளியின் படத்திற்குப் பாட்டெழுதிக் கொடுத்தேன், அதில் பாட்டில் முக்கால் பகுதியை நீக்கி விட்டு மற்ற பகுதிக்கு வெறும் இசையை இணைத்திருக்கி றார்கள். இம்மாதிரி செய்வதையும் நான் மனதார வெறுக்கிறேன். இதனால் கவிஞனுக்கு ஏற்படும் உற்சாகத்தையும் குலைத்து விடுகி றார்கள்” என்று சொன்னார் கவிஞர்.

“இதையெல்லாம் மனதுக்குள் போட்டு புழுங்கிக்கொள்ள நான் விரும்பவில்லை, இதை அப்படியே ஒரு கட்டுரையாக வடித்துத் தரு கிறேன் உங்கள் வரப்போகும் இதழில் போட்டு விடுங்கள்” என்றார் கவிஞர்.

“நிச்சயமாகச் செய்வோம், ஆனால் உங்களிடமிருந்து கட்டுரை வருவதுதான் சீக்கிரத்தில் நடக்காத காரியமாயிற்றே!” என்றேன்.

“இம்முறை அப்படியாகாது என்று நினைக்கிறேன், அப்படி ஒருகால் தடை ஏதேனும் ஏற்பட்டுவிட்டால் இதை பேட்டி என்ற வகையில் உங்கள் பத்திரிகையில் வெளியிட்டு விடுங்கள்” என்றார் என்று ‘பேசும் படம்’ நிருபர் எழுதியிருக்கிறார்.

இந்தப் பேட்டியில் பட்டுக்கோட்டையார் கூறியிருக்கும் கருத்துக் கள் இன்றைய இசைமையப்பாளர்கள், கவிஞர்கள், தயாரிப்பாளர் கள், நடிகர்கள் ஆகியோர் நெஞ்சில் எழுதி வைத்துக் கொள்ள வேண்டியவை.

இந்தப்பேட்டியில் ஒருகால் ஏதேனும் தடை ஏற்பட்டுவிட்டால் என்று கூறிய பட்டுக்கோட்டை திடீர் என்று உடல் நிலை பாதிக்கப் பட்டு சென்னை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு 8.10.1959 அன்று மறைந்தார்.

padippakam



67

## இரங்கற் கூட்டம்

**ம**யானத்தில் மக்கள் கவிஞரின் உடம்புக்குத் தீயிடப்படுகிறது. அக்னி நாக்குகள் அந்த மகத்தான கவிஞனை ஆரத் தழுவுகிறது. அங்கே நடந்த இரங்கற் கூட்டத்தில்,

"அதோ தீயில் எறிந்து கொண்டிருக்கிறானே அவனுக்கு, அரை அணாவுக்கு வேர்கடலையும், பழைய விக்ரமாதித்தன் கதை புத்தகத்தையும் வாங்கிக் கொடுத்தால் நூறு பாட்டு எழுதிக்கொடுப் பான்" என்று ஜீவா பேசினார். பட்டுக்கோட்டை இறந்ததைக்கேட்டு அழுதவர்களைவிட ஜீவாவின் பேச்சைக்கேட்டு அழுதவர்கள் தான் அதிகம்" என்று நினைவு கூர்கிறார் டைரக்டர் முக்தா சீனிவாசன்.

68

## ஒரு பத்திரிகையின் அஞ்சலி

**பா**ட்டுக்காக ஒருபடம் ஓடுகிறதென்றால், அதில் பட்டுக் கோட்டை கல்யாணசுந்தரம் பாட்டு எழுதியிருக்கின்றாரா? என்று கேட்கும் நாள் இது. அவர் பாட்டெல்லாம் பைந்தமிழ் நாவுக்கிசைந்த சொல், காதுகளுக்கினிய கானம், கருத்தில் மணக்கும் கவிதை என்று தமிழகம் அவரைப் போற்றுகிறது. தமிழ் சினிமா உலகில் உதயஞாயிறாகத் தோன்றி இசை மணம் பரப்பிய அந்த இளம் கவிஞர் மறைந்து விட்டார் என்ற செய்தி செந்தமிழ் நாட்டில் உள்ள எல்லோரையும் திடுக்கிடச் செய்து விட்டது.

**"ஆரம்பமாவது பெண்ணுக்குள்ளே**

**ஆடி அடங்குவதும் பெண்ணுக்குள்ளே"**

படிப்பகம்

padippakam



என்ற பாட்டை பாடிய புலவர் மண்ணில் மறைந்து விட்டார். 'தூங்காதே தம்பி தூங்காதே' என்று பாடி, தமிழனை விழித்திருக்கச் செய்த கலைஞன் மீளாத்தூக்கத்தில் ஆழ்ந்து விட்டார். அவர் பாடல்கள் சிரஞ்சீவியாக பல குழந்தைகள் நாவில் ஒலிக்கின்றன.

**"உன்னைக்கண்டு நானாட என்னைக்கண்டு நீயாட**

**உல்லாசம் பொங்கும் இன்பத் தீபாவளி"**

என்று மழலை மொழியில் பாடாத குழந்தைகளும் தமிழகத்தில் உண்டோ? ஆனால் கண்ணீரும் கதை சொல்லும் தீபாவளியாக அவர் வாழ்வு முடிந்துவிட்டது.

அருமை இளம் மனைவியும் ஐந்து மாதக் குழந்தையையும் வயது முதிர்ந்த தாயையும் தந்தையையும் ஆறாத் துயரத்தில் ஆழ்த்திவிட்டு அவர் மறைந்தார் என்பதைக் கேட்கும்போது யார் தான் கண்ணீர் விடாமல் இருக்கமுடியும்?

பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்தின் அகால மரணம் கவிதை உலகத்திற்கும் ஒரு மாபெரும் நஷ்டம். படத்தொழிலுக்கு ஒரு பெரும் நஷ்டம், தமிழ் நாட்டுக்கே அது தாங்கமுடியாத நஷ்டம் என்று 18.10.1959- அன்றைய 'ஆனந்த விகடன்' தலையங்க பகுதியில் கண்ணீர் அஞ்சலி செலுத்தியது.

69

# பார்த்த வேலைகள்

'செய்யும்தொழிலேதெய்வம்' என்று சொன்ன பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் திரைப்பட பாடலாசிரியராக வருவதற்கு முன்பு சுமார் பதினெட்டு தொழில்கள் செய்திருக்கிறார்.

விவசாயம், மாடுமேய்த்தல், மாட்டு வியாபாரம், மாம்பழ வியாபாரம், முறுக்கு வியாபாரம், மீன்பிடித்தல், மேடைகளில் சுய மரியாதை பாட்டு பாடுதல், நாடகங்களில் நடித்தல், கிராமிய நடனம் ஆடுதல், தண்ணீர் வண்டி ஓட்டுதல், மிஷின் ஓட்டுதல், அரசியல், புரட்சிக்கவிஞரின் கவிதைகளை பிரதி எடுத்தல், பாடல் எழுதுதல் என்று பல வேலைகளைப் பார்த்திருக்கிறார்.

படிப்பகம்

padippakam



70

## பட்டங்கள்

**ம**க்களுக்காக பாடல்கள் எழுதிய பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் வாழ்ந்த காலத்தில் முற்போக்கு மன்றத்தால் வழங்கப்பட்ட சிறப்புப் பட்டம் 'மக்கள் கவிஞர்'.

பின்னர் 'பாட்டாளி வர்க்கக் கவிஞர்' சூட்டிய 'முற்போக்குக் கவிஞன்', 'புதுமைக் கவிஞன்' என்று பாராட்டி சூட்டிய பட்டங்கள் பல.

71

## கவிஞரின் படிப்பு

**த**மிழ் திரையுலகில் கொடிகட்டிப் பறந்த கவிஞர்களில் மிக மிகக் குறைவாக படித்தவர் பட்டுக்கோட்டையார்தான். உதாரண மாக கவியரசு கண்ணதாசன் எட்டாம் வகுப்பு, கவிப்பேரரசு வைரமுத்து எம்.ஏ.

ஆனால் மக்கள் கவிஞர் படித்தது வெறும் மூன்றாம் வகுப்பு வரைதான். கவனிக்கத்தக்கது, ஆச்சர்யமானதும்கூட.

உலகத்தைப் படித்துப் படைத்ததுதான் அவரது பாடல்கள், கவிதை எனலாம்.

பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் அவர்களின் தந்தையும் தமையனும் நாட்டுப்பாடல் கவிஞர்களாகத் திகழ்ந்தவர்கள். அது மட்டுமன்றி சின்ன வயதில் அண்ணன் கணபதி எழுதிய சுயமரியாதைப் பாடல்களை பாடுவது பட்டுக்கோட்டையாரின் வழக்கம்.

இவர் கவிஞராக இந்த வாழ்க்கைப் பின்னணி வழிவகுத்துக் கொடுத்தது எனலாம்.

படிப்பகம்

padippakam



72

## புதிய வரவு

தமிழ்த் திரைப்படங்களில், இந்திப் படங்களில் இடம்பெற்ற மெட்டுக்களை பின்பற்றிய 'டப்பா' இசையின் கோர ஆட்சி நிலவிய காலகட்டத்தில் பட்டுக்கோட்டையாரின் வருகை புதிய வரவாக அமைந்தது .

தஞ்சாவூர் கிராமத்தின் பின்னணியுடன் வந்த கல்யாண சுந்தரம் சினிமாப்பாடல்கள் எழுதுவதில் பெரும் மாற்றத்தைப் புகுத்தினார். நாட்டுப் புறப்பாடல்களைத் தழுவிபல பாடல்களை எழுதினார்.

"சிக்கல் நிறைந்த நிகழ்கால வாழ்க்கைத் தோற்றத்தை மிகச் சாதாரணக் கண்ணோட்டத்தில் வைத்துக் கூறுவதும் கேட்பவரின் நெஞ்சத்தை உடனடியாக கவரும் விதத்தில் நேரான வழிவழியான ஆற்றலோடு வெளியிடுவதுமான நாடோடி மரபின் இரட்டைக் கூறுகளை" திரைப்படப்பாடல்கள் இயற்றுவதில் திறம்பட பயன் படுத்தினார்" என்கிறார் ஜீவா.

73

## அனுபவமே பாடல்கள்

"பட்டுக்கோட்டையாரின் பாடல்களில் அவரது அனுபவத்தின் நிழலே அதிகமாக இருந்தது. தமது மண்ணும், தான் சந்தித்த மக்களும் அவர்களின் வாழ்க்கையுமேதான் அவருக்கு பாட்டு பொருளாக அமைந்தது. நாட்டுப்பாடல்கள் அவர் மனதிலும் முணுமுணுப்பிலும் இருந்தது.

நாட்டுப்பாடல்கள் உழைக்கும் மக்களின் இலக்கியமாக இருந்தது. பல்வேறு காலமாகச் சமூகத்திலே நசுக்கப்பட்டு வந்துள்ள அவர்களின் ஆவேசமும் உரிமைக்குரலும் நாட்டுப்பாடல்களில் ஆங்காங்கு ஒலிப்பதுண்டு.

படிப்பகம்

padippakam



அடித்தட்டு மக்களின் இன்ப, துன்பங்களை சித்தரிக்கும் பாடலாக அவை இருந்தன. அந்தப்பாடல்கள் நம்பிக்கையோடு எதிர்காலத்தை நோக்கும் கண்ணோட்டத்தைக் கொண்டிருந்தன. நாட்டுபாடல்களின் இசை மட்டுமல்ல... அவைகளின் உள்ளடக்கக் கூறுகளும்கூட பட்டுக்கோட்டையார் அவைகளைத் திரைப்படப் பாடல்களாக எழுதுவதற்குப் பயன்படுத்தினார்.

அவருடைய பாடல்களிலிருந்த எளிமை, இனிமை, வன்மை, நேர்மை போன்ற பண்புகளை இந்த அடிப்படையில்தான் விளங்கிக் கொள்ள வேண்டும். பாரதிக்குப்பின் பட்டுக்கோட்டையார் பாடல் களிலேயே பொதுமைச் சிந்தனைகள் வலிமையுடனும் வனப் புடனும், வெகுஜனக் கவர்ச்சியுடனும் வெளிப்படுவதாகப் பலரும் கருதுவதற்கு அவருடைய பாடல்கள் உயிர் துடிப்புள்ள மக்கள் இலக்கியம் என்று சொல்லப்படுவதற்கும் இதுவே அடிப்படை" என்று மன ஓசை-ஏடு (1969) அலசி சொல்கிறது.

74

# பட்டுக்கோட்டை பற்றிய நூல்கள்

**ம**க்கள் கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் அவர்கள் பற்றி பல ஆய்வுக்கட்டுரைகள், நூல்கள் வந்திருக்கின்றன. அவை களில் பத்திரிகையாளர், கவிஞர் கே.ஜீவபாரதி எழுதியுள்ள நூல் களே அதிகம்.

1. பட்டுக்கோட்டையார் பாடல்கள். 2.மலரும் நினைவுகளில் மக்கள் கவிஞர். 3.கவிஞர்களில் நெஞ்சில் மக்கள் கவிஞர். 4. பல கோணங்களில் பட்டுக்கோட்டையார். 5. காலமறிந்து கூவிய சேவல் ஆகிய ஐந்து நூல்களை கே. ஜீவபாரதி தொகுத்து எழுதி இருக்கிறார். பேராசிரியர் சாலமன் பாப்பையா எழுதிய 6. 'பட்டுக் கோட்டை கல்யாணசுந்தரம் ஒரு பார்வை'. 7. செம்பியன் எழுதிய பட்டுக் கோட்டையின் பாட்டுத்திறன்'. 8. 'மக்கள் கவிஞர் பட்டுக் கோட்டை கல்யாணசுந்தரம் பாடல்கள்'.9. சபீதாஜோசப் தொகுத்து எழுதிய 'மக்கள் கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் 100'.

padippakam



75

## புது உவமை

படிக்காத ஏழை எளிய மக்களுக்கும் புரியும் வண்ணம் பாடல்கள் புனைந்தவர் மக்கள் கவிஞர் கல்யாணசுந்தரம்.

"வசதியிருக்கிறவன் தரமாட்டான்-அவனை

வயிறு பசிக்கிறவன் விடமாட்டான்"

போன்று எளிய வார்த்தைகள் போட்டு புரட்சிகர பாடல் எழுதிய மக்கள் கவிஞர் அழகான உவமைகளிலும் பாடல் புனைந்திருக்கிறார்.

**"என்னருமை காதலிக்கு வெண்ணிலாவே-நீ**

**இளையவளா மூத்தவளா வெண்ணிலாவே"**

**இப்படியாரும் சொல்லவில்லை"**

அழகிய எளிய உவமையிலும் காதல் பாடல்கள் எழுதியிருக்கிறார்.

76

## பட்டுக்கோட்டையார் படைப்புகள்

"மக்கள் கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் தமது இருபது வயது வரை பதினாறு தொழில்களில் ஈடுபட்டார்.

கவிஞர் தமது இருபத்து நான்காம் வயதில் திரையுலகில் பாடல் எழுதும் பணி மேற்கொண்டார்.

பட்டுக்கோட்டையார் மொத்தம் ஐம்பத்தெட்டுத் தமிழ்த் திரைப்படங்களுக்குப் பாடல்கள் எழுதியிருக்கிறார்.

இதுவரை அவர் எழுதியதில் சுமார் 260 படைப்புகள்தான் கிடைத்திருக்கின்றன" என்கிறார். கவிஞர் கே.ஜீவபாரதி.

படிப்பகம்

padippakam



## 77 முணு முணுத்தவர்கள்

முற்போக்கு கவிஞன் பட்டுக்கோட்டையாரின் பாடல்களுக்கு வாயசைத்த பற்பல நட்சத்திரங்கள்.

எம்.ஜி.ஆர், சிவாஜிகணேசன், ஜெமினிகணேசன், எஸ்.எஸ். ராஜேந்திரன், சந்திரபாபு, டி.ஆர். மகாலிங்கம், பானுமதி, (இவர் ஒரு பாடலை சொந்தக்குரல் பாடியிருக்கிறார்) சரோஜா தேவி, பத்மினி மற்றும் பலர்.

அதேபோன்று மக்கள் கவிஞரின் பாடல்கள் உழைக்கும் மக்கள் லட்சக்கணக்கானோர்கள் முணுமுணுக்கிறார்கள்.

## 78 ஜீவபாரதியின் முயற்சிகள்

பட்டுக்கோட்டையார் பாடல்கள் தொகுப்பாளர் மற்றும் ஆய்வாளர் கவிஞர் கே.ஜீவபாரதி கடந்த இருபத்தைந்து ஆண்டு களாக கல்யாணசுந்தரத்தின் புகழ் பரப்பி வருகிறார்.

1995-ம் ஆண்டு முதல் தமிழக அரசுக்கு தொடர்ந்து கோரிக்கை கள் வைத்து கடிதங்கள் எழுதி பட்டுக்கோட்டையாருக்கு பட்டுக் கோட்டை நகரத்தில் மணிமண்டபம் கட்டவேண்டும்.

2. பட்டுக்கோட்டையார் பெயரில் ஆண்டுதோறும் சான்றோர் களுக்கு தமிழக அரசு விருது வழங்க வேண்டும்.

3. சென்னையில் பட்டுக்கோட்டையார் வாழ்ந்த இல்லத்தை நினைவில்லமாக்க வேண்டும்"

போன்ற தமது கோரிக்கைகளையும் தொடர்ந்து அரசுக்கு வைத்து வந்த ஜீவபாரதியின் கோரிக்கைகளில் ஒன்று பட்டுக் கோட்டை நகரில் மணிமண்டபம் கட்டப்பட்டது. அடுத்த இரு கோரிக்கைகளுக்காகவும் தொடர்ந்து போராடி வருகிறார்,

கவிஞர் கே. ஜீவபாரதியின் முயற்சிகள் பாராட்டுக்குரியது. முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் சார்பாக 1999-ல் ஜீவபாரதிக்கு 'மக்கள்கவிஞர்' விருது வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டுள்ளது.

படிப்பகம்

padippakam



79

# கவிஞர் இல்லம் சென்ற வைரமுத்து

கவிப்பேரரசு வைரமுத்து 1992ம் ஆண்டு மக்கள் கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் அவர்கள் வாழ்ந்த செங்கப்படு தான்காடு இல்லத்திற்கு சென்று பட்டுக்கோட்டையாரின் அண்ணனையும் பட்டுக்கோட்டையாரின் துணைவியாரையும் கண்டு பேசி வந்திருக்கிறார்.

"பட்டுக்கோட்டையாரின் திருமணத்தில் பாவேந்தர் பாரதிதாசன் வாழ்த்துரை வழங்கும் படம் எங்கள் கண்களில் நிறைகிறது" என்கிறார் கவிப்பேரரசு வைரமுத்து.

படிப்பகம்

padippakam



80

# மக்கள் கவிஞனும் நானும்

"பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்! தன்னால் கலப்பை பிடித்து மண்ணை உழவும் முடியும், பேனா பிடித்து மனிதர்களை உழவும் முடியும் என்று மார்தட்டி மெய்ப்பித்த ஒரு மக்கள் கவிஞன்.

ஒருவகையில் பார்த்தால் அந்த மக்கள் கவிஞனும் நானும் ஒரே குடும்பத்துக்குழந்தைகள்தாம். ஆனால் என்னினும் பல மடங்கு வாழ்க்கை என்னும் கல்வியை வாழ்ந்து கற்றவன்.

அவனுடைய பாடல்களெல்லாம் தெருக்களில் எழுதப்பட்டவை, திண்ணைகளில் வாசிக்கப்பட்டவை, வாழ்க்கையைப் பிழிந்து பிழிந்து வார்த்தைச் சாறாய் இறங்கியவை, கற்பனைகளைப் போது மான அளவுக்கு மட்டும் தொட்டுக்கொண்டு வாழ்க்கை உண்மை களுக்கே பெரிதும் வழிவிட்டவை.

சிலஆண்டுகள் மட்டுமே அவன் சினிமாவில் வாழ்ந்தான். ஆனால் அந்த சில ஆண்டுகளுக்குள்ளேயே திரைப்படம் என்ற பாற் கடலை ஆழக்கடைந்து அமுதம் மட்டும் எடுத்துக் கொடுத்துவிட்டு அகால மரணம் அடைந்து விட்டான்.

ஒரு மனிதனின் புகழ் என்பது ஆயுளால் தீர்மானிக்கப் படுவதில்லை. எத்தனை ஆண்டுகள் வாழ்ந்தாலும் பாம்பு விஷத்தை தான் சேமித்து வைக்கிறது. சில மாதங்களே வாழ்ந்தாலும் தேனீ தேனைத்தான் சேகரித்துத் தருகிறது. முப்பது ஆண்டுகள் நிறை வதற்குள்ளே முடிந்து போன முந்நூறு ஆண்டுகளுக்குத் தேவையான அனுபவங்களை அள்ளித்தந்து விட்டுப்போயிருக்கிறார்" என்று கவிப்பேரரசு வைரமுத்து மக்கள் கவிஞர் பற்றி படம் பிடித்து காட்டுகிறார்.

படிப்பகம்

padippakam



81

# தமிழர்களை தட்டி எழுப்பியவர்

-கவியரசு வைரமுத்து

கவிதையின் காதலரான, பாடல்களின் ரசிகரான கவிப்பேரரசு வைரமுத்து, மக்கள் கவிஞர் பட்டுக்கோட்டையை பின்வருமாறு ரசித்து மொழிந்தார்.

**"ஆரம்பமாவது பெண்ணுக்குள்ளே -அவன்**
**ஆடி அடங்குவது மண்ணுக்குள்ளே"**

என்ற வரிகளெல்லாம் தமிழர்களின் அன்றாட வாழ்வில் அங்கமாகிவிட்ட வரிகள்.

**"இரை போடும் மனிதருக்கே**
**இரையாகும் வெள்ளாடே**
**இதுதான் உலகம்**
**வீண் அனுதாபம் கண்டு நீ**
**ஒரு நாளும் நம்பிடாதே"**

படிப்பகம்

padippakam



'பதிபக்தி' யில் அவன் எழுதிக்காட்டிய இந்தப் பல்லவியின் அதிர்ச்சியிலிருந்து தமிழ் நாடு சில ஆண்டுகளாய் மீளவேயில்லை.

கருத்து வளம் கொண்ட பாடல்களில் மட்டும் அல்ல, காதல் வளம் கொண்ட பாடல்களிலும் இப்படித்தான் மின்னல் பல்லவிகள் கண்ணைப்பறித்தன.

**"முகத்தில் முகம் பார்க்கலாம்- விரல்**

**நகத்தில் பவளத்தின் நிறம் பார்க்கலாம்''**

'தங்கப்பதுமையில் இந்தப்பாட்டு காதலிகளின் முகங்களை யெல்லாம் காதலர்களின் கண்ணாடிகளாக மாற்றிவிட்டது.

'நாடோடி மன்னன்'னுக்கு எழுதப்பட்ட 'தூங்காதே தம்பி தூங்காதே' பாட்டுக்கேட்டு பல தமிழர்கள் தங்கள் நீண்ட உறக் கத்தைக்கலைத் துக்கொண்டு மெல்ல மெல்ல கண் கசக்கினார்கள்" என்று மக்கள் கவிஞரை ரசித்து சொல்கிறார் வைரமுத்து.

படிப்பகம்

padippakam



82

# கவிஞனுக்கு ஏது மறைவு?

"பட்டுக்கோட்டையின் பாட்டு வரிகளை உச்சரிக்க உச்சரிக்க அந்நாளில் மக்கள் திலகம் எம்.ஜி.ஆருக்கும், நடிகர் திலகம் சிவாஜிக்கும் இருந்த புகழ் அடர்த்தியானது, இன்னும் ஆழமானது.

அந்த மக்கள் கவிஞன் பிறந்த மண்ணைத் தொட்டு வணங்க வேண்டுமென்பது நான் பல ஆண்டுகளாய் முடிந்து வைத்திருந்த கனவு. இந்த முறை பட்டுக்கோட்டையில் ஒருவிழாவுக்குச் செல்லும் வாய்ப்பு வந்ததால் செங்கப்படுத்தான் காடு சென்று வரவேண்டும் என்பது திட்டம்.

பட்டுக்கோட்டையின் துணைவியார் திருமதி கௌரவாம்பாள் எங்களை பண்பாடு கமழ வரவேற்றார், பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரத்தின் அண்ணன் திரு. கணபதிசுந்தரம் கலகலவென்று பேசி எங்களுக்கு களிப்பூட்டுகிறார், தம்பியைப் பற்றிய ஈரமானே நினைவுகளைப் பரவசத்தோடு பந்தி வைக்கிறார்.

அங்கே நாங்கள் அமர்ந்து உரையாடியது கொஞ்ச நேரம் தான். ஆனால் அந்தக் கொஞ்ச நேரத்திலும் இதயத்திற்கு எத்தனையோ இறக்கை முளைத்து இறந்த காலவெளியெங்கும் பறந்து பறந்து திரிந்தது. எங்கள் எல்லார் கைகளிலும் அவர்கள் இளநீர் கொடுத்தார்கள். எங்கள் எல்லார் கண்களிலும் கண்ணீர் இருந்தது.

ஏப்ரல் 13 தான் அந்தப் பிறவிக் கவிஞனின் பிறந்தநாள். ஆமாம் அவன் பிறந்து 62 ஆண்டுகள் கழிந்துவிட்டன. அவன் மறைந்நாள் எதுவென்று கேட்பீர்கள்.

இல்லை, கவிஞனுக்கு ஏது மறைந்த நாள்? எழுத்தில், காற்றில், இதயங்களில் எண்ணங்களில் அந்த கவிஞன் வாழ்ந்து கொண்டே இருக்கிறான். வாழ்ந்து கொண்டே இருப்பான்.

தமிழ்ப்பற்றும், பாட்டுப்பற்றும் சமூகப்பற்றும் கொண்ட பெரு மக்களில் யாராவது அந்த நித்தியக்கவிஞனுக்கு நினைவகம் அமைப்பார்களா?" என கவிப்பேரரசு வைரமுத்து பட்டுக்கோட்டைக்குச் சென்று வந்த அனுபவத்தை 13.04.1992-ல் 'தினத்தந்தி' யில் சொல்லியிருக்கிறார்.

படிப்பகம்

padippakam



83

# இளம் சகாப்தம்

**–முதல்வர் கலைஞர்**

'**ப**தினைந்து ஆண்டுகளுக்கு முன்பு தஞ்சை மாவட்டத்தில் திராவிடர் கழகக் கூட்டங்களில் சொற்பொழிவாற்றச் செல்லும் போது ஒரு துடிப்பான இளைஞர் எங்களோடு சேர்ந்து சுற்றுப் பயணத்தில் ஈடுபட்டு மேடைகளில் மிக அருமையாகப் பாடுவார்.

நாகை அருமைநாதன் பாடல்களை அந்த இளைஞர் உணர்ச்சி ததும்பப் பாடும்போது மக்கள் பெரும் ஆரவாரம் செய்து வரவேற் பார்கள். அந்தக்காலம் நாங்களே இளைஞர்கள், எங்களைவிட வயதில் குறைந்த இளைஞர்களின் இயக்க ஆர்வம் கண்டு பாராட் டாதவர்கள் இல்லை. மற்றவர் எழுதிய பாடல்களை மட்டுமன்றி தானே கற்பனை செய்துகொண்டு ஒன்றிரண்டு பாடல்களையும் அந்தப் பிஞ்சுப் பருவத்தினன் பாடிக்காட்டி எங்களை மகிழ்ச்சி கொள்ளச் செய்த நிகழ்சியை என்றும் மறக்க இயலாது.

**"ஏ வட்டிக்கடை சேட்டு!**

**நீ வாலையாட்டாமல் கம்பி நீட்டு!"**

படிப்பகம்

padippakam



*என்றைக்கோ அதிராம்பட்டினத்து மேடையில் அந்த இளைஞர் பாடிய பாட்டு சொந்தக் கற்பனை இன்றைக்கும் என் காதில் ஒலித்துக் கொண்டிருக்கிறது. அதையும் நினைத்துக் கொண்டு இதையும் ஒருமுறை படித்துப் பார்க்கிறேன், படிக்க முடியவில்லை கண்களில் நீர் திரையாடுகிறது.*

**"செப்புக்காசு கூடச் செஞ்சி நாட்டான்-வட**
**சீமைக்குக் கட்டிடமாட்டான் -டில்லி**
**சேவடிக்குத் தினம் காவடி தூக்குவோன்**
**தெரிஞ்சும் எப்படிக்கேட்டான்?**
**இப்புவி மக்கள் இருப்பதெல்லாம் -அவன்**
**அப்பன் வீட்டு நிலமோ?-இந்தக்**
**குப்பைக் கூளங்களின் தப்புச் செயல்களை**
**ஒப்புக்கொள்ள வேணுமோ?-நான்**
**கப்பம் கட்ட வேணுமோ?"**

*'ரங்கோன் ராதா' படத்தில் ராஜாதேசிங்கு நடனத்திற்கு அந்த இளைஞர் எழுதிய பாட்டுத்தான் இது! வயதில் கிழவர் என்ற பெயர் வாங்காமலேயே போய்விட்டார் அந்த இளைஞர்.*

*பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் ஒரு கவிஞரின் பெயரல்ல இது! திரையுலகில் தோன்றி மறைந்துவிட்ட ஒரு இளம் சகாப்தத்திற்கு இடவேண்டிய பெயர்!" என்கிறார் முதல்வர் கலைஞர்.*

படிப்பகம்

padippakam



84

# ஒரு சுயமரியாதை வீரர்

"மேடையில் பாடும் நிலை தோன்றி, நாடக மேடையேறி பின்னர் அரசியல் கட்சித்தலைவர்களின் தொடர்புகள் அதிகமாகி, பொதுவுடமைக் கட்சி நண்பர்களின் கூட்டுறவு ஏற்பட்டு, இவர் எந்தக்கட்சி? என்று எல்லோருமே ஐயப்பாடுடன் நோக்கும் வகையில் அனைவரிடத்திலும் நன்கு பழகி கலையுலகில் கனிமரம் ஒன்று தழைத்து வளர்க்கிறது என்று கூறிடும் புகழ்சொல்லைத் தனக்குரிமையாக்கிக் கொண்டு திடீரென புயற்காற்றில் சாய்ந்ததுபோல் சாய்ந்து விட்டார் என்று சாகாத இளங்கவிஞர் கல்யாணம்!

அவர் பாடல்களில் தத்துவம் தலை நீட்டும். பக்தி மிள்ளம் பெருக்கெடுக்கும். பாட்டாளியின் குரல் தீவிரமாக ஒலிக்கும். பகுத்தறி வுப் பேரிகை முழங்கும். இப்படி அவர் கேட்டவருக்குக் கேட்ட படி பாட்டெழுதினார் என்றாலும்,

**'அவர் ஒரு சுயமரியாதை வீரர்**

**பொதுவுடமைத் தோழர்**

**திராவிட இன உணர்ச்சிக் காளை'**

அடடா அவர் எழுத்திலே என்னென்ன சுழற்சி எத்துணை எழில்! என்ன வேகம்!" என மக்கள் கவிஞரை தமிழக முதல்வர் கலைஞர் பாராட்டுகிறார்.

படிப்பகம்

padippakam



85

## பாட்டுத்திலகம்!

“திரைப்படத்துறையின் முன்னோடியும் பழம்பெரும் இயக்குனரும் புகழ்மிக்க தயாரிப்பாளருமான கே.சுப்பிரமணியம் பட அலுவலகத்தில் தான் நான் முதன் முதலாக மக்கள் கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரத்தை சந்தித்தேன்.

“பல புதிய படங்களுக்கு அண்மையில் பாடல்களை எழுதிக் குவித்துவரும் திறமான கவிஞர் இவர், பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் என்பது பெயர். இவரைப்பற்றி நீங்களும் கேள்விப் பட்டிருப்பீர்கள். எங்கள் ‘பாண்டியத்தேவன்’ படத்திற்கு இவர்தான் இப்பொழுது பாடல்களை எழுதி வருகிறார். நல்ல புரட்சிகரமான சிந்தனைகளை நாட்டுப்புற மக்களுக்கு பிடித்த பாணியிலே எழுதி வரும் இக்கவிஞரை உங்கள் எம்.ஜி.ஆர். பிக்சர்ஸ் படங்களுக்குப் பயன்படுத்தலாமே” என்று பட்டுக்கோட்டையாரை அறிமுகப் படுத்தினார் இயக்குனர் கே.சுப்ரமணியம்.

நானும் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் என்ற கவிஞரின் பாடல்கள் பல மக்களால் பெரிதும் விரும்பி ரசிக்கப்பட்டு வருவதை தெரிந்து கொண்டிருந்தேன். தவிர, அதுவரை அவரை நான் நேரில் சந்தித்ததில்லை.

படிப்பகம்

padippakam



கவிஞரை முதன் முதலில் சந்திக்க ஒரு நல்ல வாய்ப்பினை பெற்ற மகிழ்ச்சியுடன் அவருடன் உரையாடிக் கொண்டிருந்தேன். கவிஞ ரும் ஒரு சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்தவர்தான். அவரு டைய தந்தையாரும் நாட்டுப்புறப்பாடல்களை நன்கு பாடக்கூடியவர் என்பதையும் சாதாரண பள்ளிப்படிப்பே கவிஞர் படித்திருந்தார் என்ற போதும் பல்வேறு வேலைகளில் ஈடுபட்டு அதில்பட்ட தம் பட்டறிவு காரணமாக தம் வாழ்க்கை அனுபவம் இசைப்பாட்டாக அவர் உள்ளத்திலிருந்து பீறிட்டு பொங்கி வருகிறது என்பதையும் அவருடைய உரையாடல் மூலம் தெரிந்து கொண்டேன்.

அவருடைய கவியார்வத்தை உணர்ந்துகொண்ட என்னை மேலும் மகிழ்விக்கும் வகையில் தம் கைகளைக் கொண்டு மேசையில் தாளம் போட்டவாறு ஒருபாடலை பாடிக்காட்டினார். அந்தப் பாடல்தான் 'நாடோடிமன்னன்' படத்தில் பின்னாளில் இடம் பெற்று புகழ்பெற்ற 'காடுவெளஞ்சென்ன மச்சான் நமக்கு கையும்காலும்தானே மிச்சம்' என்ற அற்புதமான பாடல்.

பிறகு ஒருநாள் கவிஞரை அழைத்துக்கொண்டு போய் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களால் இப்பாடலைக் கேட்டு மகிழும் வண்ணம் பாடிக் காட்டச் சொன்னேன். எம்.ஜி.ஆர். பிக்சர்ஸ் நாடோடிமன்னனி'ல் மிகப்பெரிய அளவில் தயாரித்துக் கொண் டிருந்த நேரம் அது. இந்தப்பாடல் புரட்சித்தலைவர் அவர்களுக்கும் மிகப்பிடித்துப் போய்விடவே 'நாடோடி மன்னன்' படத்தில் இப்பாடலை இடம்பெறச் செய்யவேண்டும் என்பதற்காக கதையில் ஒரு காட்சியை அமைத்தார் புரட்சித்தலைவர்.

அந்தப் படத்தில் மேலும் சில பாடல்களை எழுதவும் பாட்டுத் திலகம் பட்டுக்கோட்டையாருக்கு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். வாய்ப்பினை வழங்கினார். அப்படி அவர் எழுதிய இன்னொரு புகழ்பெற்ற பாடல்தான் 'தூங்காதே தம்பி தூங்காதே' என புகழ் மலர்களை தொடுக்கிறார் முன்னாள் அமைச்சர் இராம.வீரப்பன்.

படிப்பகம்

padippakam



86

# திரையுலக தத்துவ ஞானி

**-கவியரசர் கண்ணதாசன்**

*கல்யாணசுந்தரம் சாகமாட்டான்! நடக்கும்போது எறும்புகளைக் கூட மிதிக்காது நடப்பவனாயிற்றே! அவனை நெருங்க சாவுக்கு துணிவேது. இளம் மனைவியை விட்டு, பழம்பெருந் தமிழகத்தை விட்டு, முதிய தாய்- தந்தையரை விட்டு, நண்பர்களை விட்டு அவனை பிரித்து எடுத்துச் செல்ல எந்த சக்தியாலும் முடியாது! என்று நம்பினேன்.*

*கவிஞரின் உடன்பிறந்த தமையனார் ஓடிவந்தார், "அண்ணா தம்பி ஏமாற்றிவிடுவானா? அவன் கொடுத்த சோற்றைத்தான் சாப்பிட்டுக்கொண்டிருக்கிறோம், அதிலே மண்ணை அள்ளிப்போட்டு விடுவானா?" என்று கத்தினார். அவருக்கு ஆறுதல் சொல்லக் கூடிய துணிவு அப்போது எனக்கு இருந்தது.*

*"கவிஞரை மருத்துவர்கள் ஆபரேஷன் தியேட்டருக்கு தூக்கிச் சென்றபோது என் குருதி நாளங்கள் கொதித்தன! நாடி நரம்புகள் ஆடி அடங்கின. கலங்காத சக்கரபாணியும் கலங்கினார்! மருத்துவர்கள் என்ன சொன்னார்கள்? என்ன சொன்னார்கள்?" என்று திரும்பத் திரும்பக் கேட்டார். நம்பிக்கை இருக்கிறது என்றே பதில் சொன்னேன். மருத்துவமனையில் கவிஞனை விட்டு வெளியேற மனமில்லாமல் நின்றோம்.*

படிப்பகம்

padippakam



மதியம் இரண்டு மணிக்கு 'நிலைமை பரவாயில்லை' என்று மருத்துவர் சொன்னார். கலங்கிய கண்கள் மலர்ந்தன. ஸ்பெஷல் வார்டு பார்ப்பதற்கு சக்கரபாணி ஓடினார், மறுநாள் தான் கிடைக்கு மென்றார்கள். அதற்கு ஏற்பாடு செய்துவிட்டு மீண்டும் வராந்தாவி லேயே வந்தமர்ந்தார், ஆனால் அதன்பிறகு இரண்டு மணி நேரம் கூட ஆகவில்லை. சரியாக 3.45-க்கு ஒரு மருத்துவர் வெளியேவந்து கவிஞன் முடிவுற்ற செய்தியை சொன்னாராம். அப்போதுதான் மருத்துவமனையிலிருந்து புறப்பட்டு படப்பிடிப்பு நிலையத்திற்குச் சென்றிருந்த எனக்கு இந்தச் செய்தி தரப்பட்டது.

என் அன்னை இறந்தபோது நான் அழுதேன். அந்த அழுகை அரைமணி நேரத்தில் ஓய்ந்தது. என் தந்தை இறந்த போது கலங்கி னேன், அந்தக் கலக்கத்தையும் அடக்க முடிந்தது. ஆனால் கல்யாண சுந்தரம் ... என் கவிதைகள் வெளியீட்டு விழாவிலே லட்சக்கணக் கான மக்கள் நடுவே- என் கைகளைப் பிடித்துக் கண்களில் ஒற்றிக் கொண்டு பெருமை தேடித் தந்தானே... அந்தக் கல்யாணசுந்தரம்... என்னிலும் உயர்ந்தவன் என்று நான் உரிமைக் கொண்டாடிய அந்தக்கல்யாணசுந்தரம் ....புரட்சிக் கவிஞரிடம் பாடம் கேட்டானே அந்தக் கல்யாணசுந்தரம்...

"அண்ணா! நீங்கள் வருகிற பணத்தையெல்லாம் செலவழித்து விடுகிறீர்கள். எப்படியும் உங்களுக்குச் சொந்தமாக ஒரு வீடும், நிலமும் வாங்கிவிடவேண்டும். நீங்கள் பாட்டெழுதும் இடங்களில் பணம் வாங்கக் கூடாது. நான் அவற்றை வாங்கி தங்கள் துணைவி யார் பெயருக்கு பத்திரம் பதிந்து விடுகிறேன்!" என்று உரிமையோடு சொன்னானே அந்தக் கல்யாணசுந்தரம்.... ஐயோ! அம்மா! வேகி றதே நெஞ்சு அவன் இறந்த செய்திகேட்டு அழுதேன்; விம்மினேன்; இன்னும் அடங்கவில்லையே அது.

இரண்டாண்டு காலத்தில் படபட வெனப் புகழேணியில் ஏறி எவரும் பெற முடியாத வாய்ப்பைப் பெற்று பட்டுக்கோட்டை என்ற நகருக்கே பெருமை தேடித் தந்த கலைஞனாக விளங்கி சூறா வளிச்சுற்றுப்பயணம் செய்து 'போதும்!' என்று அலுத்தவன்போல் முடிந்து விட்டானே!

எனக்கு ஓய்வில்லை, கல்யாணத்தைக் கூப்பிட்டு எழுதச்சொல்லுங் கள், என்று நான் சொல்ல, இது அண்ணா எழுதினால்தான் நன் றாக இருக்கும், என்று அவன் சொல்ல இப்படி இருவர் திரையுலகில் நட்புகொண்டதில்லை என்று சொல்லும்படிக்கு வாய்த்த எங்கள் நட்பு சாவின் வாயிலே போய் விழுந்ததே!

படிப்பகம்

padippakam



திரையுலகில் பாட்டெழுதுவோர் வரலாம், போகலாம்! ஆனால் ஒரு பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் இனி வரமாட்டான். ஆரம்பமானான் பெண்ணுக்குள்ளே அவன்... ஆடினான்.. அடங்கி விட்டான் மண்ணுக்குள்ளே! திரையுலகில் அவனே தத்துவஞானி! ஆழ்ந்தசிந்தனை அழுத்தமான சொல்லாட்சி! ஒரு வரிக்கு மறுவரி உயிர்கொடுக்கும் தன்மை- அவன் எழுதிய பாட்டெல்லாம் அப்படி அமைந்தன!.

போய்விட்டான்! சொல்லிக்கொள்ளக்கூட நேரமில்லாமல் போய்விட்டான்! 'சொல்லுறதை சொல்லிப்பிட்டேன்... செய்யிறதைச் செஞ்சிக்குங்க' என்ற தன் பாட்டை பாடமாக விட்டு விட்டுப் போய்விட்டான்.

கல்யாணசுந்தரம்! இறந்தவர்கள் அனைவரையும் மறந்துவிடும் நாடு இது. ஆனால் என் ஆயுட் காலம் வரை நான் மறக்க முடியாத பெயர் உன் பெயர்தான்!

என் உயிர் பிரிந்து விட்டது, இப்போது என் உடம்பில் ஓடிக் கொண்டிருப்பது உன் உயிர்தான்! என் வரையில் நீ சாகவில்லை, என் சாவிலேதான் உன் சாவடங்கும்! என்று மக்கள் கவிஞரின் மரணத்தை மறக்க முடியாது" என்கிறார் கவியரசர் கண்ணதாசன்.

படிப்பகம்

padippakam



87

# அண்ணே பல்லவி கிடைச்சாச்சு

"**நா**ன் பல படங்களில் நடித்துக்கொண்டு பிஸியாக இருந்த நேரம். அப்போது ப.நீலகண்டன் இயக்கித் தயாரித்த 'தேடிவந்த செல்வம்' என்ற படத்திற்காக இரண்டு நாள் கால்ஷீட் கொடுத்திருந்தேன் அந்த இரண்டுநாட்களை பாடல்காட்சிகளை எடுக்க டைரக்டர் திட்டிமிட்டிருந்தார். அந்தப் பாடல்களைத் தம்பி கல்யாணம் எழுதுவதாக இருந்தது!

எப்போதுமே தம்பி கல்யாணத்திற்கு பல்லவி எழுதுவதில்தான் காலதாமதம் ஏற்படும். பல்லவியை எழுதி விட்டான் என்றால் பாடல்களை ஒரிரு நிமிடங்களில் எழுதி முடித்துவிடுவான்.

'தேடி வந்த செல்வம்' படத்தின் பாடலோ ஒரு விவசாயத் தொழிலாளியும் அவன் மனைவியும் சேர்ந்து பாடும் காதல் பாட்டு. பல்லவி புடிபடாததால் கல்யாணம் காலத்தைத் கடத்திக் கொண்டிருந்தான். நான் கொடுத்த கால்ஷீட் தேதி நெருங்கிக்கொண்டிருந்தது. தம்பி பாடல் பதிவு செய்து அதன் பின்பே காட்சியை படம் பிடிக்க வேண்டும் அதனால் இயக்குனருக்கு ஏக டென்ஷன்.

இந்த நிலையில் ஒருநாள் பதட்டத்துடன் நீலகண்டன் என் வீட்டிற்கு வந்தார்!

"என்ன திடீர் விசிட்?"

"இன்னும் இரண்டு நாள்தான் இருக்கிறது- இன்னும் பட்டுக்காட்டை பாடல் எழுதவில்லை. எப்போது எழுதுவார் என்றும் தெரியவில்லை. நீங்க அவரிடம் ஒரு வார்த்தை சொன்னா உடனே எழுதிவிடுவார். ஷூட்டிங்கும் திட்டமிட்டபடி நடந்துவிடும்" என்றார்.

படிப்பகம்

padippakam



நான் யோசித்தேன்.

ஆம்! என் தம்பியின் நெஞ்சுக்குள் பாடல் முதல் வரி இன்னும் முளைக்கவில்லை. அது முளைத்துவிட்டால் வளர்ந்து, செழித்து மரமாக வளர்ந்துவிடும். இந்த சிந்தனையோடு இயக்குனரோடு பட்டுக்கோட்டை வீட்டுக்குச் சென்றேன்.

என் வரவை எதிர்பார்க்காத தம்பி கல்யாணம் பதட்டத்தோடு,

"வாங்கண்ணே! வாங்கண்ணே!" என்று அழைத்தான்.

"என்னடா! பாட்டு ரெடியா" என்றேன்

"அது... வந்து..." என்று இழுத்தான்.

"என்ன செய்வியோ எனக்குத் தெரியாது. இப்பொழுதே எனக்கு பாட்டுவேணும்" என்றேன்.

இயக்குனரைத் தனியாக அழைத்துச் சென்ற தம்பி கல்யாணம் "அண்ணே! அவரு இருந்தா எனக்குப் பாட்டு வராது...இங்கிருந்து அவரைக் கூட்டிட்டுப்போங்க. நாளைக்கு கண்டிப்பா பாட்டு ரெடியாயிடும்" என்று அவன் சொல்லிக் கொண்டிருக்கும்போதே "எனக்குத் தெரியாமா இங்கு என்ன ரகசியம்? நீ என்ன சொன்னாலும் நான் இங்கிருந்து போகமாட்டேன். இங்க வாடா நான் உன் பக்கத்திலேதான் இருப்பேன், ...நீ பாட்டு எழுதணும், அதை நான் பார்த்துப் பார்த்து ரசிக்கணும்...எழுது..." என்றேன்.

"அண்ணே என்ன சொன்னீங்க? அதை இன்னொரு தடவை சொல்லுங்க!" என்று மகிழ்ச்சிப் பெருக்கோடு கேட்டான்.

"நான் உன்பக்கத்திலே இருப்பேன். நீ பாட்டு எழுதியாகணும்... அதை நான் பார்த்துப் பார்த்து ரசிப்பேன்... சீக்கிரம் எழுது" என்றேன்.

"அண்ணே பல்லவி கிடைச்சிடுச்சு!" என்று துள்ளிக் குதித்தான்' 'தேடிவந்த செல்வம்' படத்தின் வெற்றிப்பாடலான

**'பக்கத்திலே இருப்பே**

**நான் பார்த்து பார்த்து ரசிப்பேன்**

**வெக்கத்திலே முழிப்பே**

**நான் விஷயம் தெரிஞ்சி சிரிப்பேன்'**

என்ற பாடலை நொடிப்பொழுதில் எழுதி முடித்தான் தம்பி கல்யாணம். இப்படி பட்டுக்கோட்டையாரை உரிமையுடன் வேலை வாங்கியதை சொல்கிறார் லட்சிய நடிகர் எஸ்.எஸ்.ஆர்.

படிப்பகம்

padippakam



# 88

# ஆங்கில ஹீரோ மெல்பர்க் போல

“**நா**ங்கள் இருவரும் கேரம்கூட ஆடத்தெரியாதவர்கள். வேறு ந்த விளையாட்டிலும் எங்களுக்கு ஆர்வம் கிடையாது. சக நடிகர் கள் சீட்டு ஆடிக்கொண்டிருந்ததால் நாங்கள் வேடிக்கைப் பார்த்துக்கொண்டிருப்போம். எப்போது பார்த்தாலும் படம் பார்ப் பதும், அதிலும் இங்கிலீஷ் படங்களைப் பார்ப்பதும் மற்ற நேரங்களில் எதைப்பற்றியாவது பேசிக்கொண்டிருப்பதும் எங்கள் வாடிக்கை.

பட்டுக்கோட்டை உயரமாக வடநாட்டுக்காரர்போல் இருந்த தால் அவரை பலரும் ‘ஜி’ என்றுதான் அழைப்பார்கள். நானும் ‘ஜி’ ன்று தான் அழைப்பேன்/ அவர் என்னை ‘மாப்பிள்ளை’ ன்றுதான் அழைப்பார்.

அப்போது ‘பென்ஹர்’ என்ற ஒரு இங்கிலீஷ் படம் ஓடிக் கொண்டிருந்தது. அந்தப்படத்தில் ‘மெல்பர்க்’ என்ற ஹீரோ நடித் திருந்தார். அவரும் பட்டுக்கோட்டையும் ரெட்டையர்போல் இருப்பார்கள். அதனால் சிவாஜிகூட பட்டுக்கோட்டையை மெல்பர்க் என்றுதான் அழைப்பார்.

திண்டுக்கல் விவசாய சங்க மாநாட்டில் ‘கண்ணின் மணிகள்’ ாடகம் நடந்தது. ஐம்பதாயிரம் பேர் கூட்டம், பட்டுக்கோட்டையின் ாட்டுக்கு பெருத்த வரவேற்பு.

இந்தப்பாடலைக் கேள்வியுற்ற ஏ.எல். நாராயணன் சேலம் ார்டன் தியேட்டர்ஸிலிருந்து ‘பாசவலைக்கு’ பாடல் எழுத வரும்படி பட்டுக்கோட்டையாருக்குத் தந்தி கொடுத்தார். சேலம் செல்வதற்குக் கூட அப்போது அவரிடம் காசு கிடையாது. நான் ப்படியோ சமாளித்து பணம் தயார் செய்து பட்டுக்கோட்டையை சேலத்துக்கு அனுப்பினேன்” என்கிறார் வசனகர்த்த ஏ. வீரப்பன்.

படிப்பகம்

padippakam



89

# 'செத்தால் அழாதே, அன்று பிரியாணி சாப்பிடு'

ஒருநாள் பட்டுக்கோட்டையை உடுமலை நாராயண கவியிடம் அழைத்துச் சென்று 'பாசவலை' படத்தில் வந்த 'குட்டி ஆடு தப்பிவந்தா' என்ற பாடலை எழுதியவர் இவர்தான் என்று அறிமுகப்படுத்தினேன் பட்டுக்கோட்டையைப் பார்த்த அவர் "நான் ஒரு கிழவன்தான் எழுதியிருப்பான்னு நினைச்சேன். ...நீயா அந்தப்பாட்டை எழுதின? ரொம்ப நல்லா எழுதியிருக்க, உனக்கு நல்ல எதிர்காலம் இருக்கு...ரொம்ப நல்லா வருவே" என்று சொல்லி வாழ்த்தியிருக்கிறார் உடுமலை.

நாங்கள் இருவரும் சாமிகும்பிடுவதோ, மூடபழக்க வழக்கங்களில் ஈடுபட்டதோ கிடையாது. ஒருமுறை பட்டுக்கோட்டை என்னிடம் "நான் செத்தால் நீ அழக்கூடாது...முட்டாள் தனமா நடக்கக்கூடாது... பல இடங்களில் பிணத்தை வைத்துக்கொண்டு கூத்தடிப்பதை நான் பார்த்து வேதனைப்பட்டிருக்கிறேன். அது எனக்குப் பிடிக்காது... அதனால் நான் செத்தால் நீ அழாமல் அன்று பிரியாணி வாங்கிச் சாப்பிடவேண்டும். அதுபோல் எனக்கு முன் நீ செத்துவிட்டால் நானும் உனக்குக் கூறியது போலவே நடந்து கொள்வேன்" என்றார். ஆனால் விதி விளையாடியது. அவர் இந்த இளம் வயதில் இப்படி மரணத்தைத் தழுவுவார் என்று நான் நினைத்துப்பார்க்கவில்லை.

உடல் நிலை பாதிக்கப்பட்டு சில நாள் மருத்துவமனையிலிருந்து பின்பு இறந்திருந்தால் பரவாயில்லை. மருத்துவமனை போனார் மறைந்தார்! எனக்கு ஒன்றும் புரியவில்லை. அவர் அழக்கூடாது என்றும், பிரியாணி சாப்பிடவேண்டும் என்றும் சொன்னது என்னை மீண்டும் மீண்டும் வந்து தாக்கியது. கடைசியில் அந்தக் கவிஞனே வென்றார். ஆம்! அவர் சொன்னதை நான் செய்து காட்டினேன். அந்த மக்கள் கவிஞன் இறந்த அன்று நான் அழவில்லை, பிரியாணி சாப்பிட்டேன்! ஏனென்றால் எனக்குள் அவர் இருந்துகொண்டு என்னை வழி நடத்தியதால் அவர் கட்டளையை என்னால் மீற முடியவில்லை" என்று நட்பை சொல்கிறார் நகைச்சுவை நடிகர், வசனகர்த்தா ஏ. வீரப்பன்.

படிப்பகம்

padippakam



௰

# மக்கள் கவிஞர் பாடல்கள் புத்தகமானது

“1960-ம் ஆண்டு சென்னை முத்தியாலுப்பேட்டை லிங்கிச் செட்டித் தெருவிலுள்ள மல்லீஸ்வரன் கோயில் அருகில் மக்கள் கவிஞரின் ரசிகப் பெருமக்களால் முதல் நினைவு நாள் கூட்டம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அந்தக்கூட்டத்தின் முக்கியப் பேச்சாளராக இலக்கியப் பேராசான் கம்யூனிஸ்ட் தலைவர் ப. ஜீவானந்தம் அழைக்கப்பட்டிருந்தார்.

ஜீவாவும், ஐ.மாயாண்டி பாரதியும் மக்கள் கவிஞருடன் மிக மிக நெருங்கிய இலக்கிய உறவு கொண்டிருந்தனர். குறிப்பாக ஜீவாவை தம் ஆசானாகவும் கருதியவர் பட்டுக்கோட்டை.

சென்னை ராயப்பேட்டை சீனிவாசப்பெருமாள் கோயில் தெருவில் மாயாண்டி பாரதியும் பட்டுக்கோட்டையாரும் வசித்தனர். மாயாண்டி பாரதி வீட்டைக் கடந்துதான்தமது வீட்டுக்கு மக்கள் கவிஞர் செல்லவேண்டும். அதனால் நெருங்கிய தோழமையும் நட்பும் இவர்களுக்கிடையே இருந்தது.

படிப்பகம்

padippakam



மக்கள் கவிஞரின் நினைவு நாள் கூட்டத்தில் ஆறுமாதக் குழந்தை குமாரவேலுவுடன் தவித்த மக்கள் கவிஞரின் மனைவி திருமதி கௌரவாம்பாள் அவர்களின் மனநிலை குறித்தும் கவிஞரின் பாடல்கள் திரைப்படங்களில் ஆட்சி செலுத்தியதையும் அந்தப் பாடல்களில் உள்ள முற்போக்கு சிந்தனைகளையும் தமக்கே உரித்தான முறையில் ஆவேசமாக உரையாடிய ஜீவா இந்தக்கூட்டத்தில் பல அறிஞர்களும், ரசிகப்பெருக்மக்களும் இருக்கக் கூடும். அவர்களில் யாரேனும் பட்டுக்கோட்டையாரின் திரைப் படப்பாடல்களைத் தொகுத்து நூலாக வெளியிட்டு அதன் மூலம் வரும் ராயல்டி தொகை அந்தக் குடும்பத்திற்கு சேருமானால் காலத்தில் செய்த உதவியாக அது அமையும்" என்ற வேண்டுகோளோடு ஜீவா சொற்பொழிவை முடித்தார்.

அந்தக்கூட்டத்தில் ரசிகனாக நானும் கலந்து கொண்டேன். ஜீவாவின் வேண்டுகோள் என் மனதில் பசுமரத்தாணிபோல் பதிந்திருப்பினும் “இந்த அரும்பெரும் பணியை நம்மால் எப்படிச் செய்ய இயலும் ? என்ற தயக்கத்தினால் 1963-ம் ஆண்டுவரை எந்தவித முயற்சியிலும் ஈடுபடாமல் இருந்தேன்.

மக்கள் கவிஞரின் பாடல்களை இலக்கியக் கூடங்களிலும் அரசியல் மேடைகளிலும் மேற்கோள் காட்டி முழங்கி வந்தார்களே தவிர, எவரும் தொகுக்கும் முயற்சியில் ஈடுபடவில்லை. பட்டுக்கோட்டையாரின் பாடல்கள் தொகுக்கப்பெற்ற நூல் வடிவம் பெறாவிட்டால் காற்றில் மறையும் கீதமாகப் போய்விடுமே என்று அஞ்சினேன். இதுபற்றி எனது ஆதங்கத்தை பலரிடம் பகிர்ந்தேன்.

இறுதியில், “ஏன்? அடுத்தவர் செய்யட்டும் என்று நாம் காத்திருக்கவேண்டும்? நாமே அந்தப் பணியைச் செய்யலாமே” என்று தோன்றியது.

பட்டுக்கோட்டையாரின் பாடல்களைத் தொகுக்கும் முயற்சியில் நான் ஈடுபடத்தொடங்கினேன். அப்போது ஒருசிலர் தன்னிடமிருந்த பட்டுக்கோட்டையார் பாடல் சிலவற்றை எனக்குக் கொடுத்து உதவினர். அவர்களில் முதலில் தந்தவர் தா.பாண்டியன். தாமரையில் வெளிவந்த ஒருபாடலையும் சேர்த்து சுமார் 15 பாடல்களைத் தோழர் தா.பாண்டியன் என்னிடம் ஒப்படைத்தார். எனது முயற்சிக்கு இது ஒரு உந்து சக்தியாக அமைந்தது. பின்னர் கடைகளில் விற்கும் சினிமா பாட்டுப் புத்தகங்களை வாங்கும் பணியில் ஈடுபட்டேன்.

படிப்பகம்

padippakam



நியூ செஞ்சுரி புக்ஹவுசில் எனக்குகீழே பணியாற்றிக்கொண்டிருந்த இளைஞர்கள் ஜி.எம்பார்த்தசாரதி, பரந்தாமன் ஆகியோர் இந்தத் தேடும் பணியில் எனக்கு பேருதவி புரிந்தனர். சினிமா பாட்டுப் புத்தகங்களில் அச்சுப்பிழைகளும், பாடல் இயற்றியவர்களின் பெயர் களை தாறுமாறாகவும் வெளியிட்டு இருந்தனர். இது எனக்கு சோர்வை உண்டாக்கியது. இருப்பினும் ஒருசில பாடல்களை பிரதி எடுத்து, மக்கள் கவிஞரின் பாடல்கள்தானா என்பதை நண்பர்களி டம் உறுதி செய்து கொண்டு, சுமார் 70 பாடல்கள் கொண்ட முதல் தொகுப்பினை உருவாக்கினேன். இதற்கு எனக்கு இரண்டு ஆண்டுகாலம் பிடித்தது.

அந்த 70 பாடல்களையும் தட்டச்சு செய்து, ஒரு பிரதியை தவத்திரு குன்றக்குடி அடிகளாருக்கு அனுப்பி, முன்னுரை வேண்டி னேன். என்ன காரணமோ தெரியவில்லை. ஒரே வாரத்தில் அடிகளா ரின் முன்னுரை வந்தது. அந்த முன்னுரை ஓர் ஆய்வுக்கட்டுரையாக அமைந்தது.

அதேபோன்று முதற் பதிப்பிற்கு தோழர் ஆர்.கே.கண்ணனிடம் பதிப்புரை எழுதும்படி வேண்டினேன். அவர் மக்கள் கவிஞரின் படைப்பாற்றலை மிகவும் பாராட்டி "தஞ்சை தரணி, இரண்டு கல்யாணசுந்தரங்களை வழங்கியது ஒருவர் திரு.வி.க. மற்றொருவர் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம்" என்று குறிப்பிட்டு, அச்சில் இரண்டு பக்க அளவில் பதிப்புரை எழுதினார்.

அடிகளாரின் முன்னுரையும், ஆர்.கே.கண்ணனின் பதிப்புரையும் என்னுடைய முயற்சிகளுக்கு தூண்டுகோலாக நிகழ்ந்தன. "மக்கள் கவிஞர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் பாடல்கள்" என்ற தொகுப்பு 1965 மே மாதத்தில் வெளியானது" என்கிறார் தோழர் பி.சி. பாலகிருஷ்ணன்.

படிப்பகம்

padippakam



91

# அசந்து போனேன்

**–எம்.எஸ். விஸ்வநாதன்**

*"மாடர்ன் தியேட்டர்ஸ், அவங்க அடுத்தபடமான 'பாசவலை'க்கும் எங்களையே ஒப்பந்தம் பண்ணினாங்க. படம் ஒரு மியூசிகல் சப்ஜெக்ட். அதனால பாட்டுக்கள் எல்லாம் நல்லா வரணும்னு சொல்லிட்டாங்க.*

*மறுபடியும் சேலத்துல கேம்ப் 'பாசவலை' படத்துக்காக ஒருநாள் மாடர்ன் தியேட்டர்ஸ் மானேஜர் சுலைமான் என்கிட்ட வந்தாரு.*

*"பையன் ஒருத்தன் வந்திருக்கான்...பாட்டெல்லாம் நல்லா எழுதுவானாம்... நான் நம்ம படத்தோட சில சிச்சுவேஷன் சொல்லி யிருக்கிறேன்...அவன் பாட்டு எழுதிக்கொண்டு வந்திருக்கானாம்" என்று சுலைமான் சொன்னாரு.*

*எனக்கு 'பாசவலை' படத்தோட கதை மனப்பாடம் ஆயிடுச்சு. நான் விஷுவலாவே மனசுக்குள்ளே படம் பார்த்துட்டேன்.*

*நான், "சுலைமான்...எங்களுக்கு ஏற்கனவே கைவசம் நிறைய படங்கள் இருக்கு...இந்தப்படத்துக்காக இங்கே இருக்கப்போறது ஆறே நாள்தான், மெட்ராஸ்ல வேற வேலை நிறைய இருக்கு... கண்ணதாசன், மருதகாசி, யாரையாவது எழுதச் சொல்லுவாங்க. இப்ப புதுசா பாட்டெழுதறவங்களை பார்க்குறதெல்லாம் எங்க டைம்மை வேஸ்டு பண்ண முடியாது..."ன்னு கொஞ்சம் அகந்தை யோட சொன்னேன்.*

படிப்பகம்

padippakam



அந்தப் பையன் போயிட்டு அடுத்த நாளும் வந்தான். "என்னங்க.. அந்தப்பையன் நல்லாவே பாட்டு எழுதியிருக்கான்.. அதைக் கொஞ்சம் படிச்சுத்தான் பாருங்களேன்.. நல்லா இருந்தா கூப்பிடுங்க.. நல்லாயில்லேன்னா நானே அனுப்பிச்சுடறேன்" என்றார் சுலைமான்.

"சரி..சரி.. அந்தப்பாட்டை வாங்கிட்டு வாங்கன்னு" சொன்னேன். வாங்கிப் படிச்சேன்.

**"குட்டி ஆடு தப்பி வந்தா குள்ளநரிக்கு சொந்தம்**
**குள்ளநரி தப்பிவந்தா கொறவனுக்கு சொந்தம்**
**தட்டுக்கெட்ட மனிதர் கண்ணில் பட்டதெல்லாம் சொந்தம்**
**சட்டப்படி பார்க்கப்போனால் எட்டடிதான் சொந்தம்..."**

இன்னிக்கும் எனக்கு பசுமையா நினைவில் இருக்கு. நேற்று ரிக்கார்ட் பண்ண பாட்டோட வரிகள் எல்லாம் இன்னிக்கு ஞாபகத்துக்கு வரலை. ஆனால் கிட்டத்தட்ட 32 வருடத்திற்கு முன்னாடி எழுதப்பட்ட பாட்டோட வரிகள் இவை,

அந்தப்பாட்டை படிச்சுட்டு நான் அசந்து போயிட்டேன். 'இப்படி ஒரு கவிஞன் இருக்கானா? ... உடனே அவனை வரச் சொல்லுங்க சார்'னு சுலைமான்கிட்டே சொன்னேன்.

என் எதிர்ல வந்து நின்ற அந்த இளைஞன் பனைமர உயரத்திற்கு இருந்தான். அந்த இளைஞன்தான் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம். அவனை அப்படியே உட்கார வச்சு அந்தப்பாட்டை கொடுத்த இன்ஸ்பிரஷன்லே பத்தே நிமிஷத்திலே அதுக்கு ட்யூன் போட்டுட்டேன்.

அன்னிக்கு சாயந்தரம்-மாடர்ன் தியேட்டர்ஸ்லே ஒரு பூஜை ரூம் உண்டு. அதுக்குள்ளே போயிட்டு கதவைச் சாத்திட்டு சாமிப்படங்கள் முன்னாலே, 'ஆண்டவா... நான் எப்படிப்பட்ட தவறு செஞ்சிட்டேன்'னு சுவத்திலே மோதி அழுதேன்.

ஏண்டா விஸ்வநாதா! அதுக்குள்ளே உனக்கு அவ்வளவு திமிரு வந்திருச்சா, அறிவு கெட்டவனே நீ பெரிய ஆளுன்னு நினைப்பா கவிதை எழுதி வந்தவன்கிட்டே என்ன இருக்குன்னு தெரியாமலே திருப்பி அனுப்புற அளவுக்கு உனக்கு அவ்வளவு கொழுப்பான்னு என்னை நானே திட்டிக்கிட்டு கண்ணீர் விட்டேன். ராத்திரி சாப்பிடாமே உண்ணாவிரதம் இருக்கிறதுன்னு முடிவு பண்ணி

படிப்பகம்

padippakam



பட்டினி கிடந்தேன். தூக்கமே இல்லை. என்னை நானே வருத்திக்கிட்டேன்.

அந்தப்படத்துல இன்னும் சில பாடல்கள் எழுத சான்ஸ் கொடுத்தேன். இது முடிஞ்சவுடனே, கல்யாணசுந்தரத்தை கையோட மெட்ராஸுக்கு அழைச்சிட்டு வந்தேன். டைரக்டர் பீம்சிங்கிடம் அறிமுகம் செஞ்சு வைச்சேன்.

'பாசவலை' என்ற படத்தின் மூலமாக தொழில்ரீதியாகவும் குடும்ப நண்பராகவும் எங்களோடு வளர்ந்து வந்தார் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்.

'பதிபக்தி', 'தங்கப்பதுமை' , 'புதையல்', 'ஆளுக்கொரு வீடு', 'அமுதவல்லி' இப்படி எத்தனையோ படங்களில் எங்களோடு வாழ்ந்து வந்த கவிஞர், 60 வயது அறிவை 30 வயதிலேயே முடித்து கொண்ட அவர் புகழ் வாழ்க வளர்க." என்று உருகுகிறார் மெல்லிசை மன்னர் எம்.எஸ்.விஸ்வநாதன்.

படிப்பகம்

padippakam



92

# தன் திறமையால் உயர்ந்தவர்

“நாங்கள் விழுப்புரத்தில் அப்போது நாடகத்தில் நடித்துக் கொண்டிருந்தோம். இரவு நேரங்களில் ஒருகையில் ஏணியும் மறுகையில் போஸ்டரோடும் வீதிவீதியாகச் சென்று நானே போஸ்டர் ஒட்டுவேன். அப்போது வறுமை எங்களை வாட்டிக் கொண்டிருந்தது. அந்த நேரத்தில்தான் பட்டுக்கோட்டை எங்கள் நாடகக் கம்பெனிக்கு வந்தார். என்னை சந்தித்தார்.

“நான் நல்லா பாட்டு எழுதுவேன் உங்கள் நாடகத்தில் ஒரு சான்ஸ் கொடுங்கண்ணே” என்று கேட்டார். நான் பலமாக சிரித்தேன். ஒன்றும் புரியாது அவர் திகைத்து விட்டார்.

“எப்படியோ கஷ்டப்பட்டு நாங்க நாடகம் போடுறோம்... பார்க்கிறதுக்கு ஜனங்க வர்றது ரொம்ப கஷ்டம்...இந்த நிலையில் நீங்க பாட்டெழுத வந்துட்டீங்க...அது சரி... அந்தப்பாட்டை யாரு கேட்கிறது?” என்று சொல்லி சிரித்தேன்.

எங்கள் நிலைமையை புரிந்துகொண்ட பட்டுக்கோட்டை இரண்டொரு நாளில் அங்கிருந்து புறப்பட்டுவிட்டார். இதுதான் நானும் பட்டுக்கோட்டையாரும் சந்தித்துக்கொண்ட முதல் சந்திப்பு.

அதன்பின் சென்னையில் என் வாழ்க்கை. பட்டுக்கோட்டையாரும் சென்னை ராயப்பேட்டையில் நண்பர் ஓ.ஏ.கே. தேவரோடு தங்கிக் கொண்டு சினிமாவில் பாட்டெழுதுவதற்காக முயன்றுகொண்டிருந் தார். இந்தக்காலகட்டத்தில், அவர் பட்ட கஷ்டங்களை சொல்லி முடியாது. ஒவ்வொரு நாளும் ஒருவேளை சோற்றுக்கே அப்பப்பா... அதை நினைத்துப் பார்க்கவே கஷ்டமாக இருக்கிறது.

எப்படியோ அந்த துயரசேற்றிலிருந்து விடுபட்டு, தம் திறமையை மட்டுமே துணையாகக்கொண்டு பட்டுக்கோட்டை சாதனை படைத்து வந்தார், ‘எல்லா படத்திலும் அவர் பாடல்’ என்ற நிலையை உருவாக்கினார்” என்கிறார் பழம்பெரும் நடிகர் வி.கே. ராமசாமி.

படிப்பகம்

padippakam



93

# சமரசமற்ற ஒரு போராளி

**-சி. மகேந்திரன்**

பட்டுக்கோட்டை சமகாலக் கவிஞர்களின் முன்னோடியாக திகழ்ந்தற்கு, இளமையில் கிடைத்த வாய்ப்பு மட்டும் காரணமல்ல, வளர்ந்தபின் அவர் உருவாக்கிக்கொண்ட சிந்தனைத் தெளிவு. என வேதான் இவரது பாடல்களில் அழுகுரல் கேட்டதில்லை. சமுதாயத்தின் போலித்தனங்களை எவ்வளவு வேகமாக சாடினா ரோ அதைவிட கூடுதலான நம்பிக்கையை சமுதாயத்தின்மீது கொண்டிருந்தார்.

காலம், அவருக்கு நிறைய உதவி புரிந்திருக்கிறது. இவர் பிறந்தது 1930-ல், ஆங்கிலேயர் ஆட்சி இந்தியாவின் நில உரிமை, ஆங்கிலேயர் நேரடி அதிகாரத்திற்கு வந்துவிட்டது. தஞ்சை மாவட்டத்தில் பட்டுக்கோட்டையை சுற்றி உள்ள கிராமங்கள், ஜமீன் ஆளுகைக்கு உட்பட்டிருந்தது.

இந்தப்பகுதியில் ஜமீனை எதிர்த்து விவசாயிகளின் கிளர்ச்சி மிகப் புகழ்பெற்றவை. அம்பலாப்பட்டு எனும் கிராமத்தில் எழுச்சி அடைந்த விவசாயிகள் ஜமீன்தாரை ஊரைவிட்டு விரட்டி அடித்து நிலத்தை பங்கிட்டுக்கொண்டார்கள். தன்னை சுற்றி நடைபெற்ற போராட்டத்தில் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் மேலும் மேலும் பயன்படுத்தப்பட்டிருக்கிறார்.

கவிஞர்களுக்கு எப்போதுமே வீரர்களின்மீது தனி ஆதர்சம் உண்டு. சிவராமன், இரணியன் இருவருமே தடை செய்யப்பட்ட கம்யூனிஸ்ட் இயக்கத்தில் போர்க்குணம் மிகுந்த தொண்டர்கள். பல்வேறு சதிவழக்குகள் தொடரப்பட்டு மறைந்து, ஒளிந்து வாழ்க்கை நடத்தி வந்த இந்த இருவருக்கும் பட்டுக்கோட்டைக்கும் ஏற்பட்ட நட்பு பாரதிக்கும் பல புரட்சியாளர்களுக்கும் ஏற்பட்டி ருந்த தொடர்பை நினைவுபடுத்துகிறது. இயக்கத்தின் இந்த தொடர்புதான் சித்தாந்த போராட்டத்தில் ஒரு சமரசமற்ற போராளியாக இவரை உருவாக்கியிருக்கிறது" என்கிறார் 'தாமரை இதழின்' பொறுப்பாசிரியர் தோழர் சி. மகேந்திரன்.

படிப்பகம்

padippakam



94

# நடிப்பு அல்ல பாட்டு எழுதுவதுதான் பிடிக்கும்

'பம்பாய் மெயில்' என்று ஒரு நாடகம். அந்த நாடகத்தில் ஓ.ஏ.கே.தேவரும், பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரமும் கான்ஸ்டபிள் வேடத்தில் நடித்தார்கள். நாடகம் முழுவதும் ஒரே சிரிப்புத்தான். ஓ.ஏ.கே. தேவரைவிட பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் நடிப்பு அற்புதமாக இருக்கும். நாடகம் பார்க்கிற ஜனங்கள் எல்லாம் சிரித்துக்கொண்டே இருப்பார்கள்.

நாடகமேடைக்கு பின்புறம் மேக்கப் போட்டுக்கொண்டிருக்கும் என்னைமாதிரி சக நடிகர்களுக்கும் சிரிச்சி சிரிச்சி வயிறு புண்ணாகிவிடும். அதைப்பார்த்துவிட்டு ஒருநாள் பட்டுக்கோட்டையிடம் "கல்யாணம் நீதான் ரொம்ப நல்லா நடிக்கிறயே...அப்புறம் ஏன் பாட்டெழுதணும்னு ஆசைப்படுறே... அந்த ஆசையை மூட்டைகட்டி வச்சிட்டு நடிப்பில் மட்டும் கவனத்தை செலுத்து, பெரிய நடிகனாயிடலாம்" என்று சொன்னேன்.

"அய்யய்யோ! அந்த ஆசையை மட்டும் என்னால் விடமுடியாதுண்ணே... நான் என்னிக்காவது ஒருநாள் சினிமாவில் பாட்டெழுதியே தீருவேன்... அதிலே ஜெயிச்சும் காட்டுவேன்..." அப்படீன்னு பட்டுக்கோட்டை என்னிடம் சொன்னார்... ஜெயிச்சும் காட்டினார் அவர் நினைத்ததை முடித்துக்காட்டிய கவிஞர்" என்கிறார் நடிகர் சி.எஸ். பாண்டியன்.

padippakam



95

# 'நீ பெரிய ஆளா வருவே'

## -கலைவாணரின் கணிப்பு

"நண்டு செய்த தொண்டு" என்று ஒரு கவிதையை பட்டுக் கோட்டை எழுதியிருந்தார். பண்ணையார் நிலத்தில் தண்ணீரும் ஏழை விவசாயி நிலத்தில் வறட்சியும் இருப்பதைக்கண்ட ஒரு நண்டு வரப்பில் ஓட்டை போட்டதாம் அந்த ஓட்டை வழியாக பண்ணையார் நிலத்தில் இருந்த தண்ணீர் ஏழை விவசாயி நிலத்திற்கு சென்றதாம். அதனால் அந்த நண்டையும், அது செய்த தொண்டையும் புரட்சி நண்டு செய்த தொண்டு என்று வர்ணித்திருந்தார்.

பட்டுக்கோட்டையாரின் இந்தக் கவிதையைப் படித்த நான் அவருடைய கவிதைத் திறமையையும் சினிமாவில் பாட்டெழுத வேண்டும் என்ற ஆர்வத்தையும் அறிந்து, பட்டுக்கோட்டையிடம், "வாங்க ஒரு இடத்துக்குப் போயிட்டு வரலாம்" என்று அழைத்தேன் அவர், "எங்கே?" என்றார். "பேசாமா என்னோட வாங்க"...நீங்க போகவேண்டிய இடத்துக்குத்தான் உங்களைக் கூட்டிட்டுப் போறேன்" என்று சொல்லிவிட்டு பட்டுக்கோட்டையை அழைத்துச் சென்றேன்.

படிப்பகம்

padippakam



கலைவாணர் என்.எஸ்.கே. வீடு. கீழே பட்டுக்கோட்டையை உட்காரச் சொல்லிவிட்டு கலைவாணர் இருக்கும் மேலறைக்கு சென்றேன்.

கலைவாணரிடம் "நண்டு செய்த தொண்டு " என்ற கவிதையைக் காட்டி, "இந்தக் கவிதை எப்படி இருக்கிறது" என்று கேட்டேன்.

கவிதை முழுவதையும் படித்த கலைவாணர் "ரொம்ப அருமை" என்று பாராட்டினார். இந்த கவிதையை எழுதியது யார் என்று தெரியுமா என்று கலைவாணரிடம் கேட்டேன். அவர் சிரித்துக் கொண்டே "என்ன புதிர் போடுறே... இப்படிப்பட்ட கருத்தாழமிக்க கவிதைகளை யார் எழுதுவார்? நம்ம வாத்தியார் உடுமலை நாராயணன் கவிதான் எழுதியிருப்பார்" என்றார்.

"அப்படியா?... இருங்க கீழே உடுமலை நாராயண கவியை உட்கார வைத்திருக்கிறேன் போய் அழைத்து வருகிறேன்" என்றேன். "வாத்தியார ஏண்டா கீழே உட்கார வச்சே இரு... நானே கீழேபோய் அவரை அழைச்சிட்டு வாரேன்" என்றார்.

"இல்லை இல்லை... நீங்க இங்கேயே இருங்க. நான் போய் அழைச்சுட்டு வாரேன்" என்று கீழே வந்து பட்டுக்கோட்டையை அழைத்துக்கொண்டு மேலே சென்றேன்.

பட்டுக்கோட்டையாரை கலைவாணர் பார்த்தார்.

நெடிய, ஒல்லியான உருவம், கழுத்தில் நீளமான துண்டு. யாரென்று கலைவாணருக்குப் புரியவில்லை.

"நீங்க சொன்னீங்களே... 'நண்டு செய்த தொண்டு' என்ற அருமையான கவிதையை எழுதியவர்" இவருடைய பெயர் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம்" என்றேன்.

பட்டுக்கோட்டையை ஆச்சரியத்தோடு பார்த்த கலைவாணர் "தம்பீ! ரொம்ப நல்லா எழுதியிருக்கீங்க...அற்புதமான சிந்தனை...அழகான கற்பனை....நீ எப்படியும் பெரிய ஆளாவருவே" என்று பட்டுக்கோட்டையை வாழ்த்தினார்" இப்படி மக்கள் கவிஞருடன் ஏற்பட்ட அனுபவத்தைச் சொல்கிறார் நடிகர் சி.எஸ். பாண்டியன்.

படிப்பகம்

padippakam



௯௬

## மக்களை ஈர்த்த பாடல்கள்

**-நெல்லை கண்ணன்**

தமிழ் நாட்டில் ஒரு திரைப்படக் கலைஞர் அரசாள முடியும் என்று காட்டி ஆட்சிக் கட்டில் ஏறி அமர்ந்த எம்.ஜி.ஆர். அவர் களின் மக்கள் செல்வாக்கிற்கு அடிப்படைக் காரணமே பட்டுக் கோட்டையின் பாடல்கள்தான். ஆமாம்! திருடாதே பாப்பாவும், சின்னப்பயலேயும், தூங்காதே தம்பியும், காடு வெளஞ்சென்ன மச்சானும்தான் எம்.ஜி.ஆர். அவர்களை மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாக்கின.

இறந்தும் இன்னும் ஏழை எளியவர்களின் இதயங்களில் எம்.ஜி.ஆர். வாழ்ந்து கொண்டிருப்பதற்கு காரணமே பட்டுக்கோட்டையின் பாடல் வரிகள்தான். உண்மை இது வெறும்

படிப்பகம்

padippakam



புகழ்ச்சியல்ல.

ஆம்! 'நாடோடி மன்னன்' 'சும்மா கெடந்த நெலத்த கொத்தி' என்ற பட்டுக்கோட்டையின் பாடல்தான் எம்.ஜி.ஆரின் தேர்தல் அறிக்கை என்றே மக்கள் நம்பினார்கள். தமிழக வரலாற்றில் மிகப்பெரிய புகழையும் ஏழைகளின் தலைவரென்று இதயங்களில் வீற்றிருக்கின்ற வாய்ப்பையும் பெரியவர் எம்.ஜி.ஆர். பெறுவதற்கு அடித்தளமிட்டதே பட்டுக்கோட்டையாரின் வலிமையும் எளிமையும் சிந்தனை நிறைந்த பாடல் வரிகள்தான்.

**'சிந்திச்சுப் பாத்து செய்கையைப் மாத்து-தவறு**

**சிறிசா இருக்கையில் திருத்திக்கோ**

**தெரிஞ்சி தெரியாம நடந்திருந்தா -அது**

**திரும்பவும் வராம பாத்துக்கோ"**

இன்னும் காதுகளில் ஒலித்துக்கொண்டே இருக்கிறது. பட்டுக்கோட்டையாரின் பாடல்தான்.

படிப்பகம்

padippakam



97

ஆனால், எம்.ஜி.ஆர். பாட்டாகத்தான் ஏழைகளிடம் இன்னும் நிற்கிறது" என்று மக்கள் கவிஞரின் பாட்டுத் திறத்தை சொல்கிறார் பேச்சாளர் நெல்லை கண்ணன்.

## என்றும் மாறாத மனிதர்கள்

"பட்டுக்கோட்டையிடம் எனக்கு மிகவும் பிடித்தது அவரது குணமும் பண்பும்தான். பாடல் எழுத வந்த ஆரம்ப காலத்தில் அவர் எப்படி இருந்தாரோ, அப்படியே தனது கடைசிக் காலம் வரை இருந்ததுதான் என் மனதில் பதிந்து விட்டது.

முதன் முதலில் அவரை 25 ஆண்டுகளுக்கு முன்பு நான் பார்த்த போது எப்படி எந்த உடையில் இருந்தாரோ அதே உடையில் தோற்றத்தில் அவர் இருந்தார். ஒரு கிராமவாசி தோற்றத்தில் எளிய உடையில்தான் முதன் முதல் நான் அவரைப்பார்த்தேன். எட்டு ஆண்டு களில் பல படங்களுக்கு

படிப்பகம்

padippakam



பாடல் எழுதும் வாய்ப்புக் கிடைத்த போதும் அந்த பாடல்களின் மூலம் வசதிகள் கிடைத்த போதும் ஓரளவு செல்வம் சேர்ந்த போதுகூட அந்தத் தோற்றமும் உடையும் அவரிடம் மாறவே இல்லை, பிறரிடம் அவர் பழகிய முகம்கூட அவரிடம் மாறியதில்லை.

'கல்யாணப் பரிசு'க்கு நான் இசையமைத்து அவர் பாடல் எழுதிய போது என்னுடைய இசையமைப்பை பற்றி அடிக்கடிக் கூறுவார். 'நான் பல இசையமைப்பாளர்களுக்கு பாட்டுக்களை எழுதிக் கொண்டிருக்கிறேன். ஆனால் உங்கள் இசையில் பல புதுமைகளைக் காண்கிறேன். எனவே நீங்கள் இப்படத்தின் இசையமைப்பிற்காக பல பரிசுகளை வாங்கப்போகிறீர்கள்' என்று படம் வெளிவருவதற்கு முன்னாலேயே சொல்லிக்கொண்டிருப்பார்.

அவர் சொன்னது எவ்வளவு உண்மையானது என்பது உங்களுக்கும் தெரிந்ததுதான். படம் வெளியாகி அந்த ஆண்டின் மிகச் சிறந்த இசையமைப்பாளர் என்ற பரிசை தமிழக ஆளுனரிடமிருந்து பெற்றபோது அவர் சொன்ன வார்த்தைகள் என் மனதில் எதிரொலித்தது. அதைத் தொடர்ந்து பல பரிசுகளைப்

படிப்பகம்

padippakam



பெறுகிற போதெல்லாம்கூட அவரது வாழ்த்துக்களை நினைவு கூர்கிறேன்.

இத்தகைய ஆற்றல் மிக்க இக்கவிஞர் மேலும் பல கவிதைகள் எழுதப்போகிறார் என்று நினைத்துக் கொண்டிருந்த எனக்கு அவ ரது அகால மரணச்செய்தியைக் கேட்டபோது நான் மிகவும் வேதனைப்பட்டேன். அவரது இழப்பு திரையுலகிற்கும் கவியுலகிற் கும் பேரிழப்பு என்று உணர்ந்தேன்" என்கிறார் பின்னணிப்பாடகர், இசையமைப்பாளர் ஏ.எம்.ராஜா.

## எங்கும் அவர் பாட்டு ஒலித்தது

–டி.எம்.எஸ்.

"அவருடைய பாடல்கள் ஒன்றா, இரண்டா எடுத்துச் சொல்ல... 1954-ல் இருந்து அவர் மறையும்வரை எங்கு பார்த்தாலும் அவர் பாட்டுத்தான்.

காலையில் எழுந்து பாடுவதற்கு ஸ்டுடியோவுக்குச் செல்வேன்...

படிப்பகம்

padippakam



"யார் பாட்டு?" என்று கேட்பேன், "பட்டுக்கோட்டை பாட்டு" என்பார்கள். அந்தப்பாட்டை பாடி முடித்துவிட்டு, அடுத்த ஸ்டூடியோவுக்குப் போவேன். "யார் பாட்டு?" என்று கேட்பேன், "பட்டுக்கோட்டை பாட்டு" என்று பதில் வரும்.

எங்கு சென்றாலும் "பட்டுக்கோட்டை ...பட்டுக்கோட்டை" என்ற சொல்தான் காதில் விழும்.

அவர் எழுதிய பாடல்களைப் பாடுகின்ற வாய்ப்பை அதிகமாகப் பெற்றதற்காக அந்த ஆண்டவனுக்கு நன்றி சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன்.

ஸ்டூடியோவில் பட்டுக்கோட்டையார் எழுதிய ஒரு பாடலைப் பாடிவிட்டு வெளியே வருவேன். காரில் வீட்டிற்குத் திரும்பிக் கொண்டிருப்பேன். வீதியிலிருக்கும் ஒரு கல்யாண மண்டபத்திலி ருந்து பட்டுக்கோட்டையார் பாடலில் எனது குரல் ஒலிக்கும். மாலையில் எங்காவது வெளியில் செல்வேன். முச்சந்தியில் ஒரு அர சியல் கூட்டம் நடத்துவதற்கு முஸ்தீபுகள் நடந்துகொண்டிருக்கும். அங்கிருக்கும் மைக்செட்டில் பட்டுக்கோட்டையார் எழுதி நான் பாடிய பாடல் ஒலித்துக் கொண்டிருக்கும்.

அது போன்றே கல்யாணம், கச்சேரி, கூட்டம், மாநாடு என்று எல்லா இடங்களிலும் பட்டுக்கோட்டையார் எழுதிய பாடல்கள் என்னுடைய கம்பீரமான குரலில் ஒலித்துக் கொண்டிருந்தது. இப்போதும் அதைக் கேட்கலாம்....எப்போதும் கேட்கலாம்.

படிப்பகம்

padippakam



## ௯௯

**'திருடாதே பாப்பா திருடாதே'**

**'சின்னப் பயலே சின்னப்பயலே செய்தி கேளடா'**

**'தூங்காதே தம்பி தூஙஙிகாதே'**

**'குறுக்கு வழியில் வாழ்வு தேடிடும் குருட்டு உலகமடா'**

**'தாயத்தோ தாயத்து'**

போன்ற பாடல்கள் எல்லாம் எனக்குப் பாடல்களாகத் தெரிய வில்லை, காலத்தால் அழியாத காவியங்களாகத் தெரிகின்றன" என்று நினைத்து நெகிழ்கிறார் பாடகர். டி.எம்.சௌந்தரராஜன்.

### மூன்று சொற்சிற்பிகளில் ஒருவன்

**–ஸ்டாலின் குணசேகரன்**

"கவிஞன் என்பவன் காலத்தின் நன்கொடையாக சமூகத்திற்கு கிட்டுகிறான். 'கவிதை' என்பது அத்தகைய கவிஞர்களின் ஞான ப் பரிசாக நாட்டிற்குக் கிடைக்கிறது.

மனிதனின் உள்ளத்தில் அமிழ்ந்து கிடக்கிற உள்ளுணர்விற்கு ஒரு சிற்பத்தைப்போல சொல் வடிவம் கொடுத்து அதனை சமூகத்தின் ஆக்கத்திற்குப் பயன்பட எழுதப்படுவதுதான் 'கவிதை'.

படிப்பகம்

padippakam



வள்ளுவன், கம்பன், இளங்கோ, என்கிற கவிதை இலக்கியத்தின் சிகரங்கள் வாழ்ந்த நாடு நம் தங்கத் தமிழ் நாடு. பாரதி, பாரதிதாசன், பட்டுக்கோட்டை என்கிற 'ப'வரிசைப் பரம்பரை இந்த சமுதாய அமைப்பைத் தலைகீழாக மாற்றி அமைக்கத் தோன்றிய சொற் சிப்பிகள் இவர்கள் தமிழ்க் கவிதை இலக்கியத்திற்கே இலக்கணம் வகுத்தவர்கள்.

இதில் பாரதி வாழ்ந்த காலம் வெள்ளைப் பரங்கியன் நம் சொந்த சகோதரர்களை கொள்ளை கொண்டு போய்க்கொண்டிருந்த காலம், எதிரி இவன்தான் என்பதை இனம் காட்டி அவனுக்கெதிராக மகத்தான மக்கள் யுத்தத்தை மகாத்மாக்கள் நடத்திக்கொண்டிருந்த நேரம். சோவியத் புரட்சிக்காலத்தில் லெனினுக்கு ஒரு கார்க்கியைப் போல இங்கு காந்திக்கு ஒரு பாரதி.

சுதந்திர இந்தியாவில் வெள்ளையன் வெளியேறி சொந்த நாட்டில் சுதேசித் தலைவர்கள் ஆட்சியை அலங்கரித்ததும் சாதி, மதம், கடவுள், பெண் அடிமைத்தனம், ஆதிக்கம், உழைப்பு சுரண்டல், இவையும் இவைகளுக்குண்டான மானுடத்தை நசுக்குகிற குணங்களும் வெளிப்பட்ட காலத்தில் வெகுண்டெழுந்த வீரத் தமிழ்க் கவிதான் புரட்சிக்கவி பாரதிதாசன்.

தமிழார்வமும், கவியார்வமும் இயல்பாகவும் இயற்கையாகவும் தன்னகத்தே பெற்றிருந்த மக்கள் கவிஞன் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் பாரதிதாசனிடம் சிலகாலம் பயிற்சி எடுத்த இளம் புரட்சிக்கவிஞன்.

பாரதியை புதிய வெளிச்சத்திற்கு அறிமுகப்படுத்திய தமிழகத்தின் சிவப்புச் சூரியன் ஜீவாவின் இதய நாடியாக திகழ்ந்த இளந் தமிழ்க்கவிஞன் பட்டுக்கோட்டை பாரதியை நன்கு தெரிந்திருந்தும் பாரதிதாசனை முழுக்கப் புரிந்திருந்தும் ஜீவா என்ற ஒரு மகத்தான மனிதன் தன் அருகிலிருக்கும் 'தன் நிலை' மாறாத தமிழ்க்கவிஞனாக பட்டுக்கோட்டை விளங்கியது இவனது தனிச்சிறப்பு.

படிப்பகம்

padippakam



இவனுக்கு முன்பு தமிழ் கூறும் நல்லுலகில் செம்மாந்து நின்ற செந்தமிழ்க் கவிஞர்களான பாரதி, பாரதிதாசன் வழியில் பட்டுக் கோட்டை நின்றவன் என்கின்ற போதிலும் பக்தி இலக்கியங்களையும் தவிர்த்து இனம்-மொழி என்ற சின்ன சிமிழிக்குள் தன் சிறகை சிக்க வைத்துக் கொள்வதையும் விடுத்து அவர்களின் பரிணாமமாகத் திகழ்கின்றான் பட்டுக்கோட்டை.

கல்வி அறிவுள்ளவர்கள், இலக்கிய ஆர்வலர்கள், சமூக வியலாளர்கள் போன்றோரை பாரதியும் பாரதிதாசனும் சென்ற டைந்து சிறப்புற்றனர். ஆனால் பட்டுக்கோட்டை அவன் வாழ்ந்த காலசூழ்நிலைக்கு ஏற்ப பாமர மக்களையும் தன் திரைப்படப் பாடல்களின் மூலம் சென்றடைந்தான்.

தன்னுடைய கவிதைகளைத்தானே கவியரங்கங்களில் பாடி மக்களை கேட்க வைப்பது ஒரு ரகம். ஆனால் பட்டுக்கோட்டை தன்னுடைய கவிதைகளை மக்கள் பாட அதைதான் கேட்கின்ற பாக்கியம் பெற்றவன் . ஆம்...

**'திருடாதே! பாப்பா திருடாதே!**
**வறுமை நிலைக்கு பயந்துவிடாதே!'**

படிப்பகம்

padippakam



100

என்ற பாடலை தெரியாதவர் இருக்க முடியுமா?

**'தூங்காதே தம்பி தூங்காதே-நீயும்**

**சோம்பேறி என்ற பெயர் வாங்காதே'**

என்ற பாடலைக்கேட்டு தூக்கம் கலைந்து துள்ளி எழாதவர்கள் தான் இருக்க முடியுமா?"

**'சின்னப் பயலே சின்னப்பயலே சேதிகேளடா'**

என்ற பாடல் தாய்மையின் மேன்மையையும் தன்மான உணர்ச்சி யையும் பொதுவாக ஒரு மனிதன் மனிதனாக வாழ்வதற்கான இலக்கணத்தைப் படைத்த பாடல் அல்லவா?

எளிமை இவனுக்கு எங்கிருந்துதான் எட்டியதோ? ஒவ்வொரு பாடல் வரிகளும் இதற்கு மேல் எளிமையாக இருக்கமுடியாது என்பதைப் போன்ற ஒரு உணர்வைத் தோற்றுவிக்கும். அவ்வளவு எளிமை -அவனைப் போலவே" என்று எடைபோட்டு மிகச்சரியாக சொல்கிறார் தமிழறிஞர் த. ஸ்டாலின் குணசேகரன்.

## விஞ்ஞான சாதனையைப் பாடியவன்

"கவிஞரை நினைவு கூறும்போது உடனிருந்த பல நினை வுகள் வருகின்றன. வரப்போகும் புதிய படத்துக்காக கவிஞர் இயற்றிய பாடல்களைக் கவிஞரே பாடுவார். அதன் மெட்டையும்

படிப்பகம்

padippakam



அவரே போடுவார்.

பல தடவைகளிலும் என்னையும் இழுத்து ஒரு டீயும் கொடுத்து உபசரித்து, "அண்ணே! இந்தப்பாட்டு எப்படி இருக்கிறது? உங்கள் கருத்தைச் சொல்லுங்கள்" என்று கூறிவிட்டு கல்யாணசுந்தரம் பாடிக்காட்டுவார். அவரது அண்ணன் கணபதி சுந்தரம் தம்பியின் பாட்டுக்கேற்ப மேசைமீது கையாலேயே தாளம் போடுவார்.

ஆயிரம் இசைக்கருவிகள் இல்லாமலேயே அவர்களுடைய பாட்டும், தாளமும் எவரையும் தலையை ஆட்டச் சொல்லும். கருத்திலே கவனத்தை இழுத்துச் செல்லும். நானும் என்னை மற ந்து கானத்திலும் கருத்திலும் நெஞ்சை பறிகொடுத்து நிற்பேன். எனது கருத்தைக் கேட்பார்கள், ஒரு பாட்டை மிஞ்சி இன்னொரு பாட்டு ஓங்கி நிற்பதால் என்ன சொல்லுவது? "ஆஹா-ஆஹா" என்று மகிழ்ந்து கூத்தாடுவதைத் தவிர..!

1957-ம் ஆண்டிலே சோவியத் விண்கோள் ஒன்று சந்திரனுக்குப் போய் ஆராய்ந்தது இந்தச் செய்தி பத்திரிகைகளில் வந்தவுடனே ஒன்றாக இருந்த கட்சியின் 'ஜனசக்தி' பத்திரிகையின் உதவி ஆசிரியன் என்ற முறையில் சோவியத் சாதனையைப் பாராட்டி பாட்டுப்போட்டுத் தருமாறு அன்றே கல்யாணசுந்தரத்திடம் சென்றோம்.

பாடல்கள் எழுதித்தருமாறு பட முதலாளிகளால் கோடம்பாக்கம் ஸ்டூடியோக்களில் குளுகுளு அறைகளில் அ டைக்கப்பட்டுக் கிடந்த கவிஞரை அன்று அவரது வீட்டில் சந்திக்க முடிந்தது. அது ஒரு அதிர்ஷ்டம்தான்...!

அவரிடம் விஷயத்தை சொல்லி.... "அவசரம் மெஷின் நிற்குது உங்கள் பாட்டுக்காக என்றேன்". "என்ன விஷயம்?" என்று கேட்டார். "இப்படி ரஷ்யாக்காரன் சந்திரனுக்கு ராக்கெட் விட்டுட்டான் எத்தனையோ தகவல்கள் அங்கிருந்து வருது.

padippakam



இவ்வளவுதான் விஷயம், உடனே எழுதுங்கள்" என்றேன். அ வ்வளவுதான்.

**'சந்திரனைத் தொட்டதின்று மனிதசக்தி**
**சரித்திரத்தை மீறியது மனித சக்தி**
**இந்திரன்தான் விண்ணாட்டின் அரசனென்ற**
**இலக்கணத்தை மாற்றியது மனிதசக்தி**
**இந்திரனும் முடியரசாய் இருக்கொணாது**
**எனுங்குறிப்பைக் காட்டியது மனிதசக்தி**
**மந்திரமா? வெறுங்கதையா? இல்லை இல்லை**
**மனிதசக்தி சோவியத்தின் மனிதசக்தி'**

என்ற பாடலை பென்சிலால் ஒரு பழைய பேப்பரில் ஜன்ன லில் வைத்து எழுதிக் கொடுத்தார். படித்தேன்... "போதுமாண்ணே" என்று கேட்டார்.

"இப்போது போதும். அருமையாக இருக்கு" என்று கூறிவிட்டு அவசர அவசரமாக அலுவலகத்துக்கு ஓடோடி வந்தேன், அ ச்சுக் குக் கொடுத்தேன், அன்றே அவரது பாடல் அச்சாகி வெளிவந்தது" என்று மக்கள் கவிஞரின் காலத்தை வெல்லும்

படிப்பகம்

padippakam



கவித்திறனை சொல்கிறார் விடுதலை வீரர் மாயாண்டி பாரதி.

## பட்டுக்கோட்டையார் சில தகவல்கள்

1930-ஏப்ரல் 13-ம் நாள் தஞ்சை மாவட்டம் பட்டுக்கோட்டை வட்டம் 'சங்கம் படைத்தான் காடு' என்ற சிற்றூரில் எஸ்.ஆர். அருணாசலம்-விசாலாட்சி தம்பதிக்கு இரண்டாவது மகனாக கல்யாண சுந்தரம் பிறந்தார். கவிஞரின் தந்தையும் அண்ணன் கணபதி சுந்தரமும் கவிஞர்கள். வேதம்மாள் என்ற சகோதரியும் கவிஞருக்கு உண்டு.

மக்கள் கவிஞர், அண்ணன் கணபதி சுந்தரம், அம்மைநாதன் ஆகியோர் எழுதிய சுயமரியாதை இயக்கப் பாடல்களை சிறு வயதில் மேடைகளில் பாடிவந்தார்.

எட்டு வயதில் 'நல்லதை சொன்னா நாத்திகனா?' என்று தாம் எழுதிய பாடலை அண்ணனிடம் பாடிக்காட்டி பாராட்டுப் பெற்றார்.



படிப்பகம்

padippakam



கவிஞர் 'குயில்' பத்திரிகையில் சிறிது காலம் பணியாற்றினார்.

பாவேந்தர்மீது பற்றும் பாசமும் கொண்டிருந்ததால், ஒவ்வொரு பாடல் எழுதும்போதும் 'வாழ்க பாரதிதாசன்' என்று எழுதிவிட்டு பாடல் எழுதுவதை தம் இறுதிக்காலம் வரை கடைபிடித்தார். அவருடைய லெட்டர் ஹெட்டிலும் வாழ்க பாரதிதாசன் என்று அச்சிட்டார்.

1954 ஆகஸ்ட் முதல் தேதி திண்டுக்கல் காந்தி மைதானத்தில் தமிழ்நாடு விவசாய சங்க மாநாட்டை ஒட்டி 'கண்ணின் மணிகள்' நாடகம் அரங்கேற்றி பாராட்டைப் பெற்றது. இந்த நாடகத்தில் பாடல் எழுதியதோடு போலீஸ்காரராகவும் நடித்தார் பட்டுக் கோட்டை. இந்த நாடகத்திற்குத் தலைமை வகித்து பேசிய தோழர் ஜீவானந்தம்,"மக்கள் கவிஞருக்குரிய தரஉயர்வு பட்டுக்கோட்டையார் பாடல்களில் ஒலிவிடுகின்றது" என்று கூறினார்.

1954-ல் தொடங்கப்பட்ட 'படித்த பெண்' என்ற திரைப்படம்தான் பட்டுக்கோட்டையார் பாடல் எழுதிய முதல் திரைப்படம். ஆனால் இந்த படத்திற்குப்பின் ஆரம்பிக்கப்பட்ட 'மகேஸ்வரி' பட்டுக்கோட்டையார் பாடல் எழுதிவெளிவந்த முதல் படம் என்ற பெருமையை பெற்றது.

சேலம் மாடர்ன் தியேட்டர்ஸ் தயாரித்து, மெல்லிசை மன்னர்கள் விஸ்வநாதன்-ராமமூர்த்தி, இசையில் 'பாசவலை' என்ற திரைப் படத்திற்கு பட்டுக்கோட்டையார் எழுதிய பாடல்கள் அவருக்கு பெரும் புகழைத் தேடித்தந்த முதல் திரைப்படம்.

11957 காலை 9 மணிக்கு பட்டுக்கோட்டையாருக்கும் ஆத்திக் கோட்டை கோவிந்த வேளாளர் மகள் கௌரவாம்பாளுக்கும் பாவேந்தர் பாரதிதாசன் தலைமையில் திருமணம் நடந்தது.

கவிஞருக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்தது. அந்தக்குழந்தைக்கு குமாரவேல் என்று பெயரிட்டனர்.

16.8.1959 அன்று கோவை முற்போக்கு மன்றங்கள் சார்பில் ஸ்டேன்ஸ் மில்க் கல்யாண மண்டபத்தில், டி.கே. பாலசந்தருக்கும், பட்டுக்கோட்டையாருக்கும் முறையே, 'மக்கள் கலைஞர்', 'மக்கள் கவிஞர்' பட்டத்தை வழங்கினர்.

படிப்பகம்

padippakam



*திடீர் நோயினால் பாதிக்கப்பட்டு மூக்கின் வழியே ரத்தம் சிந்தி, பட்டுக்கோட்டையார் 1959-ம் ஆண்டு அக்டோபர் 8-ம் நாள் மாலை 3.45-க்கு சென்னை பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் திடீரென காலமானார்.*

*பேராசிரியர் சாலமன் பாப்பையா எழுதி 'பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் ஒரு பார்வை' என்ற தலைப்பில் 1979 மார்ச்சில் வெளிவந்த நூலே பட்டுக்கோட்டையாரைப்பற்றிய முதல் ஆய்வு நூல்.*

*1995-ம் ஆண்டு டாக்டர் ஜெயலலிதா முதல்வராக இருந்தபோது பட்டுக்கோட்டையார் பாடல்களை நாட்டுடமையாக்கினார்.*

*அமரர் பி. ரத்தினம் பிள்ளையை தலைவராகவும், கே. ஜீவபாரதியை செயலாளராகவும் கொண்ட பட்டுக்கோட்டையார் சிலை அமைப்புக் குழு 13.4.95 அன்று பட்டுக்கோட்டை நகரத்தில் மணிக்கூண்டுக்கு அருகில் பட்டுக்கோட்டையாரின் முழு உருவ வெண்கல சிலையை நிறுவியது. இதுதான் தமிழகத்தில் பட்டுக்கோட்டையாருக்கு செய்த முதல் நினைவுச் சின்னமாகும்.*

*பட்டுக்கோட்டையாரின் பாடல்களையும் கவிதைகளையும் காலவாரியாக தொகுத்து, அவருடைய கையெழுத்துப் பிரதியில் உள்ள வெளிவராத பாடல்களையும் இணைத்து, திரைப்படத்தில் பயன்படுத்தியது போக கவிஞரின் கையெழுத்துப் பிரதியில் உள்ள வரிகளை அடிக்குறிப்பாகக் கொடுத்து, ஒரு முழுமையான நூலாக 'பட்டுக்கோட்டையார் பாடல்கள்' என்ற தலைப்பில் கே. ஜீவாபாரதி தொகுத்து 1997-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் வெளிவந்த நூலே பட்டுக்கோட்டையாரின் பாடல்களை காலவாரியாக தொகுக்கப்பட்ட முதல் நூலாகும்.*

## நன்றி

- கவிஞர் ஜே. ஜீவபாரதி தொகுத்த 'மலரும் நினைவுகளில் மக்கள் கவிஞர்' (கற்பகம் புத்தகாலயம் வெளியீடு).
- 'காலம் அறிந்து கூவிய சேவல்' (கற்பகம்).
- எழுத்தாளர் ஜெயகாந்தன்

படிப்பகம்

padippakam

படிப்பகம்

padippakam

படிப்பகம்

padippakam

படிப்பகம்

padippakam



'குமுதம்', 'குங்குமம்', 'ராணி', 'கல்கி' போன்ற முன்னணி இதழ்களின் வாயிலாக பரவலாக அறியப்பட்டவர் சபீதாஜோசப். தமது இருபது வருட பத்திரிகைத் துறை அனுபவத்தை பயனுள்ள நூல்களாக எழுதி வருகிறார். 'பெரியார் 100', 'அண்ணா 100', 'காமராஜர் 100', 'கலைஞர் 100' எனும் 100 வரிசையில் வாழ்க்கை வரலாற்றை புதிய கோணத்தில் எழுதி புகழ் பெற்றவர்.

தற்போது இன்னொரு புதிய கோணத்தில் எழுதியிருக்கும் நூல்கள்தான் 'மகாத்மா மாணவர்களுக்கு சொன்னது', 'அப்துல்கலாம் மாணவர்களுக்குச் சொன்னது', 'பெரியார் மாணவர்களுக்குச் சொன்னது', 'அண்ணா மாணவர்களுக்குச் சொன்னது' எனும் வரிசையில் நூல்கள் எழுதியிருக்கிறார். மாணவர்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் தரும் நூல்களாக இவை இருக்கும் என்பது கலப்பில்லாத உண்மை.

நமது நக்கீரன் பதிப்பகத்தில் மட்டும் சுமார் 75-க்கும் மேற்பட்ட நூல்களை எழுதியிருக்கும் இவரது முயற்சியும் உழைப்பும் பாராட்டுக்குரியது.

-பதிப்பகத்தார்

6.90

ISBN: 978-93-81020-02-9

படிப்பகம்